
# இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள்



கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1648

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1648
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

# இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள்

## வரலாற்று நிலைப்பட்ட கதைகளின் தொகுதி

கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள்
எழுதியது: சின்னத்தம்பி சந்திரசேரகம் ©
முதற்பதிப்பு: 2020
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி.அஞ்சல்: **kumbhlk@gmail.com**
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026
குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Sri Lankan Tamil Folklore
by Sinnathamby Santhirasegaram ©
First Edition: 2020
Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vada¼alani, Chennai - 600 026
Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: **# 868**

ISBN : 978-955-659-680-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சமர்ப்பணம்***

நாட்டார் வழக்காறுகளை குழந்தை முதல் ஊட்டிய
எனது தாய் வாலலெட்சுமி (சாரதா)
அவர்களுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பாரம்பரிய மரபுரிமை அம்சங்களைப் பாதுகாத்து வரும் உலக நிறுவனங்களில் ஒன்றான யுனஸ்கோ தனது அண்மைக்காலத் தீர்மானங்களில் உலகில் அழிவடைந்து வரும் அல்லது மறைந்து வரும் வரலாற்றுக் கதைகள், வாய்மொழிச் செய்திகள், நாட்டுப்புறப் பாடல்கள், பாரம்பரிய இசை, நடனம், நாடகம், இலக்கியம், கூத்துக்கள், பழமொழிகள் முதலான தொட்டுணர முடியாத மரபுரிமை அம்சங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதைக் காணமுடிகின்றது. இதன் விளைவால் உலக நாடுகள் பலவற்றில் வாய்மொழி வழக்காறுகளை ஆதாரங்களாகக் கொண்ட சமூக வரலாறு பற்றிய ஆய்வுகள் புத்துயிர் பெற்று வருகின்றன. ஆயினும் இலங்கையில் அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழரிடம் இவ்வகை ஆய்வு முயற்சிகள் அதிகம் வளரவில்லை என்ற குறைபாடே இருந்து வருகின்றது. இந்நிலையில் கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம் அவர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் தனது கள ஆய்வின் மூலம் ஆவணப்படுத்தியுள்ள 71 வாய்மொழிக் கதைகளை மூன்று இயல்களுக்குள் அடக்கி அவற்றை 'இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருப்பது எனக்கு மிகுந்த மனமகிழ்வைத் தருகின்றது.

ஒரு நாட்டின் அல்லது ஒரு வட்டாரத்தின் வரலாற்றை மீள் உருவாக்கம் செய்யும் ஆய்வாளர்கள் அதற்கு வரலாற்று இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்து ஆவணங்கள் என்பவற்றையே முதன்மைச் சான்றுகளாகப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வகை ஆய்வுகள் சமகால ஆட்சியாளர்கள், அரச வம்சங்கள், ஆளும் வர்க்கங்கள் என்போரின் வரலாற்றையும், வாழ்வியல் கோலங்களையும் வெளிச்சம் போட்டுக்காட்டும் அளவிற்கு சாதாரண மக்களின் வரலாற்றையோ, அவர்களின் சமூக வாழ்வியலையோ வெளிக்கொணரத் தவறிவிடுகின்றன. இதனால் சமூகம் சார்ந்த வரலாற்றை நாம் அச்சமூகத்தில் இருந்தே தேடவேண்டியுள்ளது. இதற்கு நாட்டார் வரலாற்றுக் கதைகளையும், நாட்டுப்புறப் பாடல்களையும் முதன்மைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகளாகக் கொள்ளவேண்டியுள்ளது. இவை சார்புநிலைப்பட்டவை. ஆனாலும் அவை ஆழமான, நுட்பமான வரலாற்றுத் தரவுகளையும், கருத்துக்களையும் கொண்டுள்ளன. அதனால்தான் சமூகவியலாளர் வரலாற்றுக் கதையை வரலாற்று இலக்கியமாகவும், வாய்மொழிப் பாடகரை வரலாற்று ஆசிரியராகவும் பார்க்கவேண்டும் எனக் கூறுகின்றனர்.

கலாநிதி சந்திரசேகரம் கிழக்கிலங்கையுடன் மலையகம், வடஇலங்கை ஆகிய பிராந்தியங்களில் களஆய்வுகளின் மூலம் ஆவணப்படுத்தியுள்ள வரலாற்றுக் கதைகளையும் தனது ஆய்வில் பயன்படுத்தியிருந்தாலும் அவரது ஆய்வின் மையப்புள்ளியாக கிழக்கிலங்கை அதிலும் சிறப்பாக மட்டக்களப்பு மாவட்டமே காணப்படுகின்றது. இவை வட்டார அடிப்படையில் மட்டக்களப்பின் சமூக வரலாறு, சமூகப் பிரிவுகள், சாதிக் கட்டமைப்பு, சாதிப் பிரிவுகளிடையே ஏற்பட்ட திருமணங்கள், சாதிப் பிரிவுகளை அடையாளப்படுத்தும் தொழில் பிரிவுகள், சமய வேறுபாடுகள், தனித்துவமான வழிபாட்டு மரபுகள், சடங்குகள், அரசியல் நிலை, தனிமனித ஆதிக்கம் என்பவற்றை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இந்த உண்மைகளை கலாநிதி சந்திரசேகரம் கோயில் சார்ந்த கதைகள், அரசியல் சார்ந்த கதைகள், ஊர்கள்- ஊர்ச்சம்பவங்கள், தனிமனிதர்கள் பற்றிய கதைகள் என்பவற்றின் ஊடாக பொருத்தமான ஆய்வு நெறிமுறைக்குள் இருந்து வெளிப்படுத்தியிருக்கும் ஆய்வுப்போக்கும், அணுகுமுறையும் பாராட்டுக்கு உரியன.

கலாநிதி சந்திரசேகரம் வட்டார வழக்கிலுள்ள வாய்மொழி வரலாற்றுக் கதைகளின் ஊடாக பல புதிய செய்திகளைக் கூறியுள்ளார். இவை கிழக்கிலங்கையின் சமூக, பண்பாட்டு வரலாறு பற்றி இதுவரை சொல்லப்படாத அரிய வரலாற்றுத் தகவல்களாக உள்ளன. வாய்மொழிக் கதைகளை கதை கூறியவர்களின் மொழி நடையில் பதிவுசெய்து அவற்றிற்கு சமகால மொழிநடையில் விளக்கமளித்திருப்பதன் மூலம் கிழக்கிலங்கையின் பன்முகப்பட்ட எதிர்கால ஆய்வுகளுக்கும் அத்திவாரமிட்டுள்ளார். இக்கதைகளில் வரும் ஆலயங்கள் தற்போது எங்குள்ளன என்பதை சரிவர அடையாளப்படுத்தி அவ்வாலயங்களின் ஆரம்பகால, சமகாலப் பெயர்கள், அவை தோன்றியதற்கான வரலாற்றுப் பின்னணி, அவற்றைத் தோற்றுவித்த சமூகப் பிரிவுகள் அல்லது சாதிப் பிரிவுகள், அவர்களுக்கிடையே ஏற்பட்ட திருமணக் கலப்பால் உருவான புதிய சமூக, சாதிப்பிரிவுகள், அவர்களால் வழிபடப்பட்ட வேறுபட்ட பெயர் கொண்ட தெய்வங்கள், வழிபாட்டு மரபுகள், வேண்டுதல்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள், சடங்குகள், அவ்வாலயங்களின் தற்போதைய நிலைகள் தொடர்பான ஆழமான ஆய்வுகளும், பன்முகப் பார்வையும் நூலாசிரியரின் ஆழ்ந்த புலமையை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

வாய்மொழிக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் என்பன வரலாற்று ஆய்வில் சார்புநிலைப்பட்டவையாகவே பார்க்கப்படுகின்றன. ஏனெனில் அக்கதைகளில், பாடல்களில் மிகைப்படுத்தல், திரிபுகள், கதை பேணுபவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், இனமத உணர்வுகள், பக்கச்சார்பு என்பவை செல்வாக்குச் செலுத்த இடமுண்டு. ஆயினும் அக்கதைகளிலும், பாடல்களிலும் பல வரலாற்று உண்மைகளும் அடங்கியுள்ளதை மறுப்பதற்கில்லை. அந்த உண்மைகளைக் கண்டறியவும், உறுதிப்படுத்தவும் வாய்மொழிக் கதைகள், பாடல்களுடன் நம்பகத் தன்மையுடைய சமகால வரலாற்று இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், தொல்பொருள் ஆதாரங்கள் என்பவற்றை இணைத்துப் பார்ப்பது அவசியமாகும். அவ்வாறு பார்ப்பதன் மூலம் ஒரு வட்டாரத்தில் வாழ்ந்து வரும் பலதரப்பட்ட மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாட்டு அம்சங்களின் பாரம்பரிய வரலாற்று உண்மைகளை வரலாற்று வெளிச்சத்திற்கு கொண்டுவரலாம். அவற்றின் அவசியத்தைப் பல இடங்களில் வலியுறுத்தியுள்ள இந்நூலாசிரியர் அவ்வாறு பார்க்கப்படவேண்டிய வரலாற்றுத் தகவல்களை தன்னால் ஆவணப்படுத்தியுள்ள வாய்மொழிக் கதைகளில் இருந்து எடுத்துக் கூறியுள்ளமையை இந்நூலாசிரியரின் மிகப்பெரிய பணியாகவும், சாதனையாகவும் பார்க்கின்றேன்.

கிழக்கிலங்கையில் ஏற்பட்ட பூர்வீக குடியேற்றங்கள், ஆலயங்களின் தோற்றம், சமூக உருவாக்கம் என்பன பற்றிக் கூறும் வாய்மொழிக் கதைகள் அவை பெரும்பாலும் பிற இடங்களுடனான அல்லது அயல் நாடுகளுடனான கடல்வழித் தொடர்பால் அல்லது கடற்கரையோரங்களில் கரையொதிங்கிய கடற்கலங்களில் வந்தவர்களால் ஏற்பட்டதாகவே கூறுகின்றன. இக்கதைகள் மகாவம்சம் கூறும் விஜயன் குவேனி, யாழ்ப்பாண வைபவமாலை கூறும் உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லி, தென்கிழக்காசியாவில் நிலவும் கௌடில்லியன் சோமா போன்ற கதைகளை நினைவுபடுத்துவதாக உள்ளன. இந்நாடுகளில் செவிவழியாகப் பேணப்பட்ட இக்கதைகளே பிற்காலத்தில் வரலாற்று இலக்கியங்களாக உருப்பெற்று இன்று இலங்கை, தென்கிழக்காசியா போன்ற நாடுகளின் பூர்வீக குடியேற்றங்கள், அரசுகளின் தோற்றம், நாகரிக உருவாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன பற்றிய ஆய்வுகளுக்கு மூல ஆதாரங்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் கிழக்கிலங்கையின் வாய்மொழிக் கதைகளில் இவற்றின் சாயல்கள் காணப்பட்டாலும் அவை கூறும் புதிய குடியேற்றங்கள், சமூக உருவாக்கம், சாதிக்கட்டமைப்புக்கள், ஆலயங்கள், சமய வழிபாட்டு மரபுகள் என்பவை கிழக்கிலங்கை மண்ணோடொட்டிய பாரம்பரிய வரலாற்றைப் பிரதிபலிப்பனவாகவே காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றிற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு இருக்கலாம். உதாரணமாக வாய்மொழிக் கதைகளில் வரும் நாக மரபுக்கும், ஆலய நிர்வாகம் சார்ந்த வண்ணக்கன் என்ற பெயருக்கும் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு இருப்பதை அண்மைக் காலத்தில் கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மட்பாண்டச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. மேலும் வாய்மொழிக் கதைகளில் வரும் அல்லிராணி ஆட்சி பற்றிய கதை கிழக்கிலங்கையில் மட்டுமன்றி வடஇலங்கையிலும், தமிழகத்தின் பல இடங்களிலும் காணப்படுகின்றன. இவற்றின் தோற்றம் தமிழகத்தில் இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனப் பிற ஆதாரங்கள் கொண்டு உறுதிப்படுத்தி வருகின்றனர். இந்த உண்மைகள், கிழக் கிலங்கையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தொல்லியல் ஆய்வுகள் இந்நூலாசிரியர் குறிப்பிடும் வாய்மொழிக் கதைகளில் வரும் வரலாற்றுக் குறிப்புக்கள் பலவற்றை உறுதிப்படுத்தலாம் என எதிர்பார்க்கலாம்.

கலாநிதி சந்திரசேகரம் குறிப்பிடும் வாய்மொழிக் கதைகளில் வரும் சில வரலாற்றுச் சம்பவங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இலங்கை வரலாற்றில் நடந்த உண்மைச் சம்பவங்களுடன் தொடர்புடையவை. இவை தொடர்பான சில செய்திகள் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும், கோணேஸ்வரர் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இதனால் இவ்வாய்மொழிக் கதைகளை கிழக்கிலங்கையின் அரசியல், சமூக வரலாறு பற்றிய ஆய்வுகளில் இருந்து புறந்தள்ள முடியாது. இதற்கு உதாரணமாக கண்டி அரசிற்கும் கிழக்கிலங்கைக்கும், 13ஆம் நூற்றாண்டில் பொலநறுவையில் ஆட்சி செய்த கலிங்கமாகனுக்கும் கிழக்கிலங்கைக்கும், வடஇலங்கை வன்னிச் சிற்றரசர்களுக்கும் கிழக்கிலங்கை வன்னி அரசு களுக்கும் இடையே நிலவிய அரசியல், சமய, சமூக உறவுகளைக் குறிப்பிடலாம். அவற்றுள் வரலாற்று இலக்கியங்களில், கோணேஸ்வரர் கல்வெட்டில் சொல்லப்படாத அரிய பல வரலாற்றுச் செய்திகளை வாய்மொழிக் கதைகளில் இருந்து ஆய்வாளர் எடுத்துக் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் அவற்றின் உண்மைத் தன்மைகள் கண்டறிய வேண்டிய பொறுப்பையும் புலமையுடைய சமூக, வரலாற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நூலாசிரியர் வாய்மொழிக் கதைகளில் இருந்து கிழக்கிலங்கையின் புவிசார் நிலைகள், துறைமுகங்கள், பாதைகள், நகரங்கள், ஊர்கள், கிராமங்கள், குளங்கள், ஆறுகள், வயல் நிலங்கள், வழிபாட்டு ஆலயங்கள், புதிய குடியிருப்புகள் முதலியவற்றின் பெயர்களை கதை சொல்லிய வர்களின் மொழியிலும், தற்கால மொழியிலும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அண்மையில் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தை முதுகலைமாணிப் பட்டத்திற்காக ஆய்வு செய்த கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு.எஸ்.கே. சிவகணேசன் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் இருந்து கிழக்கிலங்கையில் வழக்கிலிருந்த பல இடப்பெயர்களை எடுத்து ஆராய்ந்துள்ளார். இப்பெயர்களை வாய்மொழிக் கதைகளில் வரும் பெயர்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தால் கிழக்கிலங்கையின் இடப்பெயர்கள் தோன்றி வளர்ந்த வரலாறு மட்டுமன்றி கால ஒழுங்கில் அப்பெயர்கள் மொழி வழக்காலும், பண்பாட்டு மாற்றத்தாலும் மாற்றமடைந்ததற்கான காரணங்களையும், அவற்றின் தொன்மையினையும் அடையாளம் காணமுடியும். இந்த நூலில் பலரையும் கவரக்கூடிய அம்சமாக கதைகளைக் கூறியவர்களின் மொழிநடையில் அக்கதைகளைப் பதிவுசெய்திருப்பதைப் பார்க்கின்றேன். அவற்றில் வரும் சில சொற்கள், தனிநபர் பெயர்கள், இடப்பெயர்கள் பிராகிருதமயப்படுத்தப்பட்ட தமிழாகக் காணப்படுகின்றன. அண்மையில் கிழக்கிலங்கையிலுள்ள பிராமிக் கல்வெட்டுகள் பற்றி முதுகலைமாணிப் பட்டத்திற்கு ஆய்வு செய்த கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கௌரி லக்சுமிகாந்தன் அவர்கள் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் தமிழ் மொழியையும், பிராகிருத மயப்படுத்தப்பட்ட தமிழ் மொழியையும் ஆதாரங்களாகக் கொண்டு கிழக்கிலங்கையில் தமிழ் பௌத்தமும் இருந்ததென்ற முடிவை முன்வைத்துள்ளார். அந்த முடிவை கிழக்கிலங்கை வாய்மொழிக் கதைகளும் உறுதிப்படுத்துவதாகக் கருதுகின்றேன்.

மொத்தத்தில் இந்த நூல் கிழக்கிலங்கையின் பாரம்பரிய வரலாற்றிற்கு அதிலும் குறிப்பாக சமூக வரலாற்றிற்குப் புதுவெளிச்சமூட்டுவதாகப் பார்க்கின்றேன். பல துறை சார்ந்த எதிர்கால ஆய்வுகளுக்கு இந்நூல் ஒரு தொடக்கப் புள்ளியாகவும், அத்திவாரமாகவும் உள்ளது. இந்நூலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்திருக்கும் கலாநிதி சந்திரசேகரம் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மொழித்துறையில் வளர்ந்து வரும் இளம் ஆய்வாளரில் ஒருவர் என்பதை அவரது ஆய்வுப் படைப்புக்களில் இருந்து அறிவேன். அதன் இன்னொரு புதிய படைப்பாக இந்நூலைப் பார்க்கின்றேன். இப்படைப்பில் தன் மாணவர்களையும் இணைத்திருப்பது நல்ல சகுனமாகத் தோன்றுகின்றது. அவரது ஆய்வுப் பணிகள் மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிரேஸ்ட பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்**
தலைவர், வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கைத் தமிழர்களின் வரலாற்று எழுதுகையில் பலவீனங்களும் முரண்நிலைகளும் உள்ளன. ஒருபுறம் இலங்கைத் தமிழர்களின் வரலாறு திரிபுபடுத்தப்படும் வரலாறாகக் கட்டமைக்கப்படுகின்றது. மற்றொருபுறம் புலமையாளர்களால் எழுதப்பட்ட வரலாறுகள் மேட்டிமைப் பண்புசார் வரலாறாகவும், எழுத்தாவணங்களை மையப்படுத்திய வரலாறாகவும் அமைந்துள்ளன. அவை சாதாரண மக்கள் மத்தியில் வழக்கிலுள்ள வாய்மொழி ஆவணங்களையும் சமூக நினைவுகளையும் வரலாற்று ஆவணங்களாகக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. கல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலான எழுத்துநிலை ஆவணங்கள் மேலாதிக்கச் சக்தி களைச் சார்ந்தவையாக அமைந்துள்ளமையால் அவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வுகள் பொதுமக்கள்சார் சமூக வரலாற்றை உள்வாங்காதவையாக அமைந்தன. இந்த நிலை தொடர்வதனால் பெரும்பாலான வாய்மொழி ஆவணங்கள் அழிவடைந்து போயுள்ளன.

ஆகவே, இலங்கைத் தமிழர்களின் வரலாற்று எழுதுகையினுள் சமூக வரலாறும் இணைக்கப்பட வேண்டும்; அந்த வரலாற்றைப் பதிவுசெய்து வைத்துள்ள வாய்மொழி ஆவணங்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும். இந்நிலையில் சமகாலத்தில் சாதாரண மக்களை மையப்படுத்திய மாற்று வரலாற்றை எழுதுகின்ற புதிய போக்கு மேலை நாடுகளில் மட்டுமன்றி இந்தியாவிலும் முனைப்புப் பெற்றுள்ளமை பற்றிக் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அந்தவகையில் புதிய வரலாறு (New History), சாமானியர் வரலாறு (Gross roots History), அடித்தள மக்கள் வரலாறு (Subaltern Studies), விளிம்புநிலையினர் வரலாறு (History of Maginals) என்ற வரலாற்றுப் புலங்கள் உருவாகியுள்ளன.

இந்த வரலாற்றுப் புலங்கள் 'அடித்தளத்திலிருந்து வரலாறு' என்ற வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்தன. இந்த அணுகுமுறையின் தாக்கம் காரணமாக 1980 களின் தொடக்கத்தில் அடித்தள மக்களின் வரலாற்றாய்வு என்ற புதிய கருத்தாக்கம் உருவானது. முக்கியமாக அடித்தள மக்கள் ஆய்வு என்ற ஒரு வரலாற்றுக் கருத்துப் பள்ளியை ரணஜித் குகா முதலியோர் உருவாக்கினர். இந்த அடித்தள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பற்றிய ஆய்வு உருவாகிய சூழலில் நாட்டார் வழக்கியல் கூறுகளை வரலாற்று ஆதாரங்களாகப் பயன்படுத்தும் முறை ஒரு கோட்பாடாகவும் முறையியலாகவும் வளர்ந்தது. நாட்டார் வழக்கியல் ஊடான வரலாறு என்பது வரலாற்றை உருவாக்கப் பயன்படும் ஒரு முறையியலாக அமைந்தது. இது வரலாற்று ஆவணப்படுத்தலில் நவீன யுக்தியாக அமைந்தது.

இந்த அடித்தள மக்கள் ஆய்வு என்ற புலம் வரலாற்று எழுதியலில் கவனிக்கப்படாத மக்களின் வரலாற்றை உருவாக்க முனைந்தது. இதன் பயனாக நாட்டார் வழக்காறுகளை சான்றுகளாகக் கொண்ட சமூக வரலாற்றை உருவாக்கும் பணிகள் முனைப்புற்றன. ஏனெனில் சாதாரண மக்களை மையமாகக் கொள்ளும் வரலாற்று எழுதியலுக்கான அடிப்படைச் சான்றுகளில் நாட்டார் வழக்காறுகள் மிகவும் இன்றியமையாதவையாக அமைந்தன.

ஒரு சமூகத்தின் தொன்மை, தொழில், பண்பாடு ஆகியன பற்றிய தரவுகளை நாட்டார் வழக்காறுகள் கொண்டுள்ளன. ஓர் இனத்தின் நாட்டார் வழக்காறுகளிலும் பழக்க வழக்கங்கள், புழங்கு பொருட்களிலும் அதன் சமூக பண்பாட்டு வரலாற்றுக்கான சான்றுகள் காணப்படுகின்றன. ஹாப்ஸ்பாம் என்ற சமூக வரலாற்றறிஞர் சமூக வரலாற்றின் ஆய்வுக்குரிய அம்சங்களில் வர்க்கங்களும் சமூகக் குழுக்களும், மனப்பாங்கு குறித்த வரலாறு, சமூகங்களின் மாற்றம், சமூக இயக்கங்களும் சமூக எதிர்ப்பு நிகழ்வுகளும் ஆகியவற்றைக் குறிப்பிடுவார் (மேற்கோள்: சிவசுப்பிரமணியம், ஆ.,2016:ix).

அதேவேளை வாய்மொழி வழக்காறுகளை வரலாற்றுக்கான ஆதாரங்களாகக் கொள்ளும்போது கடைப்பிடிக்கவேண்டிய முறையியல் பற்றியும் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஒரு ஆவணத்தில் இருந்து தகவல்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றை ஆய்வுக்குட்படுத்திப் பயன்படுத்த வேண்டும் என்பதை அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

வாய்மொழி வழக்காறுகள் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களிடம் உருவாகி அவர்களிடையே வழங்கி வருவனவாக உள்ளதால் சாதி, சமயம், வட்டாரம், தொழில் ஆகியவற்றின் தாக்கம் அவற்றிலே அழுத்தம் பெற்றிருக்க வாய்ப்பு அதிகம். அவற்றை உருவாக்கியோரின் தற்சார்பையும் உலகக் கண்ணோட்டத்தையும் புரிந்துகொள்ளாமல் அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துவது எமது புரிதல்களில் தவறுதலை ஏற்படுத்தும். மரபுவழி வரலாற்று வரைவில் எவ்வாறு பல்வேறு சான்றுகளையும் ஒன்றுடனொன்று பொருத்திப் பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறோமோ அதேபோன்று வாய்மொழிச் சான்றுகளையும் பயன்படுத்த முடியும். எழுத்து வடிவிலான ஆவணங்களுடன் மட்டுமன்றி நாட்டார் வழக்காற்றியலின் பல்வேறு வகைகளுடனும் அவற்றைப் பொருத்தியும் ஒப்பிட்டும் பார்த்து சில முடிவுகளுக்கு வரமுடியும் என்று ஆ.சிவசுப்பிரமணியன் கூறுவார் (2008:24,29).

வாய்மொழித் தரவுகளை வரலாற்றுக்குப் பயன்படுத்தும்போது அவற்றை விமர்சனத்துடனும் ஒப்பியல் அணுகுமுறையின் அடிப்படையிலும் பயன்படுத்த வேண்டும் என்பதை அவர் கூறுகின்றார். சிலபோது ஒரு வாய்மொழி மரபின் சமூக வரலாற்று அம்சத்தை ஆதாரப்படுத்துவதற்கு வேறு எழுத்தாவணங்களோ, தொல்லியல் சான்றுகளோ இல்லாத சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். அவ்வாறான நிலையில் குறித்த சமூக நிகழ்வு பற்றிப் பேசும் வேறு வாய்மொழி வடிவங்களையும் சமூக நினைவுகளையும் ஒப்பியல் நோக்கில் பார்த்து உண்மையைக் காண முனைவது அவசியமாகும்.

ஜான் வன்சினா (Jan Vansina) என்பவர் Oral Tradition – A Study in Historical Methodology என்ற பிரபலமானதொரு நூலை எழுதினார். அந்நூலிலே வாய்மொழி மரபின் பல்வேறு வகைகளதும் வரலாற்றியல் தன்மையினை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அவற்றின் வரலாற்றியல் தன்மை பற்றி அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

''வாய்மொழி மரபுகளிலிருந்து பெறக்கூடிய வரலாற்றுச் செய்திகள் பற்றி முதலில் கவனத்தில் கொள்ளவேண்டியது என்னவெனில் அவை மரபின் வழக்காற்று வகைமைக்கேற்ப வேறுபடும். மற்றும் அவையெல்லாம் ஒரு குறிப்பிட்ட முறையில் வரலாற்றுச் சார்புடையவை. அவற்றிற்கென்று சில குறிப்பிட்ட எல்லைகள் இருந்தாலும் பழமை பற்றிய சில குறிப்பிட்ட இயல்புகள் பற்றிய தகவல்களைத் தருகின்றன என்றவகையில் பயன்பாடு மிக்கனவாகக் காணப்படுகின்றன. வாய்மொழி மரபிலிருந்து பெறக் கூடுமாக இருக்கின்ற தகவல்களுக்கு ஓர் எல்லையுண்டு. அதனை வரலாற்று ஆசிரியன் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அதாவது வாய்மொழி மரபுகளை மட்டும் கொண்டு வரலாற்றை எழுதாமல் எழுத்து மூல ஆவணங்கள், தொல்லியல் ஆய்வு, பண்பாட்டு வரலாறு, மொழியியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் கூற்று மானிடவியல் முதலான ஏனைய வரலாற்றுப் புலங்கள் சார்ந்த தகவல்களின் துணைகொண்டும் அதனை எழுத வேண்டும்'' (Vansina. Jan,1960:182).

வாய்மொழி மரபுகளில் பொதிந்திருக்கின்ற வரலாற்றுச் செய்திகளை ஏனைய புலங்கள் சார்ந்த தகவல்களுடனும் ஒப்பிட்டு அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்ய வேண்டும் என்பதை அவர் எடுத்துக் காட்டுகின்றார். இதனையே கோந்த்ரதோவ் என்பவரும் வேறொரு வகையில் கூறுகின்றார்:

''பல்வேறு மக்கட் பகுதியினரிடையே வழங்கிய புராணக் கதைகள், கிராமியக் கதைகள், கற்பனைக் கதைகள் இவற்றிலிருந்து கற்பனை, பொய் இவற்றை நீக்கி வடித்தெடுப்போமானால் காலத்தை மறைத்து நிற்கும் திரை ஊடே வரலாற்று நிகழ்ச்சிகளைக் காணமுடியும்'' (மேற்கோள்: சிவசுப்பிரமணியன், ஆ.,2008:16) என்பார்.

நாட்டார் வழக்காறுகளை சான்றுகளாகக் கொண்டு சமூக வரலாற்றை எழுதும் போக்கு வளர்ந்துகொண்டு வருகின்றபோதும் ஈழத்திலே இத்துறையில் போதுமான அளவு அக்கறை செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. பெரும்பாலான எமது வரலாற்றறிஞர்கள் வாய்மொழி வழக்காறுகளையோ சமூக நினைவுகளையோ வரலாற்றுக்கான சான்று களாகக் கொள்வதைப் புறக்கணித்தே வந்துள்ளார்கள்.

கிராமியப் பண்பாட்டையும் கிராமிய வாழ்க்கை முறைகளையும் மிகுதியாகக் கொண்டிருக்கும் எமது மக்களின் வரலாற்றை மேலடுக்கு மக்களால் உருவாக்கப்பட்ட எழுத்துநிலை ஆவணங்களால் மட்டும் எழுத முடியாது. அவர்களின் சமூக வரலாற்றை எழுதுவதற்கு நாட்டார் வழக்காறுகளும் அவர்களது சமூக நினைவுகளுமே அடிப்படை ஆவணங்களாக அமைய முடியும்.

அந்தவகையில் இலங்கைத் தமிழர்களின் சமூக வரலாற்றை எழுதுவதற்கான வாய்மொழி ஆவணங்களின் ஒருசிறு பகுதியின் தொகுதியாகவே இந்நூல் வெளிவருகின்றது. நாட்டார் வழக்காறுகளிலே வரலாற்றுத் தகவல்களை அதிகம் உட்கொண்டுள்ள வகைமையாக நாட்டார் கதைகள் விளங்குகின்றன. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொண்ட களஆய்வின் மூலம் சேகரித்த 71 கதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வழங்கும் தமிழ் நாட்டார் கதைகளை சமூகக் கதைகள், ஊர்ப்பெயர் பற்றிய கதைகள், அரச கதைகள், தெய்வ - கோயில் கதைகள், பாலுணர்ச்சிக் கதைகள், பேய்கள் - ஆவிகள் பற்றிய கதைகள், அற்புத மாயாஜாலக் கதைகள், மிருகங்கள் - பறவைகள் பற்றிய கதைகள், இதிகாச - புராணக் கதைகள் என்று வகைப்படுத்தலாம். இவற்றிலே முதல் நான்கு வகைக் கதைகளிலே பெரும்பாலும் சமூக, சமய, அரசியல் வரலாற்று அம்சங்கள் இடம்பெறுகின்றன. பெரும்பாலும் புனைவுகளதும் உண்மை நிகழ்வுகளதும் கலவையாக அமையும் இந்தக் கதைகளிலே சில வரலாற்றை வெளிப்படையாகக் கூறுவன. சில புனைவுநிலைப்பட்டதாக மேலோட்டமாகத் தெரியினும் உள்ளார்ந்த ரீதியில் வரலாற்றைத் தருபவை.

நாட்டார் வழக்காறுகளிலே பரவலாகப் பேசப்படுகின்ற ஒரு விடயம் வட்டார நிலைப்பட்ட சமூக வரலாற்று அம்சங்களாகும். அந்தவகையில் இத்தொகுதியில் உள்ள பல கதைகள் ஊரின், கோயில்களின், குழுமங்களின், சாதிகளின், சாதிய உட்பிரிவுகளின் உற்பத்தி பற்றி அதிகம் பேசுகின்றன. சில கதைகள் உள்ளூர் அரசியல் செயற்பாடுகள் பற்றியும் தனிமனிதர்கள் பற்றியும் பேசுகின்றன.

இந்த வட்டார வரலாற்றில் சனவேற்ற வரலாறும் அதனூடான மக்களின் சமூக பண்பாட்டு வரலாறும் முக்கியமானவை. குறிப்பாகக் கிழக்கிலங்கையிலுள்ள பல பாரம்பரியமான கிராமங்களின் சனவேற்ற மானது சாதியுடனும் கோயிலுடனும் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பது பொது அம்சமாகும். இதைப் பல கதைகள் பிரதி பலிக்கின்றன. இந்த மதநிலைப்பட்ட கதைகள் சமூக உருவாக்கம் பற்றியனவாகவும் அமைந்துள்ளன. கிராம சமூக அமைப்பைப் பொறுத்தவரை சமூக வரலாற்றையும் சமய வரலாற்றையும் பிரித்துப் பார்க்க முடியாது என்பதற்கு இக்கதைகள் எடுத்துக்காட்டுக்களாகும்.

அரசியல் பற்றிய கதைகள் குறிப்பிட்ட காலகட்ட உள்ளூர் அரசியல் சூழல்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றன. இவற்றில் சில கதைகள் கண்டி மன்னர் ஆட்சியின் கீழ் கிழக்கிலங்கை இருந்தபோதான அரசியல் சூழலைப் பதிவுசெய்துள்ளன. சில கதைகள் அந்நியர் ஆட்சிக்காலத்திலும், இனப்போர் இடம்பெற்ற காலத்திலும் மக்கள் எதிர்கொண்ட அரசியல் அழுத்தங்களையும் அதற்கெதிரான தம் மனவுணர்வுகளையும் வெளிப்படுத்துவன. ஈழத்திலே போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சி நடைபெற்றபோது பொதுமக்கள் சமூக வாழ்விலும் பண்பாட்டிலும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளை எதிர்நோக்கினர். இந்நிலையில் மக்கள் தம் எதிர்ப் புணர்வினை வெளிப்படுத்தினர் என்பதற்கு கோயில்களை மையப்படுத்திய சில வாய்மொழிக் கதைகள் சான்றுகளாகும். இத்தகைய கதைகள் காலனிய ஆட்சிக் காலத்தில் மக்களின் மனோபாவங்களையும் அவ்வாட்சிக்கு எதிரான அவர்களின் மறைமுக எதிர்ப்புணர்வுகளையும் காட்டுகின்றன.

எவ்வாறாயினும் இத்தொகுதியில் உள்ள கதைகளைப் பொருளடிப் படையில் கறாராகப் பிரிப்பதிலே சிக்கல்கள் உள்ளன. ஏனெனில், ஒன்று மற்றொன்றுடன் தொடர்புபட்ட நிலையில் பல கதைகள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, கோயில் உருவாக்கம் பற்றிய கதைகள் குறித்த பிரதே சத்தின் வரலாற்றுடனும், மக்கள் குழுமங்களது குடியேற்றங்களுடனும், சாதிகளின் உருவாக்கத்துடனும் தொடர்புபட்டவையாக அமைந்துள்ளன. சில அரசியல் பற்றிய கதைகளும் கோயில் உருவாக்கம், சாதிக்குழும வரவு, சாதி உருவாக்கம் என்பவற்றுடன் தொடர்புபட்டவையாகவும் உள்ளன. இருந்தபோதும் இத்தொகுதியில் மையக் கருப்பொருளின் அடிப்படையில் கோயில் சார்ந்த கதைகள், அரசியல் சார்ந்த கதைகள், ஊர்கள்- ஊர்ச்சம்பவங்கள், தனிமனிதர் பற்றிய கதைகள் என்ற மூன்று வகைப்பாட்டின் அடிப்படையில் வாய்மொழிக் கதைகள் தொகுக்கப் பட்டுள்ளன.

இக்கதைகளெல்லாம் தகவலாளிகளால் கூறப்பட்ட மொழியிலேயே தொகுக்கப்பட்டுள்ளன. அக்கதைகளை விளங்கிக்கொள்வதற்கான பின்னணித் தகவல்களும் விளக்கக் குறிப்பாகத் தரப்பட்டுள்ளன. பல கதைகளும் மாற்று வடிவங்களைக் கொண்டிருந்தன. இது நாட்டார் வழக்கியல் கூறுகளின் முக்கிய இயல்பாகும். எனினும் மிகவும் வேறுபாடான வகையில் அமைந்த மாற்று வடிவங்கள் மட்டுமே இத்தொகுப்பில் தரப்பட்டுள்ளன. கதைகளிலுள்ள பிரதேச வழக்குச் சொற்களுக்கான விளக்கங்கள் பின்னிணைப்பு 2 இல் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன.

தொகுதியிலுள்ள அனைத்துக் கதைகளும் களஆய்வின்மூலம் திரட்டப்பட்டவை. சில கதைகளைத் திரட்டுவதற்கு மாணவர்கள், நண்பர்களும் துணைபுரிந்தனர். அந்தவகையில் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச் சிறப்பு மூன்றாம் வருட (2015/2016) மாணவிகளான இ.அனுசியா, க.சிவானியா, S.தேவமலர், சு. சரணியா, அ.கிருசாந்தி, த. பிரதீபா, கனுசியா, வ. கஸ்தூரி, ஞா. சுதர்சுயா, அ.சிவரூபினி, சூ. கிருஸ்ணானந்தி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரா ஆகியோருக்கும், ஆறுமுகம் கோடீஸ்வரன் (கதை - 6, 15, 16, 39, 57: மொழித்துறைச் சேகரிப்பிலுள்ளவை), கலாநிதி முருகு தயாநிதி, ஓசாநிதி, ச. கோகிலவாணி ஆகிய நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அத்தோடு இந்த நூலுக்குக் காத்திரமான அணிந்துரையினை வழங்கிய மதிப்புக்குரிய பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் ஆகிவர்களுக்கும், சரவை பார்ப்பது முதலான பணிகளில் எனக்குத் துணையாக இருந்த திரு த. மேகராசா, இந்நூலை வெளியிட முன்வந்த குமரன் அச்சகத்தார் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**சின்னத்தம்பி சந்திரசேகரம்,**
**110/3, கண்ணகி அம்மன் கோயில் வீதி,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | v |
| முன்னுரை | xi |
| 1. கோயில் சார்ந்த கதைகள் | 1 |
| 2. அரசியல் சார்ந்த கதைகள் | 48 |
| 3. ஊர்கள்- ஊர்ச்சம்பவங்கள், தனிமனிதர் பற்றிய கதைகள் | 66 |
| உசாத்துணை நூல்கள் | 79 |
| பின்னிணைப்பு - 1 | 80 |
| பின்னிணைப்பு - 2 | 86 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# கோயில் சார்ந்த கதைகள்

## 1. மண்டூர் முருகன் கோயில் உருவான கதை

முருகனால் ஏவப்பட்ட தங்கவேலின் ஒரு கிள மண்டூர்ல தில்ல மரமொண்டில வந்து பாஞ்சி இருந்ததாம். அந்தக்காலத்தில அப்பகுதியில வாழ்ந்த வேடுவ ஆக்கள் ஒருநாள் அதக் கண்டு, அதுக்குக் கொத்துப் பந்தல் போட்டு வணங்கி வந்தாங்க. அப்படி வணங்கிவாறப்போ அவ்விடத்துக்கு முன்னால் இருந்த வாவிக் கரையில துறநீலாவணையில இருந்து மீன்புடிக்க வாற சீர்பாதக்கார ஆக்கள் கரையேறித் தங்கட வலைகளக் காயவெக்கிறதும் களப்பாறுறதும் வழக்கம். ஒருநாள் அவங்க களப்பாறினப்போ சில வேட ஆக்கள் நடமாடுறதக் கண்டாங்க. புறகு அவ்விடத்த போய்ப் பாத்தப்ப சில வேடாக்கள் கொத்துப் பந்தல கட்டி கும்பிடுறதக் கண்டு தாங்களும் கும்புட்டாங்க. புறகு அவங்களோட இணஞ்சி வழிபாடு செய்ய விரும்பி தாங்க கொண்டுவந்த வல, தோணி சாமான் எல்லாத்தயும் மடுத்தோண்டிப் புதச்சிப்போட்டு வழிபாடு செஞ்சி வந்தாங்க. அவங்க புறகு முருகன்ட அந்த வேல் மேல எழும்பிப் போயிடாம அதத் தில்லமரத்தில இருந்த மாதிரியே தேனும் சுண்ணாம்பும் சேத்துக் கோயிலாகக் கட்டி பூச செஞ்சி வந்தாங்க. அதுதான் இப்ப மூலத்தானமாக இரிக்கி. அதுக்குள்ள ஆரும் போக ஏலா. அந்த வேல ஒரு நாகம் காவல் காத்துக்கொண்டு இருக்காம். இப்பவும் சீர்பாதக்கார ஆக்களே பூச செஞ்சி வாறாங்க. சீர்பாதக்காரச் சாதியில சிந்தாத்திர குடியச் சேந்தவங்களே முதலாங் கப்புகனாராக வரலாம்.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்பிலே இருந்து தென்புறமாக சுமார் 30 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள பழங்கிராமம் மண்டூராகும். இங்கு அமைந்துள்ள முருகன் ஆலயம் கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுவது. மட்டக்களப்புக் கடலில் இருந்து ஊடறுத்துச் செல்லும் வாவியின் (மட்டக்களப்பு வாவி) கரையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இந்த ஊரில் ஆரம்ப காலங்களில் வேடுவ இன மக்கள் வாழ்ந்ததாகப் பல வாய்மொழித் தகவல்கள் கூறுகின்றன. இதற்கு ஆதாரமாக இன்றும் அவர்களின் வழி வந்தவர்கள் 'வேடர்குடி' என்ற சாதிக் குழுமமாக இங்கு வாழ்ந்து வருகின்றனர்.இவ்வாலயத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் என்ற அடிப்படையில் இவர்களுக்கு ஆலயப் பணிப்பகுப்பில் குறிப்பிட்ட கடமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆலயத் திருவிழா முடிந்து மூன்றாம் நாள் நிகழ்த்தப்பெறும் அடுக்குச் சடங்கு என்ற சடங்கை (வேடர் சடங்கு) இவர்களே செய்து வருகின்றனர்.

இந்த ஆலயத்தை மையப்படுத்தி இக்கிராமத்திலே குடியேறிய ஆரம்ப சாதிக் குழுமங்களில் ஒன்றாக சீர்பாதர் சாதியினர் உள்ளனர். சீர்பாதம் மட்டக்களப்பு உயர் சாதிகளில் ஒன்றாகக் கருதப்படுவது. இவர்கள் ஆரம்ப காலங்களில் வாழ்ந்த கிராமங்களில் ஒன்று துறைநீலாவணையாகும். துறைநீலாவணை மண்டூர் முருகன் கோயிலின் முன்பாக வாவிக்கரையில் நின்று தென்கிழக்குப் பக்கமாகப் பார்த்தால் சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தொலைவில் மறுகரையில் அமைந்துள்ளது. இப்பிரதேச மக்கள் ஆரம்பகாலங்களில் மீன்பிடித் தொழில் புரிந்ததாக கியூம் கூறுவார் (மேற்கோள்: சிவராம், டி., 2004: 68).

## 2. மண்டூருக்கு வெள்ளாளர் வந்த கதை (வடிவம் -1)

மண்டூர் முருகன் கோயிலக் கட்டிப் பூசைசெய்துவந்த கப்புக வம்சத்தாக்கள் அந்தக் கோயிலச் சிறப்பாக நடத்துறதுக்கு வெள்ளாளரக் கொண்டுவர விரும்பினாங்க. அவங்க வெள்ளாளர்கள் வசிக்கிற களுவாஞ்சிகுடிக்குப் போய் வெள்ளாள ஆக்கள் சிலர அனுப்பக் கேக்கவும் அதுக்கு தாங்க ஏக்கனவே போரதீவு, கொக்கட்டிச்சோல ஆகிய இடங்களுக்குப் போயிட்டதால அனுப்புறதுக்கு ஆளில்ல எண்டு சொன்னாங்க. அதுக்குப் புறகு திருக்கோயில் கோரக்களப்பு எண்ட இடத்துக்குப் போய் கொஞ்ச வெள்ளாள ஆக்கள அனுப்பச் சொல்லிக் கேக்கவும் அவங்கள் ஒரு கவுத்தன் குடி வேளாள குடும்பத்த மட்டுந்தான் அனுப்பினாங்க. அவங்கள மண்டூரில ஒரு வளவில குடியேத்தி புங்கடி வெளியில் 40 ஏக்கர் விசால வெள்ளாம செய்யிற காணியும் குடுத்தாங்க. அவங்களக் குடியேத்தின வளவுதான் இப்ப ஆர். கே. எம். பொம்புளப் பள்ளி (இராமகிருஷ்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பாடசாலை) இரிக்கி. அந்தக் குடும்பத்துப் பொண்ணுக்கு 3 பொம்புளைகளும் 3 ஆம்புளைகளும் புறந்தாங்க. மூத்த பொண் மண்டூருல வெள்ளாள ஆள் ஒருவரக் களியாணம் கட்டித்து அங்க வாழ்ந்தாவு. அவக்கு 8 புள்ளைகள் பொறந்தாங்க. ரெண்டாவது பொண் பழுகாமத்தச் சேந்த வேளாள சாதி ஆணத் திருமணம் செஞ்சி அங்க சீவிச்சாங்க. அவவுக்கு 7 புள்ளைகள் பொறந்தாங்க. மூண்டாவது பொண்ணுக்குப் புள்ளைகள் இல்ல. மூத்தவவின் பரம்பர ஆக்கள் மண்டூர் வகுத்துவார். ரெண்டாம் பொண்ணின் பரம்பரையினர் பழுகாமத்து வகுத்துவார்.[1] இவங்கட 15 புள்ளைகளுக்கும் 1/8, 1/7 எண்ட அடிப்படையில 40 ஏக்கர் காணியும் செய்கை பண்ணப் புறிச்சிக் கொடுக்கப்பட்டது. இவங்க இப்ப வரயிலயும் இந்தக் காணிய சுழச்சி முறயில செஞ்சித்து வாறாங்க.

**விளக்கக் குறிப்பு**

மண்டூர் முருகன் கோயிலை மையப்படுத்தி அங்கு ஆரம்ப காலங்களில் குடியேறிய சாதிக் குழுமங்களில் ஒன்றாக வேளாளர் உள்ளனர். இக்கிராமத்தில் வேளாளரும், சீர்பாதக்காரருமே அதிகம் வாழ்கின்றனர். இவர்களே இந்த ஆலயப் பணியில் முன்னவராய் விளங்குகின்றனர். வேளாளர் மட்டக்களப்பில் ஆரம்பகாலங்களில் வாழ்ந்த கிராமங்களில் ஒன்றாகத் திருக்கோயில் கருதப்படுகின்றது. இக்கிராமம் அம்பாறை மாவட்டத்தின் தென்புற எல்லைக் கிராமமாக அமைந்துள்ளது. திருக்கோயிலுக்குக் தெற்குத் திசையாக அமைந்துள்ள இடமே கோரைக் களப்பாகும். இவ்விடம் திருக்கோயில் விநாயகபுர எல்லையினுள் அடங்கும் களப்புப் பிரதேசமாகும். கவுத்தன்குடி வேளாளர்களே மண்டூர் கோயிலில் வண்ணக்கர் பதவிக்கும் சுவாமி சுமப்பதற்கும் உரித்துடையவர்களாக வகுக்கப்பட்டிருக்கின்றனர். வண்ணக்கர் பதவி என்பது நிர்வாகத் தலைமைப் பதவியாகும்.

1 குறித்த குடியில் இருந்து குறிப்பிட்ட குடும்பவழி உருவான உபபிரிவினரை வகுத்து வார் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மண்டூருக்கு வெள்ளாளர் வந்த கதை (வடிவம் -2)

மண்டூர் முருகன் கோயிலைக் கட்டுவிப்பதற்கு முயற்சி பண்ணிப் பல பகுதிகளுக்கும் சென்று பணம் சம்பாதித்து வந்து கோயிலை உண்டாக்கியவர் தற்போது இக்கோயில் பெரியகப்புக வம்சத்தவர். அந்தக் காலத்தில் இக்கிராமம் காடடர்ந்த பகுதியாகவும் ஒரு சில வேடுவர்களுக்கு உறைவிடமாகவுமே இருந்ததாம். அக்காலம் இப்பகுதி நாதனைப் பகுதி என்னும் பேருடன் வேலப்பு வன்னிமை என்பவரினதும் முற்குகச் சாதியாரதும் ஆதிக்கத்தில் இருந்தது. கப்புக வம்சத்தவர்[2] கோயிலைக் கட்டி முடித்ததும், வழிபடு தெய்வம் கதிர்காமத் தெய்வம் போல் காட்சியளிக்கத் தொடங்கியதும் ஏராளமானோர் வழிபாட்டுக்கு வரத் தொடங்கினர். இது கண்ட கப்புகனார் இக்கோயிலை கொக்கட்டிச் சோலை, கோயில்போரதீவு, களுவாஞ்சிகுடி முதலிய கிராமங்களிலுள்ள கோயில்களைப்போல் கவுத்தன்குடி வேளாளரை முன்னவராய் வைத்து நடத்தவேண்டுமென நினைத்து வேலப்பு வன்னிமையிடம் ஆலோசி த்தார். அப்போ களுவாஞ்சிகுடியில்தான் கவுத்தன்குடி வேளாளர் இருக்கிறார்கள் அவர்களைக் கேட்போமெனத் தீர்ந்து போய்க்கேட்டபோது அவர்கள் மேற்காட்டிய ஊர்களிலுள்ள தான்றோன்றியீசுரர் கோயில், சித்திரவேலாயுத கோயில் முதலியவற்றுக்கே பணியாற்ற ஆட்கள் போதாதிருப்பதால், இக்கோயில் பொறுப்பையும் ஏற்கமுடியாதெனக் கூறினர்.

அதன் பின் வன்னிமையவர்களும், முற்குகப் போடிமாரும் யோசித்து திருக்கோயிலுக்குப் பக்கலாய் கோரைக்களப்பு என்னும் ஊரில், கவுத்தன்குடி வேளாளர் இருப்பதாயறிந்து, அப்பகுதியிலுள்ள முற்குகப் போடிமாருக்கு ஒரு கடிதம் எழுதி, சில வேளாளக் குடும்பத்தை மண்டூர்க் கோயில் பொறுப்பேற்று நடத்துவதற்கு அனுப்பக் கூடுமோவெனக் கேட்டார்கள். அக்கடிதத்துக்கு அப்பகுதியிலுள்ள ஏழு முற்குகப் போடிமார் சேர்ந்து எழுதிய பதில் எப்படியெனில், நாதனையிலிருக்கும், வேலப்பு வன்னிமையவர்கட்கும் அப்பகுதி முற்குகப் போடிமார்களுக்கும் அறியத்தருவது நீங்கள் கேட்டுக்கொண்டபடி மண்டூர்க் கோயிலுக்காக ஒரு வேளாளக் குடும்பத்தை மாத்திரமே அனுப்பலாம், அவர்களுக்குப் பல வசதிகளெல்லாம் செய்துகொடுத்து, வீடுவாசல் காணிபூமிகள் யாவும்

---

2 சீர்பாத குலத்தில் முதலாவது குடியினராகக் கருதப்படும் சிந்தாத்திர குடியினரைப் பெரிய கப்புக வம்சம் என்று கூறுவர். ஏனெனில், இக்குடியினரே மண்டூர் முருகன் கோயிலில் முதலாவது கப்புகனாராக வருவதற்கு உரித்துடையவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து கோயில் கருமங்களை நடத்தும்படி ஒழுங்கு செய்யவும் எழுதப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் அனுப்பப்பட்ட குடும்பத்துக்கு முற்குகப் போடிமாரே, தங்களுக்குரிய புங்கடிவெளி என்னும் நாற்பது ஏக்கர் விசாலமான காணியையும், வேளாளர் குடியிருப்புவளவு எனத் தற்போது பெயர் விளங்கும் வளவையும் கொடுத்து நிலைப்படுத்தி வைத்தார்கள்.

கோரைக்களப்பால் வந்த மனுஷியின் பெயர் குஞ்சிநாச்சி. இவரின் புருஷன் ஒரு செட்டி வேளாளன்[3] (பெயர் தெரியாது). இவர்களுக்குப் பிள்ளைகள் ஆண் 3, பெண் 3. ஆண்கள் 1. கந்தப்போடி 2. கதிராமப்போடி 3. பாலிப்போடி. பெண்கள் 1.கண்ணாத்தை, 2. உமையாத்தை, 3. பாலாத்தை. கண்ணாத்தையை விவாகம் செய்தவர் களுவாஞ்சிகுடியிலுள்ள சிங்களக்குடி[4] வேளாளன் பரசிராமன் என்பவர். 2ஆம் பிள்ளை உமையாத்தையை விவாகஞ் செய்தவர் பழுகாமத்திலுள்ள வைத்தினா குடி[5] வேளாளன் தம்பிப்போடி நொத்தாரிஸ். பரசிராமருக்குப் பிறந்த பிள்ளைகள், நாலு ஆண், நாலு பெண் (8) நொத்தாரிஸ் தம்பிப்போடியின் பிள்ளைகள் ஐந்து பெண், இரண்டு ஆண் (7). இந்த ஐந்து பெண்களில் ஒரு பெண் சின்னாத்தை என்பவவின் மகளின் மகன் ஏகாம்பரபிள்ளை வண்ணக்கர். கண்ணாத்தையின் மகன் - ஆறுமுக வண்ணக்கர், சிதம்பரப் பிள்ளை வண்ணக்கர். இவர்களின் மருமகன் வீரக்குட்டி வண்ணக்கர்.

அக்காலந்தொட்டு புங்கடி வெளி, செம்பர் பள்ளம் என்னும் காணிகளில் வரும் ஊதியத்தை 5ம் திருவிழாச் செலவு நீக்கி மிகுதியை கண்ணாத்தையின் மக்கள் எட்டுப் பேரும் உமையாத்தையின் மக்கள் ஏழு பேரும் பதினைந்து பங்காய்ப் பிரித்துக் கொள்வது. பாலாத்தை என்பவ சந்தானமில்லாமல் இறந்து போனா.

**விளக்கக் குறிப்பு**

இக்கதை முன்னர் கூறிய கதையினை விரிவாகவும் சில ஆதாரங்களோடும் கூறுகின்றது. இக்கதை மண்டூரைச் சேர்ந்த கவுத்தன்குடி வேளாளரான ஏகாம்பரம்பிள்ளை சிதம்பரப்பிள்ளை என்பவரால் 24.9.1932 இல்

---

3 வேளாளரில் உள்ள ஏழு குடிகளில் ஒன்றாக செட்டிகுடி உள்ளது.

4 இவர்கள் குடியாக அன்றித் தனிச்சாதியினராக உள்ளனர். இவர்களைக் கப்புகக் குடி என்றும் கூறுவர். ஏனெனில் இவர்கள் உதவிக் கப்புகனாக இக்கோயிலில் பணியாற்ற உரித்துடையவர்கள். இக்குடியினருடன் வேளாளர் திருமண உறவு வைத்துக் கொள்வது வழக்கமாகும்.

5 வேளாளரில் உள்ள ஏழு குடிகளில் வைத்தினா குடியும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிவைக்கப்பட்டுள்ள கையெழுத்துப் பிரதியொன்றில் இடம்பெறுகின்றது. இந்தத் தகவல்களை அவர் காலஞ்சென்ற தனது மாமனார் சிதம்பரப்பிள்ளை வண்ணக்கு, தம்பிமுத்து விதானை ஆகியோரிடம் கேட்டறிந்த சில சம்பவங்கள் என்று கூறுகின்றார். எனவே, இக்கதையும் வாய்மொழிக் கதையாகவே அமைகின்றது. ஆனால், பல ஆதாரங்களை அது முன்வைத்துள்ளது. பல்வேறு ஆதாரங்களுடன் கூடியதாகவிருந்த வாய்மொழிக் கதை அதன் வாய்மொழிப் பரவுதல் காரணமாக - ஞாபக சக்தி காரணமாக காலவோட்டத்தில் சுருங்கியும் பல ஆதாரங்களை இழந்தும் போய்விடுகின்றது என்பதை இவ்விருகதைகளும் புலப்படுத்துகின்றன. இத்தன்மை வாய்மொழிக் கதைகளின் பொதுவியல்பு எனலாம்.

## 4. விராகமுத்துப் போடி

திருக்கோயிலில் விராகமுத்துப் போடியார் எண்டு ஒரு பெரிய போடியார் இருந்தாரு. மண்டூர் முருகன் கோயிலில அந்தக் கோயிலுக்குச் சொந்தமான வெள்ளாமக் காணிகள ஒவ்வொரு முறயும் குத்தகைக்குக் கூறிக் கொடுப்பாங்க. ஒருமுற விராகமுத்துப் போடியார் மண்டூர் முருகன் கோயிலுக்கு வந்தாப்ப கோயிலில் காணி கூறிக்கொண்டிருந்தாங்க. போடியாரும் வந்து வில வச்சாரு. அப்ப ஒரு கிழவர் விராகமுத்தருக்குப் போட்டியாக வில வெச்சிக்கொண்டிருந்தாரு. பெரிய போடியாக இருந்த விராகமுத்துப் போடியாருக்கே அவரோட போட்டி போட ஏலாம இருந்திக்கி. அப்ப பக்கத்தில இருந்த ஒரு பொடியனுக்குத் தண்ட கையில இருந்த சாமி கோயில் அமுது உருண்டயக் கொடுத்துப்போட்டு மறஞ்சிபோயிட்டார். அப்ப எல்லாருமா திகச்சிப் போய் நிண்டாங்க.

அண்டு இரவு முருகன் மண்டூர்ச் சாமி கோயில் கப்புகனார்ர கனவில தோத்திரமாகி 'என்னோட போட்டி போட்ட வடிவா அவனுக்கே பூமியக் கொடு' எண்டு சொன்னாரு. நித்திரயில இருந்து எழும்பின கப்புகனாரு அப்ப யோசிச்சாரு முருகன் நம்மளச் சோதிக்கத்தான் வந்திருக்கார் எண்டு. புறகு கப்புகனார் விராகமுத்துப் போடியாருக்கு விசயத்தச் சொன்னாரு. அப்ப முருகன் தன்னச் சோதிச்சத்த எண்ணி வியப்பும் சந்தோசமும் கொண்ட போடியார் உகந்தையில இருந்த தன்ட 200 ஏக்கர் வயல் காணிய மண்டூர் முருகன் கோயிலுக்கு எழுதி வச்சாரு. மண்டூர் முருகன் கோயில் ஆக்களக் கூட்டிக்கொண்டு போய் காணிய அவர் எழுதிக் கொடுத்தாரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பழம்பெரும் தமிழ்க்கிராமம் திருக்கோவில். பாரம்பரிய நிலமானிய சமூக அமைப்பையுடையது.

இறைவன் மீது கொண்ட பக்தியின் காரணமாகத் தம் உடைமைகளைக் கோயிலுக்கு வழங்குவது ஒரு மரபாக இருந்து வந்திருக்கின்றது. மண்டூர் முருகன் ஆலயத்துக்கும் காணிகள் உட்படப் பல உடைமைகள் தனி நபர்களால் வழங்கப்பட்டுள்ளன.

கோயிலுக்குச் சொந்தமான நெற்காணிகளை, கடைகளை குத்தகைக்கு விடுவது ஒரு மரபாகும். அதனடிப்படையில் மண்டூர் முருகன் கோயிலுக்குரிய காணிகளையும் குத்தகைக்கு விட்டு அதன் வருமானத்தை கோயில் பணிகளுக்காகச் செலவுசெய்வது மரபாகும்.

## 5. பலாப்பழம் கொண்டு போன கதை

மண்டூரு பிலாப் பழத்துக்குப் பேர் போன இடம். அந்த நேரத்தில மண்டூர் முருகன் கோயிலில பூச செஞ்ச ஒரு கப்புகன் தன்ர வளவுக்குள்ள காச்ச பிலாப்பழத்த ரெண்டா வெட்டி ஒரு பாதிப் பிலாப்பழத்த சாமி கோயில் காலம்புறப் பூசைக்கி வச்சிப் பூச செஞ்சித்து அடுத்த பாதிய எடுத்துத்து கதிர்காம முருகன் கோயிலுக்கு இட வழியால நடயில கொண்டு போவாராம். காலம்புற புறப்பட்டா மத்தியானப் பூசைக்கு அங்க போயிடுவாராம். புறகு கதிர்காமத்தில மத்தியானப் பூச முடிஞ்சதும் அங்கருந்து புறப்பட்டு ராப்பூசைக்கு மண்டூருக்கு வந்திடுவாராம். எப்பிடிப் போற வாற எண்டு தெரியா. அந்தக் காலத்தில மண்டூர் முருகன் கோயிலில பூச செஞ்ச கப்புகன்மாரு இப்பிடிப்பட்ட பத்தி முத்தி உள்ளவங்களாக இருந்திரிக்காங்க. இஞ்ச இருந்து மேக்குப் பக்கமா கண்டிக்குப் போறதுக்கு கண்டி அதர் எண்டு ஒரு வழி இருந்ததாச் செல்றாங்க. அதாலதான் அவரு போய் வந்திருக்கொணும். பிற்காலத்தில கண்டி அதர் காடுகள் மண்டி மூடிப்போயித்தாம்.

**விளக்கக் குறிப்பு**

மண்டூரிலிருந்து தென்புறமாக சுமார் 175 கிலோ மீற்றர் தொலைவிலே கதிர்காமம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு கண்டி மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது கண்டி மன்னருக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகள் கண்டி அதரின் ஊடாகவே இடம்பெற்றதாகக் கூறுவர். கண்டி அதர் பற்றி பல வாய்மொழிக் கதைகளும், தகவல்களும் வழங்குகின்றன. மட்டக்களப்புக் கல்லடிப் பாலம் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட பின்னர் இவ்வழியாக மக்கள் பயணம் செய்வது அருகிப்போக இப்பாதை காடு மண்டி அழிந்துபோய்விட்டதாகக் கூறுவர்.

## 6. சீர்பாததேவி வந்த கதை (வடிவம் 1)

இந்தியாவுல ராசா ஒருவனுக்கு நல்ல வடிவான பொம்புளப் புள்ள ஒண்டு பொறந்திக்கு. ஆனா அதுக்குக் குதிர மொகம். போகாத கோயிலுமில்ல. ஆடாத தீத்தமும் இல்ல. இப்படி இருந்துவாற காலத்தில அவளும் பெரியாளாப் போயித்தாள். ஒரு பக்கத்தாலயும் தீந்தபாடில்ல. அப்ப பெரியாக்களெல்லாம் சென்னாங்களாம் இலங்கையில ஒரு கோயில் இருக்கு. அங்க போய் தீத்தமாடினா சரியாப் போகுமெண்டு. அப்ப ராசா கப்பல் ஒண்டில சாமான் சக்கட்டுகள எல்லாம் ஏத்திப் படைகள், அவைக்கித் தோழிகள் எல்லாத்தையும் அனுப்பினாரு. அப்படிப் போய் கீரி மலையில தீத்தமாட குதிர மொகம் போயித்து. இஞ்சால பாத்திட்டுப் போவம் எண்டு வாற நேரத்தில கடல்ல கப்பல் தட்டித்தாம். ஆங்காலயும் போகுதில்ல இங்காலயும் போகுதில்ல. அப்ப சிந்தன் என்பவன் சுழியோடிப் போய்ப் பாக்கிற நேரம் புள்ளயார் செல ஒண்டு இரிக்காம். அப்ப எல்லாரும் சேந்து எடுத்துக்கொண்டு கப்பல்ல வெச்சிட்டாங்க. அப்ப ராணி சொன்னாவு அந்தக் கப்பல் எங்க தட்டுதோ அங்க கொண்டுவெச்சி ஒரு கோயில் கட்டுவம் எண்டு. இப்படியே மட்டக்களப்பு வாவியால வாற நேரம் வீரமனையில தட்டிச்சாம். அங்க எல்லாத்தையும் எறக்கி, கோயில் கட்டி வந்தாக்களையும் குடியேத்தி ராணிக்கு ஒரு அரண்மனையும் கட்டி இருந்து வாற காலத்தில இவயளோட வந்தாக்கள் சிந்தன், பளையன், காங்கேயன், காலதேவன், மொடவன், வெள்ளாவி போன்ற ஆக்களும் அவயளுக்குச் சேவகம் செய்யிறதுக்கு வண்ணான், பறையன், அம்பட்டன், சாயக்காரன், கொத்தன் ஆக்களும் வாறாங்க. அப்படி வந்த எல்லாரும் குடியேறி இருந்துவாற காலத்தில சிங்கள அரசன் ஒருவன் கேள்விப்பட்டு ராவயில வந்து வந்து போறான். ஒரு நாள் படையன் கண்டு வெட்டப் போகக்குள்ள சிங்கள அரசன் அவன வெட்டிப்போட்டான். இனி அவய இந்தியாவில இருந்து வந்து காடுவெட்டி இருநூறு, முன்னூறு ஏக்கர் பூமி உண்டாக்கி அந்தப் பூமியில அரவாசிக்கு மேல படையன்ட பேரில எழுதிவச்சாங்க. ஏனெண்டா படையன்ட புள்ள குட்டிகளுக்கும் வேணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெண்டு. அதுக்குப் பொறகு சிங்கள அரசனக் கூட்டிவந்து ராணிக்குக் கலியாணம் கட்டிவச்சிப் போட்டு அவய இந்தியாவுக்குப் போயித்தாங்க.

**விளக்கக் குறிப்பு**

வீரமுனை அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் சீர்பாத தேவி கட்டியதாகக் கூறப்படும் பழமை வாய்ந்த சிந்தாத்திரைப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. சீர்பாத குலத்தவர்கள் ஆரம்பகாலத்தில் குடியேறி வாழ்ந்த கிராமமாகக் கொள்ளப்படும் இக்கிராமத்தில் இன்றுவரை அச்சாதியினரே செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் தம்மை சீர்பாத தேவியின் மரபில் வந்தவர்களாகக் கூறுவர். இவர்கள் மத்தியில் சிந்தன், பளையன், காங்கேயன், காலதேவன், மொடவன், வெள்ளாவி, பாட்டுவாழி ஆகிய ஏழு குடிகள் உள்ளன.

## 7. சீர்பாததேவி வந்த கதை (வடிவம் 2)

இந்தியாவச் சேந்த ஒரு ராசாட மகள் சீர்பாத தேவி. சீர்பாத தேவிக்கு குதிரட முகம். ராசா இலங்கையில இருக்கும் திருக்கேதிச்சரத்துக்கு வந்து நீராடினா குதிரமுகம் நீங்கும் எண்டு அறிஞ்சாரு. அதனால தன்ட மகள் சீர்பாத தேவிய திருக்கேதீச்சரத்துக்குக் கப்பலில அனுப்பினாரு. அவவோட சிந்தன், பளயன், காங்கேயன், காலதேவன் எண்ட நாலுபேரயும் அவவுக்கு உதவியாக வெள்ளாவி, நரயாவி எண்ட ரெண்டு பொம்புளைகளயும் கப்பலில ஏத்தி ராசா அனுப்பினாரு. அப்பிடியே சீர்பாததேவி கேதீச்சரத்தில தீத்தமாடின உடனே குதிர முகம் மறஞ்சி வடிவான பொம்புளயா மாறினாவாம்.

அதுக்குப் பொறகு அவங்க இலங்கையச் சுத்திப் பாக்க வரக்குள்ள ஒரு இடத்தில கப்பல் தட்டித்தாம். அப்ப சிந்தன் கடலுக்க இறங்கிப் பாக்கவும் ஒரு புள்ளயார் செல இருக்கிறதக் கண்டு அத எடுத்துக்கொண்டு மேல வந்தான். அப்ப சீர்பாத தேவி சொன்னாவாம் திரும்பவும் இந்தக் கப்பல் எங்க தட்டுதோ அங்க இந்தப் புள்ளயார வெச்சிக் கோயில் கட்டுற எண்டு. அப்பிடியே வரக்குள்ள அந்தக் கப்பல் வீரமுனயில தட்டிக்காம். அப்ப அங்க இறங்கி அந்த ஊரில கூடப்போன ஆக்களயெல்லாம் குடியேத்தினாவு சீர்பாததேவி. அதோட சீர்பாத தேவியின் தகப்பன் இந்தியாவில இருந்து கோயில் கட்டுறதுக்கான சாமான்கள எல்லாம் அனுப்ப சீர்பாத தேவி புள்ளயாருக்குக் கோயிலும் கட்டினாவு. அந்தக் கோலுக்கு சிந்தாத்திரப் புள்ளயார் கோயில் எண்டு பேருவெச்சாங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிடி இருந்துவாற நேரத்துல கண்டி ராசன் சீர்பாத தேவி மேல விருப்பம் கொண்டு அவவிட்ட வந்துபோய்க்கொண்டிருந்தானாம். அத அறியாத பளயன் ஒருநாள் கண்டிராசா வந்து போனதக் கண்டு கண்டிராசனோட சண்டபோட்டான். அப்ப பளயனக் கண்டிராசா வெட்டிக் கொண்டுபோட்டாரு. புறகு கண்டிராசா வீரமுனைக்கி வந்து சிந்தன், பளயன், காங்கேயன், காலதேவன் நாலு பேருக்கும் வெள்ளாமச் செய்யிற பூமிகள எழுதிக் குடுத்தாராம். பளயனத் தான் கொண்டதாலயும் அவனுக்குப் பொம்புளப் புள்ளைகள் கனக்க இருந்ததாலயும் பளயண்ட குடும்பத்துக்கு மத்த ஆக்கள விட 200 ஏக்கர் அதிகமாகக் கொடுத்தானாம். அவனுக்குப் பொம்புளப் புள்ளைகள் கனக்க இருந்தால அவண்ட சந்ததிய பொட்டப்பளச்சி குடி[6] எண்டு அழச்சாங்க.

கொஞ்சக் காலத்துக்குப் பொறகு கண்டி ராசன் வீரமுனைக்கி வந்து சிந்தன், பளயன், காங்கேயன், காலதேவன், வெள்ளாவி, நரயாவி எண்ட ஆறு குடிக்கும் சிந்தாத்திர புள்ளயார் கோயில் திருவிழாவையும் காணிகளையும் புறிச்சிக் குடுத்துப்போட்டு சீர்பாத தேவிய கூட்டிக் கொண்டு பொயித்தான். சீர்பாததேவிர சந்ததியான இந்த சீர்பாத சாதி ஆக்கள் வீரமுனயில இருந்து சீவிச்சி வந்தாங்க. பொறகு துறநீலாவண, மண்டூர், குறுமண்வெளி எண்ட ஊருகளுக்குக் குடியேறிப் போனாங்க.

## 8. வதனமார் வந்த கதை

அந்தக் காலத்தில வதனமார் எண்டு செல்லப்படுற ஆக்கள் இந்தியாவில அயோத்தி எண்ட இடத்தில இருந்து ராமேசுவரத்துக்கு வந்து அங்க இருந்து திருகோணமலைக்கு வந்தாங்களாம். இவங்கட தொழில் குழுமாடுகளயும், மதங்கொண்ட காட்டு ஆனகளயும் துரத்திப் புடிச்சி அடக்கிறதுதானாம். இவங்க அறுபத்திமூணு பேராம். இவங்கட தலைவன் மங்கலனார் எண்றவராம். இவங்க எல்லாரும் கடும் வீரம் கொண்டவங்களாம். ஆனகளப் புடிக்கிறவங்க எண்டாப் பாருங்களன். அவங்க தெய்வ சத்தியும் கொண்டவங்களாம். இவங்களில ஒருவர்ர பேரு காக்கா வதனனாம். அவரு பறக்கும் சத்தி படச்சவராம். அவர்தான் எங்க எங்க குழுமாடுகள், ஆனய்கள் நிக்கிது எண்டு பாத்துவந்து செல்லுவாராம்.

---

6 சீர்பாத சாதியினரில் உள்ள ஏழு குடிகளில் ஒன்றாகப் பொட்டப்பளச்சி குடி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைக்கு வந்த இவங்க புறகு அங்க இருந்து கந்தளாய், கொட்டியாரம், கிளிவெட்டி, தம்பன்கடவ, தம்பலகாமம், பாணம, நாவலூர், நாகமுன, அறுகாமம், எண்ட ஊர்கள்ள இருந்து மாடு ஆன புடிச்சித் தொழில் செஞ்சிப் புறகு சிலர், நாதனை எண்டு அந்தக்காலத்தில செல்லப்பட்ட வெல்லாவெளியில வந்து சீவிச்சாங்களாம். அவங்க இருந்த இடந்தான் கல்லடிப் புள்ளயாரடி. புறகு சிலர் கொக்கட்டிச்சோலைக்குப் போய் மணப்புட்டியிலயும் சீவிச்சாங்களாம்.

அவங்க நாதனயில சீவிச்ச நேரம் ஒருநாள் கிடா மாடுகளத் துரத்திப் புடிக்கக்குள்ள ஒரு பயங்கர கிடாமாடு ஒண்ட அடக்க முடியல்லயாம். அவங்க அத அடக்கின நேரம் அது வதனமாரயெல்லாம் குத்திக் கொண்டுபோட்டுது. அதில காக்கா வதனன் மட்டும் படல்லயாம். அவரு பறந்து திரியிறவருதானே. அப்ப காக்கா வதனன் பறந்துபோய் சுவாதியம் மனிட்ட நடந்ததச் செல்லி அவவக் கூட்டித்து வதனமார் குத்துப்பட்ட இடத்துக்கு வந்தாராம். சுவாதியம்மன் வந்து செத்த வதனமார் எல்லாரயும் எழுப்பிச் சென்னாவாம் நீங்க மேலோகத்துக்கு என்னோட வர ஏலாது. ஏனெண்டா நீங்க எச்சில் பட்டு செத்துத்திங்க. அதனால இங்கயே இருந்து பட்டிக்கெல்லாம் பாலமிர்தம் உண்டுபண்ணி அருள் கொடுத்து இரிக்கணும் எண்டு செல்லிப்போட்டுப் பெயித்தாவாம். அதுக்குப் புறகு பட்டி வெச் சிக்கிறாக்கள் வதனமாருக்குப் படயல் செஞ்சி கும்புட்டு வாறாங்க.

### விளக்கக் குறிப்பு

மட்டக்களப்பிலிருந்து சுமார் இருபத்தைந்து கிலோமீற்றர் தொலைவில் படுவான்கரையில் தென்புறமாக முற்காலத்தில் நாதனை என்று அழைக்கப்பட்ட வெல்லாவெளி அமைந்துள்ளது. கிழக்கிலங்கைச் சடங்கு சார் வழிபாட்டு மரபிலே வதனமார் வழிபாடும் ஒன்றாகும். மாடுகளின் வளம் வேண்டி வதனமார் தெய்வம் வழிபடப்பட்டு வருகின்றது. இச் சடங்கில் பாடப்படுகின்ற 'வதனமார் ஊர்சுற்று காவியம்', 'வதனமார் குழுமாடு கட்டு காவியம்', 'வதனமார் குழுமாடு கட்டு அகவல்','வதனமார் யானை கட்டு அகவல்', 'வதனமார் தேன்வெட்டு காவியம்' ஆகிய சடங்குப்பாடல்களில் வதனமாரின் வரலாறு பற்றிக் கூறப்படுகின்றது. குறிப்பாக, அயோத்தியில் இருந்து கிழக்கிலங்கைக்கு வந்து வீரதீரச் செயல்களைப் புரிந்த வதனமார் தம் தொழிலில் ஈடுபட்டபோது வீரச் சாவைத் தழுவினார்கள் என்பதை 'வதனமார் குழுமாடுகட்டு அகவல்' கூறுகின்றது. இவ்வாறு இவர்கள் இறுதியாக வாழ்ந்து மரணமடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாகவே நாச்சிமார் கல்லடி என்ற வழிபாட்டிடம் கூறப்படுகின்றது. இங்கு அமைந்துள்ள சிறு மலைக் குன்றிலேயே அவர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இந்த மலைக்குக் கீழேயே பட்டிக்காரர் பொங்கிப் படைப்பர்.

## 9. வதனமார் கதை (வடிவம் 1)

வெல்லாவெளியில இருக்கிற நாச்சிமார் கல்லடி எண்டு செல்லப்படுகிற இடத்திலதானாம் முன்ன வதனமார்[7] கடசியாகச் சீவித்து மாண்டாங்க. அவங்க செத்த புறகு அந்த இடத்தில் மாட்டுப் பட்டிக்கார ஆக்கள் பொங்கிப் படச்சி கும்பிட்டுவாற வழக்கமா இருந்து வந்திக்கி. அந்தக் காலத்தில பட்டிக்கார ஆக்கள் பொங்க வரக்குள்ள பான, அரிசி, பழம் கொண்டு வருவாங்களாம். ஆனா பொங்கிறதுக்குப் பால் கொண்டுவர மாட்டாங்களாம். ஏனெண்டா நாச்சிமார் கல்லடியில வதனமார்ர அருளால பொங்கிறதுக்குப் பால் கிடைக்குமாம். பொங்கலுக்குக் கொண்டுவந்த பானய அங்குள்ள மரத்துக்குக் கீழ வச்சிப் போட்டு தள்ளிப் போயிடணுமாம். புறகு கொஞ்ச நேரத்தால வந்து பாத்தா பொங்கிறதுக்கு அளவாகப் பானயில பால் இருக்குமாம். அதுக்குப் புறகு பால எடுத்துப் பொங்கு வாங்களாம். இப்படி இருந்துவாற காலத்தில ஒரு வண்ணான் இந்தப் பால் எப்பிடி வருது எண்டு பாக்க வேணும் எண்டு நினச்சானாம். அவன் ஒருநாள் ஒரு பானயக் கொண்டுவந்து குறிச்ச மரத்தடியில வச்சிப்போட்டு பக்கத்தில இருந்த பத்தைக்குள்ள ஒழிச்சி நிண்டு பாத்துக்கொண்டிருந்தானாம். அப்ப பானயில பால் நிறம்பி வழிஞ்சி கொண்டிருந்ததாம். அப்ப அந்த வண்ணான் தன்ன மறந்து 'போதும் போதும்' எண்டு கத்தினானாம். அதுக்குப் புறகு அவன் வந்து பாத்தபோது பானைக்குள்ள இருந்த பால் இரத்தமாக மாறியிருந்ததாம். அதுக்குப் புறகு அந்த இடத்தில பால் வாறது நிண்டு பொயித்தாம். அதுக்குப் புறகு பொங்க வாற ஆக்கள் பொங்குறதுக்குப் பால் கொண்டு வாறதாம்.

7 கிழக்கிலங்கையில் மாடு வைத்திருப்பவர்கள் (பட்டிக்காரர்) வணங்குகின்ற தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. வதனமார் கதை (வடிவம் 2)

அந்தக் காலத்தில நாச்சியார் கல்லடி எண்டு செல்லப்படுற இந்த இடத்திலதான் வதனமார் சீவிச்சி வந்தாங்க. அங்க இரிக்கிற மலயிலதானாம் அவங்க இருந்த. கடசியில அவங்க மாட்டால குத்துப் பட்டு செத்த வங்களாம். அப்ப இந்த இடம் சிறப்பாக இருந்ததாம். அவங்க செத்த புறகு அவங்களக் கடவுளா நினச்சி பட்டிக்கார ஆக்கள் பொங்கிப் படச்சி வழிபட்டு வந்தாங்க. அங்க வதனமார் வச்சிருந்த மாடு இருந்ததாம். அது தெய்வாதீனமான மாடு. வதனமார்ர அருளால அந்த மாடுதானாம் பொங்கலுக்கான பாலக் கொடுக்குமாம். பொங்க வாற ஆக்கள் பானயக் கொண்டு வச்சா பான நிறய பாலச் சொரிஞ்சி உடுமாம். இப்படியா நடந்துவாற நேரம் ஒரு நாள் அந்தக் கோயிலுக்கு பொங்குறதுக்குப் போனாக்கள் பானயக் கொண்டுபோய் வச்சாங்களாம். மாடு பாலச் சொரியத் தொடங்கியதாம். பான நிறயப் பால் நிறம்பி வடிஞ்சதாம். அதக் கண்ட ஒருவன் போதும் போதும் எண்டு கத்தினானாம். அவன் சென்ன உடனே பானயில இருந்த பாலெல்லாம் இரத்தமாக மாறித்தாம். அண்டயில இருந்து அந்த மாடு பால் சொரிவதே இல்லயாம். மாடும் மறஞ்சிபொயிட்டுதாம். இப்பயும் அங்க வெள்ளிக் கிழமைகளில பெரிய பொங்கல் படச்சி பட்டிக்கார ஆக்கள் வழிபட்டு வாறாங்க.

## 11. சுவாதியம்மன் கோயிலினுள் பிள்ளைகள் அடைபட்டது

வெல்லாவெளியில வயல் ஓரமா கல்லடிப் புள்ளயார் கோயிலொண்டு இரிக்கி. அவ்விடத்தில் பழய காலத்தில் எங்கட அப்பண்ட அப்பனுக்கும் முதல் இந்தக் கோயில் உருவாகிக்கி. அங்க அதிசயமாக நம்ப ஏலாதமாதிரி விசயங்கள் நடந்ததாம். இத இப்ப இரிக்கிற ஆக்கள் நம்பமாட்டாங்க. அப்ப முதல் எல்லாம் வேட ஆக்கள் மான் மரய வேட்டயாடித்தான் வாழ்ந்தாங்க. ஒருநாள் காட்டுவழிய போகக்குள்ள ரெண்டு மல ஒண்டா கிட்டக்கிட்ட இருந்ததாம். அந்த மலைக்குக் கீழ அடியில ஒரு புள்ளயார் சிலயாம். அது தும்பிக்கையோட அப்படியே அந்த மலயோட சேத்த மாதிரி இருந்திச்சாம். வேட்டயாடப்போன வேட ஆக்கள் அங்க போய் அதக் கண்டு இது புள்ளயார் கடவுள், நாம வழிபடணும். அந்தப் புள்ளயாரக் கள்ளனுகள் கொண்டு போகாமப் பாதுகாக்கணும் எண்டு எண்ணிப் புள்ளயாருக்கு பூச செஞ்சி வழிபட்டு வந்தாங்களாம். கொஞ்சக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குப் புறகு மாடுகட்டும் போடிமார்[8] அந்த இடத்தில மாட மேய்க்கும்போது அந்தப் புள்ளயாரக் கண்டு கும்பிட்டாங்களாம். அந்தக் காலத்தில ஒருநாள் திரா புடுங்கப் போன சின்னப் பொம்புளப் புள்ளைகள் ரெண்டுபேர் திரா புடிங்கிட்டு இருக்கக்குள்ள சரியான இடிமின்னலோடயும் காத்தோடயும் மழ பெஞ்சதாம். அப்ப அந்த நேரத்தில கல்லடிப் புள்ளயாருக்குப் பக்கத்தில இருந்த சுவாதியம்மன் மலக் கோயில்ல பூச நடந்துகொண்டிருந்திக்காம். அப்ப அந்தப் புள்ளைகள் ரெண்டு பேரும் ஓடிப்போய் மலைக்குக் கிட்ட நிண்டதுகளாம். புறகு கோயிலுக்குள்ள போய் நிண்டதுகளாம். கோயிலுக்குள்ள வந்து நிண்ட புள்ளைகளக் கவனிக்காத பூசாரியார் பூசய முடிச்சித்து கோயில் கதவ இழுத்து அடச்சிப்போட்டுப் பொயித்தாராம்.

அடபட்ட கதவு அடபட்டதுதான். துறக்கவேயில்ல. புள்ளைகளத் தேடி அதுகளிட தாய், தகப்பன் போனாங்க. புள்ளைகள் வெளிய வரவேயில்ல. அப்ப அந்தக் கல் மலைக்குள்ள இருந்து ஒரு சத்தம் கேட்டிக்கி. ''நீங்க ஆரும் இந்தப் புள்ளைகள நினச்சிக் கவலப்பட வேண்டாம். அவங்க இங்கதான் இரிக்காங்க. நீங்க செய்யவேண்டிய காரியங்கள எல்லாம் செய்ங்க'' எண்டு கேட்டது. அதுக்குப் புறகு அந்த அடபட்ட புள்ளைகள் பெரியாளாகித்தாம். அதுக்குச் சாச்சியா அந்த மலயில ரெத்தக்கற படிஞ்சிருந்திக்காம். புறகு அந்தப் புள்ளைகளுக்குச் செய்யவேண்டிய சடங்குகள எல்லாம் தாய், தகப்பன் அந்த மலைக்கிக் கிட்டயே செஞ்சாங்களாம். அந்தக் கதவத் துறக்கணுமெண்டு எவ்வளவோ மந்திர தந்திரங்களெல்லாம் செஞ்சி பாத்தாங்களாம். அந்தக் கதவு துறக்கவேயில்ல. ஆனா அந்தப் புள்ளைகள் சிரிக்கிற சத்தம், கதைக்கிற சத்தம் எல்லாம் அந்த மலைக்குள்ள இருந்து கேக்கிறதாகச் செல்றாங்க.

**விளக்கக் குறிப்பு**

வெல்லாவெளியில் உள்ள நாச்சிமார் கல்லடியையே கல்லடிப் பிள்ளையார் என்று கூறுவார்கள். நாச்சிமார் கல்லடிக்குப் பக்கத்தில் மற்றுமொரு மலைக்குன்று உள்ளது. இந்த மலையின் ஒரு பக்கத்தில் கதவு அமைப்பில் வெடிப்புப் போல் அமைந்துள்ளது. அதுவே அடைபட்ட சுவாதியம்மன் கதவு என்பது மக்களின் நம்பிக்கையாகும். இவ்விடத்தில் குறிப்பிட்ட நாட்களில் படையல் செய்து வுணக்கம் செலுத்துவது வழக்கமாக உள்ளது.

8 கிழக்கிலங்கை நிலமானிய பொருளாதார அமைப்பில் நிலவுடைமையாளர்களாகவும் சமூக அந்தஸ்துள்ளவர்களாகவும் விளங்கியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. வதனமார் வழிபாடு

சுவாதியம்மனின் 12 பிள்ளைகளே வதனமார். இவங்க கதிரவெளியில வந்து இளப்பாறிய இடத்தில கூடாரம் அமச்சி அப்பருந்து வழிபாடு செஞ்சி வாறாங்க. இந்த வழிபாட்டச் செஞ்சி வாற பூசாரிமார் மருமக்கள் வழி வாறவங்க. குளக்கோட்டு மன்னன் கந்தளாய் குளத்தக் கட்டுறதுக்கு பலி கொடுக்க தன்ட மனவிக்கிட்ட கேக்க அவ மறுத்திட்டா. அப்ப குளக்கோட்டன்ட சகோதரி தன்ர மகள பலி கொடுக்கச் சம்மதிச்சா. புறகு அந்தப் பொண் புள்ளயப் பலி கொடுத்துக் குளமும் கட்டினான். அதனால மருமக்களுக்கு முன்னுரிம கொடுத்து அவங்களுக்கே சொத்துக்கள் போக வேணும் எண்டு சொன்னான். அதன்படி பூசாரிமாரும் அங்க மருமக்கள் வழியேதான் வாறாங்க. ஒரு முற வதனமாருக்குச் சடங்கு செஞ்சி கொண்டிருந்தபோது விளக்க வெக்கிறதுக்கு எண்ண இல்லாமப் பொயித்து. அப்ப பக்கத்தில இருந்த கிறித்தவத் தேவாலயத்தில எண்ண கேட்டுப் போனாங்க. ஆனா அங்கிருந்தவங்க எண்ண இல்ல. வேணுமெண்டா கடல் தண்ணில விளக்க வெய்ங்க எண்டு கூறித்தாங்க. அப்ப அவங்க மனம் உடஞ்சி போயித்தாங்க. அப்ப சாமி வந்து கடல் தண்ணில பயமில்லாம விளக்க வெய்ங்க எண்டு கூறினாரு. அவங்களும் அப்படியே செய்ய விளக்குப் பத்தித்து. இன்றுங்கூட சடங்கு காலத்தில் கடல் தண்ணியக் கொண்டு வந்து விளக்கு வெய்க்கிறாங்க.

**விளக்கக் குறிப்பு**

கதிரவெளி மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமாகும். இது வாகரைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இக்கிராமத்தை அடுத்து வெருகல் ஆறும் வெருகல் கிராமமும் அமைந்துள்ளன. வதனமார் அயோத்தியில் இருந்து திருகோணமலைக்கு வந்து அங்கிருந்து கந்தளாய், வெருகல் வழியாக மட்டக்களப்புக்கு வந்ததாக வதனமார் சடங்குப் பாடல்கள் கூறுகின்றன.

Arasady Public Library
Municipal C
Battic

Class No:
Acc No 1643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. செட்டியாரின் திருப்பணி

அந்தக் காலத்தில கோயில் போரதீவு சித்திரவேலாயுதர் கோயில் கொத்துப் பந்தலாகத்தான் இருந்ததாம். நீண்ட காலமாக நல்ல ஒரு கட்டடம் அதுக்குக் கட்டப்படாதது ஒரு குறயா இருந்ததாம். எனவே முருகப் பெருமான் அந்த இடத்தில சிறப்பான ஒரு கோயிலக் கட்ட வேண்டும் எண்டு நினச்சி தென்னிந்தியாவில காரக்குடி எண்ட இடத்தில செல்வாக்கோட சீவிச்ச நாகப்பச் செட்டியர் எண்ட ஒருவர்ர கனவில தோண்டி இலங்கையில வெள்ள நாவற்பதி எண்ட கிராமத்தில முருகனுக்கு ஒரு கோயில் கட்ட வேணும் எண்டு சொல்லி மறஞ்சிட்டாராம். காலமே எழும்பின செட்டியார் முருகண்ட கட்டளய நிறைவேத்தோணும் எண்டு உறுதி கொண்டு அதுக்குத் தேவையான பொற்காசுகள மூட்டயில கட்டி அவர்ர மனவியோட வெள்ள நாவற் பதிய வந்தடஞ்சி சொறிக் கல்லும் மருதமரச் சாம்பலும் தேனும் சேத்து கோயிலக் கட்டினாராம். இந்தக் கதயச் சொல்ற கல்வெட்டு ஒண்டும் இந்தக் கோயிலில இப்பவும் இருக்குது. கோயில் மூலத்தான வாசலில படிக்கல்லாக இரிக்கிற கல்லில நாகப்பச் செட்டியாரப் பத்தி எழுதியிருக்கு. அக்காலத்தில நாதனயில முக்குவ வன்னிம ஆச்சி செஞ்சதாம். மறுகா நாகப்பச் செட்டியார் நாதன[9] வன்னியனிடமும் ஊர்ப் பெரியாக்களிடமும் ஆலோசிச்சி இந்தக் கோயிலத் திருத்தினதாம்.

நாகப்பச் செட்டியார் இந்தக் கோயிலப் பராமரிக்கிறதுக்கு நாதன வன்னியனாருடனும் ஊர்ப் பெரியாக்களிடமும் கலந்தாலோசிச்சி ஆலயத்த தேசத்துக்குரியதாக்கி மக்களிட்ட ஒப்படச்சிப் போட்டாராம். அக்காலம் தொடக்கம் தென்னிந்தியப் பிராமணக் குருக்கள்மாரயே அந்தணர்களாக நியமிச்சி அவங்களுக்கு மானியமாக காணிகள், வீடுகள் உருவாக்கி நிலபதியாக மன்னன் அங்கு குடியமத்தினான்.

### விளக்கக் குறிப்பு

கோயில் போரதீவு மட்டக்களப்பின் படுவான்கரைத் தென்புறக் கிராமமாகும். இவ்வூர் வெல்லாவெளி பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ளது. இங்குள்ள சித்திரவேலாயுதர் ஆலயம் பண்டைய மன்னர்களின் மதிப்பும், மானியமும் பெற்ற கோயிலாகவும் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

Class No
Acc No

---

9 தற்போது வெல்லாவெளி என்று கூறப்படும் கிராமத்தின் பழைய பெயர். இக்கிராமம் அக்காலத்தில் முக்கியமான அரசியல் மையமாக விளங்கியதாகக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. சன்னியாசி மடு

முன்னொரு காலத்தில நாகப்பச் செட்டியார் என்பவர் இந்தியாவில இருந்து வியாபாரம் செய்யிறதுக்காக இலங்கைக்கு வந்தாரு. அவர் களுவாஞ்சிகுடியில சீவிச்சபோது அவருக்குத் தொழுநோய் வந்துத்தாம். அப்ப அங்க இருந்தவங்க கோயில் போரதீவு எண்ட இடத்தில ஒரு சன்னியாசி இருக்காரு. அவரிட்டப் போய் உண்ட நோயக் கூறினா அவர் உண்ட நோயத் தீப்பார் எண்டு சொன்னாங்களாம். நாகப்பச் செட்டியாரும் அவரிட்டப் போய் அவர்ர வருத்தத்தப் பத்திக் கூற, சித்திரவேலாயுதர் கோயிலுக்குக் கிட்ட ஒரு குளம் இருக்கு. அந்தக் குளத்தில நீ தண்ணி எடுத்து உண்ட காலக் கழுவினா உண்ட நோய் தீரும் எண்டு சொன்னாராம். அவரும் அந்தக் குளத்தில தண்ணிய எடுத்து கழுவ உடனே அவர்ர தொழுநோயும் இல்லாமப் போய்த்தாம்.

சித்திரவேலாயுதர் கோயிலின் தீத்தக் குளமான அந்தக் குளம் சன்னி யாசி மடு எண்டு இப்பயும் கூறப்படுது. அந்தக் குளத்திர மகிமய அறிஞ்ச அவர் அந்தக் கோயிலக் கட்ட வேணும் எண்டு எண்ணி உடனே இந்தியாவுக்குப் போய் தன்ட அப்பாட்ட இருந்து உதவிகளயும் எடுத்து பொற்காசுகள மூடமூடயாக் கட்டிக்கொண்டு வந்து இந்தச் சித்திரவேலாயுதர் கோயில கட்டினாரு.

கோயிலக் கட்டின செட்டிர வம்சத்தில வாறவங்கதான் செட்டி குடியாக்கள். அவங்களுக்கு ஆரம்பத்தில திருவிழாவில பங்கு இருந்திக்கு. புறகு அது இல்லாமப் போயித்து. ஆனா கோயில் நிருவாகத்தில செட்டி குடியாக்களுக்கு இடமிரிக்கி.

### விளக்கக் குறிப்பு

கோயில் போரதீவுக்கு அருகாமையில் கிழக்குப் புறமாக உள்ள ஊர் களுவாஞ்சிக்குடியாகும். வியாபாரத்தின் பொருட்டு தமிழ் நாட்டிலிருந்து பலர் இலங்கைக்கு வருகை தருவதும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பழங்காலம் தொட்டு இன்று வரையும் இடம்பெறுகின்றது. அவ்வாறு வந்தோரில் சிலர் இங்கு திருமணம் செய்தும் வாழ்ந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. கொங்கண முனிவர்

முன்னொரு காலத்தில தென்னிந்தியாவச் சேந்த கொங்கண முனிவர் என்பவர் தன் பத்தி காரணமாக இலங்கைக்கு யாத்திர செஞ்சபோது ஏழு இலிங்கங்களத் தன்னோட கொண்டு வந்தாரு. ஆரம்பத்தில வெருகல் எண்ட இடத்தில சில நாள் தங்கியிருந்து அங்க மகாவலி கங்கையில ஒவ்வொரு நாளும் நீராடி தனக்கிட்ட இருந்த லிங்கங்களில ஒண்ட அவ்விடத்தில வச்சி வணங்கி வந்தாராம். அதுக்குப் புறகு அங்க இருந்து புறப்படுறதுக்கு லிங்கத்தத் தூக்கியபோது அத எடுக்க முடியாமப் போயித்தாம். அதனால அந்த இடத்திலேயே அத விட்டுத்து அவர் புறப்பட்டுத்தாராம். புறகு அதுதான் வெருகல் கோயிலாக உருவானதாம். புறகு மற்ற லிங்கங்களோட புளியந்தீவ[10] நோக்கித் தண்ட யாத்திரயத் தொடந்தாராம். அப்போது கொக்கட்டுச்சோல கோயில், வெள்ள நாவற் பதி, கந்தபாணந்துற, உகந்த ஆகிய இடங்களுக்கு யாத்திர செண்ட அந்த இடங்களில தன்னிட்ட இருந்த லிங்கங்களில ஒவ்வொண்ட வச்சி வழிபாடு செஞ்சாராம். வெள்ள நாவற் பதி எண்டு சென்ன இடமே இண்டக்கி கோயில் போரதீவு எண்டு சொல்லப்படுது.

## 16. காஞ்சிரமரத்தடிப் பிள்ளையார் கதை

அக்காலத்தில வாரியாரு எண்ட ஓராள் நாகமோட்டுத் தெடல்ல கால செஞ்சி வந்தாரு. அவர் வயல் தலமாட்டில இருந்த காஞ்சிர மரத்தடில கல்லுப் புள்ளயாரொண்ட வெச்சிக் கும்பிட்டு வந்தாராம். இந்தக் கண்டத்துல வெள்ளாமச் செய்யிறாக்கள் எல்லாரும் புதிருப் பொங்கல் இங்கதான் பொங்குவாங்க. இந்தக் கண்டத்துக்குப் பாச்சல் இல்ல. வானத்த நம்பித்தான் வெதப்பாங்க. வரிசா வரிசம் வெதச்சிப்போட்டு புள்ளயாருக்கு நேந்து வெச்சா மழ பெய்யுமாம். அந்த வரிசம் விதச்சிப்போட்டுப் புள்ளயாருக்கு நேந்து வெச்சாங்க. மழ வாற சாடயே இல்ல. வானம் ஏறக்கட்டிக் கிடக்கு. ஈரத்தில மொளச்ச பயிரெல்லாம் வாடிக்கரிகிப் பொயித்து. வெள்ளாமச் செஞ்சாக்களுக்கு செரியான கவல புடிச்சித்து.

அப்ப ஒருநாள் எல்லாரும் சேந்து பொங்கிப் படச்சி தங்கட கொறயச் செல்லிக் கொளறுனாங்க. அப்பயும் மழ பேயல்ல. பயிரெல்லாம் கரிகிப்போய் அடிக்கட்ட மட்டும் சாடயாப் பச்சயா இருக்கு. அந்தக் காலத்தில ஒரு நடமுற மழ பொச்சிப்போனா புள்ளயாரக் கொண்டு

10 மட்டக்களப்பின் பழைய பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் தெரவுக்க போட்டா மழ பெய்யுமெண்டு நம்பிக்க. அப்ப கல்லுப் புள்ளயாரக்கொண்டு போய் தெரவுக்க போட்டாச்சி. பொழுது நல்லாச் சாஞ்சித்து. வாடியில[11] இருந்தாக்களெல்லாம் சாமான் சக்கட்டுக்கள எடுத்திற்று ஊட்டுக்குப் போறாங்க. பொழுதும் மலைக்குள்ள போய் மறஞ்சிட்டு. சாடயா ஒரு கொடி இருள் மேல வந்திக்கி. கூடவே மின்னலும் பளிச்செண்டது. கூட ஒரு காத்தும் அடிச்சிக்கு. பொறகு பாத்தா மழ பெய்யிது. எங்க பாத்தாலும் வெள்ளமா இரிக்கி. எல்லாரும் வயலுக்க போறாங்க. வரவ எல்லாம் தண்ணி நெறம்பி வழியிது. ஒடனே புள்ளயாரக் கரயேத்தி அந்தத் தண்ணியிலே ஒரு பொங்கல் பொங்கிப் படச்சாங்க. அந்த வரிசம் எல்லாருக்கும் நல்ல வெளச்சல்தான்.

**விளக்கக் குறிப்பு**

மழையை நம்பி வேளாண்மை செய்யும் காலங்களில் (மாரிப்போகம்) மழை ஒறுத்தால் குறித்த வயல் கண்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து அவ்வயல் கண்டத்துக்கு அண்மையில் தாம் வணங்கி வரும் பிள்ளையாரை (பிள்ளையார் கல்) பக்கத்திலே உள்ள ஆற்றில் நீரினுள் புதைத்து விட்டு மழை பெய்யவேண்டும் என்று நேர்த்தி வைப்பதும். மழை பெய்த பின்னர் பிள்ளையாரை மீண்டும் வெளியே எடுத்துப் பொங்கலிட்டு வணக்கம் செலுத்துவதும் மரபாக உள்ளது.

## 17. பெரியசாமி

நாகபட்டினத்தில இருந்து கடல்வழியாக சாமி ஒருவர் வந்துகொண்டிருந்த போது திடீரென புயல் அடிச்சிது. அப்ப கப்பல், கட்டுமரம் எல்லாம் கடலில தாண்டுத்து. அப்ப பறங்கி நாச்சி என்றவ தன்ட காப்பக் கழட்டி அதப் புடிச்சித்து கரசேந்தாங்க. உகந்த, களுவங்கேணி, பண்டித்தீவு, காண்டக்காடு எண்ட இடங்களில இருந்து சாமி வந்திருக்காரு. புறகு வெருகல் வழியாக கதிரவெளி முகத்துவாரத்தில் சாமி இறங்கினாரு. அப்ப அங்க இருந்த சனங்கள் பெரிய கோதாரி வந்து செத்துக் கொண்டிருந்தாங்க. அப்ப சனம் என்ன செய்யிற எண்டு தெரியாம இருந்த நேரம் சாமி ஒருவரில வந்து ஏற அவர் சாமி ஆடினார்.[12] புறகு

11 கிராமியச் சடங்கு வழிபாட்டு மரபில் தெய்வம் ஒருவரில் முற்பட்டு ஆடுவதும், அத்தெய்வம் கட்டுச் சொல்வதும், நோயாளர்களுக்கு திருநீறுபோடுதல், தீர்த்தம் தெளித்தல், பத்திரத்தால் தடவுதல், சாட்டையடித்தல் முதலான நோய்நீக்கச் சடங்குகளைப் புரிவதும் வழக்கமாகும்.

12 வயலில்/தோட்டத்தில் கட்டும் சிறு குடில் (வாடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தமெல்லாம் சுகமாகி அவங்களச் சாமி காப்பாத்தினாரு. புறகு சாமிய எப்படி செல்லுற எண்டு யோசிச்ச அவங்க 'பெரியசாமி' எண்டு அழச்சாங்க. புறகு பால்சேனயில அவருக்கு கோயில் கட்டி வழிபட்டாங்க.

கதிரவெளியில வாழ்ந்த போடிமார் வெள்ளாமதான் செஞ்சி வந்தாங்க. ஒரு போகம் மழ கிடைக்காம பயிரெல்லாம் அழிவடயத் தொடங்கித்து. அப்ப அவங்க வன்னிமைக்கிட்டப் போய் சென்னாங்க. அதுக்கு வன்னிம பால்சேனக் கிராமத்தில பெரியசாமி தெய்வத்த அந்த ஊரு மக்கள் வழிபட்டு வாறாங்க. அது மழ இல்லயெண்டால் மழ தாற தெய்வம் எண்டு கூறி அவங்கள அனுப்பி வச்சாரு. அப்ப போடிமார் பால்சேனக் கோயிலுக்கு வந்து அங்கிருந்த பூசாரிமாரச் சந்திச்சி தங்கட பிரச்சினயக் கூறி தங்கட ஊருக்கு வரச்செல்லிக் கூறினாங்க. அதுக்குப் பூசாரிமாரும் வாறதாகக் கூறினாங்க. அப்ப சடங்கு செய்யிறதுக்கு என்ன சாமான்க வேணும் எண்டு போடிமார் கேக்க 30 பாக்கு, 30 வெத்தில, சந்தணம், குங்குமம், மஞ்சள் எல்லாம் எடுத்து வெக்கச் சென்னாங்க. புறகு ஒருநாள் பூசாரிமார் வந்து மட வச்சி சாமியாடி கால் நாட்டினாங்க. கால் நாட்டி கால் கம்பு இறக்க மழ பெய்யத் தொடங்கித்து. ஆனா மழ வெள்ளத்தால நாட்டின கால் கம்பு உழுந்துத்து. அதக்கண்டு பயந்த போடிமார் பூசாரிமாரிட்ட கூற, அது பிரச்சின இல்ல எண்டு அவங்க கூறினாங்க.

வெள்ளாம விளஞ்ச புறகு போடிமார் வன்னிமைக்கி கதிரால பந்தல் போட்டாங்க. அப்ப வன்னிம நீங்க செலவாளியாக வெள்ளாம செஞ்சி கோட்ட கட்ட நெல் கொடுக்க வேணும். அவங்க அங்கிருந்து வந்து சடங்கில ஆடுவாங்க எண்டு கூறினாரு. அப்படியே கதிரவெளியில மாரந்த எண்ட இடத்தில சடங்கு நடந்து வந்துது. வன்னிம கூறினபடி பால்சேனயில கோயிலும் கதிரவெளியில சடங்கும் நடந்து வந்துது. ஆனா புறகு சாதிப் பிரச்சினயால இந்த முறயக் கைவிட்டுத்தாங்க. ரெண்டு இடங்களிலயும் கோயில் கட்டப்பட்டு பெரியசாமிய வழிபட்டு வந்தாலும் பழய முறயக் கைவிட்டுத்தாங்க.

**விளக்கக் குறிப்பு**

கதிரவெளி, பாற்சேனை ஆகிய கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசத்தில் உள்ளன. இக்கிராமங்கள் போடிமுறை உள்ளிட்ட பாரம்பரிய விவசாயப் பொருளாதார அமைப்பினையும் மரபுகளையும் கொண்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. நல்லைநாதச் செட்டி

இப்ப வெருகல் சித்திரவேலாயுதர் கோயில் இரிக்கிற இடத்தில அந்தக் காலத்தில் ஒரு ஆலமரம் வளந்து நிண்டதாம். அந்த ஆலமரப் பொந்தில தானாகத் தோண்டிய வேல் ஒண்டு இருந்ததாம். அந்த வேலுக்குச் சனங்கள் பூச செஞ்சி கும்பிட்டு வந்தாங்க. ஒருசமயம் இந்தியாவச் சேந்த நல்லநாதச் செட்டியார் என்பவர் தனக்குப் படநோய் ஏற்பட்டதால இதப் போக்குறதுக்காக திருகோணமல வழியாக கதிர்காமம் நோக்கி தல யாத்திர செஞ்சாராம். அப்போ வெருகல அடஞ்சி இரவு நேரமாகினதால களைப்படைஞ்ச அவர் அந்த ஆலமரத்துக்குக் கீழ தூங்கினாராம்.

களைப்பால செட்டியார் கடும் நித்திரகொண்டபோது முருகன் அவர்ர கனவில தோண்டி தனக்கு ஒரு கோயிலக் கட்டித் தரச்சொல்லி அருளாண இட்டாராம். அதனால பயம் அடஞ்ச செட்டியார் கோயில் கட்டுறதுக்கு காசு, பணம், பொருளுக்கு நான் என்ன செய்வன் என்று புலம்பினார். அப்ப முருகன் அவர்ர கனவில புறகும் தோண்டி கல்மலையில திரவியம் இருக்கு எண்டு செல்லி அங்க போறதுக்கான வழியையும் காட்டினாராம்.

அதுக்குப் புறகு கல் மலயில திரவியக் கடாரம் எடுத்து அவர் கோயிலக் கட்டினாராம். செட்டியார் கோயிலக் கட்ட திரவியம் எடுத்த இடம் இப்ப 'திரவியம் எடுத்த இடம்' எண்ட பேரால் மக்களால அழைக்கப்பட்டு வருது. இந்தக் கோயில் கட்டப்பட்ட புறகு அதுர கும்பாபிசேகத்துக்கு கண்டி மன்னனையும் அழச்சாங்களாம். அவனும் வந்து கலந்துகொண்டு மாணிக்கக் கல்லுகளக் கொடுத்தானாம்.

### விளக்கக் குறிப்பு

வெருகல் திருகோணமலை மாவட்டத்தின் தென்புற எல்லைக் கிராமமாக உள்ளது. இங்கு அமைந்துள்ள வெருகலம்பதி என்று அழைக்கப்படும் முருகன் ஆலயம் கிழக்கிலங்கைத் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகும். நல்லைநாதச் செட்டியார் கோயிலையும் விமானத்தையும் அமைத்தார் என்றும், அப்பணி காரணமாக அவரது செட்டி வம்சத்தவருக்கு கோயில் நிர்வாக, வழிபாட்டு மரபுகளில் முன்னிடம் வழங்கப்பட்டது என்றும் 17ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்ற செய்யுள் நூலின் 375ஆம், 376 ஆம், 377ஆம் பாடல்கள் கூறுகின்றன. இக்கோயிலில் கிடைக்கப்பெற்ற கோயில் மதில் திருப்பணி பற்றிய சாசனமொன்றில் இடம்பெறும் 'வடபுறம் செட்டியள் உபயம்' என்ற வசனமும் இவ்வாலயத்தின் திருப்பணிகளில் செட்டி வம்சத்தவரின் பங்களிப்பை ஆதாரப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. பாம்புக்குப் பங்கு பிரித்தது (வடிவம் 1)

முக்குவர் வம்சத்தில கலிங்க குல மக்கள் மட்டக்களப்பில் குடியேறி இருந்த காலத்தில மட்டக்களப்பில அம்பிளாந்துற எண்ட ஊரில இருந்த செல்லத்தம்பி எண்ட பெரியவரின் பாட்டனாரின் மனைவிக்கு நான்கு பொம்புள பிள்ளைக பொறந்தாங்க. அதில கொம்பி எண்ட பொம்புளப் புள்ளையும். அவங்களோட நல்ல பாம்பு ஒண்டும் பொறந்திக்கி. ஆனா பாம்பு பொறந்தத அவ ஒத்தரிட்டயும் சொல்லாம மறச்சாவு. அந்தப் பாம்ப வெளிய உட்டாவு. புறகு அவ புள்ளைகளுக்குச் சோறு கொடுக்கக்குள்ள அந்தப் பாம்பு தண்ட தாய வந்து பாக்குமாம்.

காலகெதியில புள்ளைகள் பெரியாளாகி களியாண வயச அடஞ்சாங்க. அதனால அந்தப் பொம்புளப் புள்ளைகளுக்கு அவங்கட அம்மா, அப்பா களியாணம் கட்டிவெச்சாங்க. ஆனா அதுகளுக்கு ஊட்டுக்குள்ள இரிக்கிற சாமான் சக்கட்டுகள புறிச்சிக் குடுக்கல்ல. அதனால அந்தச் சாமான் சக்கட்டுகள எங்களுக்குப் புறிச்சி தாங்க எண்டு சண்ட புடிச்சாங்க. அப்ப அவங்களுக்கு சாமானப் புறிச்சிக் குடுத்த நேரம் அவங்க நாகத்த உட்டுப்போட்டுப் புறிச்சாங்க. அப்பிடிப் புறிக்கக்குள்ள இன்னொரு பங்கயும் தாய் புறிச்சி வச்சாவு. ஊட்டில இருந்தவங்க அத ஏன் புறிச்சி வெக்கா எண்டு கேக்க அந்தப் பாம்பு தண்ட பங்கச் சுத்திப் படுத்திட்டுதாம். அப்ப அதத் துரத்த தாய் அழுதுத்து. ஆனா இத ஏத்துக்கொள்ளாத அந்தப் பாம்பு அந்தப் புறிச்சி வச்ச சாமான்கள குழப்பி உட்டுடுமாம். இப்படி ரெண்டு தடவ குழப்பி உட்டுத்தாம். அதுக்கும் ஒரு பக்கம் வெய்க்க வேணும் எண்டதால குலச்சி உடுமாம். அதுக்குப் புறகு அந்தச் சாமானுகள அஞ்சி பங்காப் புறிச்சப்ப அது குழப்பல்லயாம். ஆனா நாகம் தன்ட பங்க கொம்பியின் பக்கம் சேத்துப் போட்டு எங்கேயோ மறஞ்சி பொயித்தாம்.

சில வரிசங்களுக்குப் புறகு கொம்பியின் சந்ததியில் ஒருவரின் கனவில நாகம் வந்து தான் நாகமுனையில் (அம்பிளாந்துறை) வயலில் உள்ள ஒரு சூட்டின் மேல் இருப்பதாகக் கூறினதோட தன்னப் பண்டாரியவெளி நாககட்டில் இருக்கும் புத்தில கொண்டு உடுமாறும் கூறிக்காம். அப்பிடியே மக்களும் அதக்கொண்டு நாககட்டில் உட்டாங்களாம். இப்ப நாககட்டுக் கோயில் மூன்றாம் நாள் திருவிழாவ அம்பிளாந்துற மக்களுக்குக் கொடுத்திருக்காங்க. அண்டைக்கி செல்லத்தம்பிப் பெரியவரின் ஊட்டில் இருந்து தோரணம் கட்டிக்கொண்டு போறது வழக்கம். சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில தோறணம் கோயிலுக்குப் போகப் பிந்தினால் செல்லத்தம்பிப் பெரியவரின் ஊட்டுக்குப் பாம்பு வந்துடும். புறகு தோறணத்தோடதான் அது போகும்.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்புப் படுவான்கரைப் பகுதியில் பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் மிகவும் பிரபலம் மிக்கது. இது தேசத்துக்கோயிலாகவும் உள்ளது. 'நாககட்டு' என்று இவ்வாலயத்தை அழைப்பர். பெருமளவிலான மக்கள் ஒன்றுகூடி ஆலயத்தின் வயல் சூழ்ந்த புறத்தில் நிலத்தைக்கிண்டி அடுப்பு அமைத்து பொங்கி படையல் செய்வர். இக்கோயிலின் வரலாறு பற்றிக் கூறுமிடத்து இக்கதையைக் கூறுவர். இவ்வாலயத்தின் திருவிழாவினை இப்பிரதேசத்திலுள்ள கிராம மக்கள் ஒவ்வொரு ஊருக்கென வகுக்கப்பட்ட நாளில் நிகழ்த்துவார்கள். அவ்வகையிலேயே அம்பிளாந்துறைக் கிராமத்திற்கு மூன்றாம் நாள் திருவிழா கொடுக்கப்பட்டுள்ளது.

## 20. பாம்புக்குப் பங்கு பிரித்தது (வடிவம் 2)

முக்குவர் வம்சத்தில கலிங்க குல மக்கள் மட்டக்களப்பில் குடியேறி இருந்த காலத்தில மட்டக்களப்பில இருந்த ஒரு குடும்பத்தில 3, 4 பொம்புளப் புள்ளைகளாம். அந்தப் புள்ளைகளோட ஒரு பாம்பும் இருந்திச்சாம். அந்தப் பொம்புளப் புள்ளைகளுக்கு அம்மா, அப்பா கலியாணம் கட்டி வச்சி அதுகளுக்கு ஊட்டுக்குள்ள இருந்த சாமான் சக் கட்டுக்கள புறிச்சிக் குடுக்கல்ல. அதனால அந்தச் சாமான் சக்கட்டுக்கள எங்களுக்குப் புறிச்சித்தாங்க எண்டு சண்ட புடிச்சாங்களாம். அப்ப அவங்களுக்குச் சாமான்கள புறிச்சிக் குடுத்த நேரம் அவங்களோட இருந்த பாம்பு புறிச்சி வெச்ச சாமான்கள குலச்சி உட்டுடுமாம். ஏனெண்டா அதுக்கும் ஒரு பங்கு வெக்க வேணும் எண்டதால.

இப்படி ரெண்டு, மூண்டு தரம் குலச்சதால அந்தப் பாம்புக்கும் ஒரு பங்கு புறிச்சி வெக்க அந்தப் பாம்பு பேசாம அப்படியே இருந்திச்சாம். அதேநேரம் அந்த மூண்டு பொம்புளப் புள்ளைகளுக்கும் மூண்டு அம்மன் சில குடுத்ததாம். அப்ப கிராம வழிபாட்டில சில வச்சி வணங்கிற காலம். அப்ப அந்தச் சிலய எடுத்துக்கொண்டு ஒருவ நான் இங்க இவங்களோட இருக்கிறல்ல. மண்முனைக்கு அங்கால இருக்கப்போறன் எண்டு எல்லாச் சாமான்களயும் பொட்டியில வச்சி காத்தான்குடித் துறயால அக்கரப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாவாம். அவயோட அந்தப் பாம்பும் வந்ததாம். மண்முனைக்கி அங்கால வந்த நேரம் கரச்சையில நிண்ட ஒரு எரும மாடு இவயக் கண்டு வெருண்டு வெட்டுறதுக்கு ஓடிவர இவ தலையில இருந்த சிலய இறக்கிப் போட்டு மாட்டிர கொம்பு ரெண்டயும் புடிச்சித்தாவாம். அப்ப மாட்டிர கொம்பு ரெண்டும் கழண்டு உழுந்துத்தாம். அப்ப மாடு வெருண்டு கத்தித்து ஓடித்தாம்.

புறகு அவ அவடத்தில இருந்து மகிழடித்தீவுக்குப் போய் அங்க இரிக்கிற வில்வ மரத்தடியில கொண்டுவந்த பொட்டிய இறக்கி வச்சிட்டு அந்த ஊருக்குள்ள பிச்ச எடுத்திட்டு அவடத்தில ஆக்கித் திண்டுத்து இருந்தாவாம்.அந்தப் பாம்பும் அவ்வடத்திலயே கிடந்ததாம். அப்ப அந்த நேரத்தில இருந்த வன்னியன் மண்முனைக்கி இங்கால இருந்த பதினொரு கிராமத்தையும் கிழமைக்கு ஒருதரம் சுத்தி வாறவனாம். அவனுக்கு இருப்பிடமாக இருந்தது அம்பிளாந்துறயாம். அங்கதான் ஊடில்லாத ஆக்களுக்கு ஊடுகட்டிக் கொடுத்து உதவி செஞ்சி அதுகளப் பராமரிச்ச வனாம். இந்தப் பொம்புளயையும் அங்க கூட்டிக்கொண்டு வச்சி களியாணமும் கட்டி வச்சவனாம்.

இப்படி அவ வாழ்ந்துவந்த நேரத்தில இந்தப் பாம்பு போய் கிளாத்திக் கட்டுல (நாகதம்பிரான் கட்டு) போய்ப் படுத்திட்டுதாம். அப்ப அந்தப் பொம்புள தன்ட ஊட்டில இருந்து வந்து நாககட்டில இருக்கிற பாம்புக்குப் பால் வைக்கிறதாம். அதக் கண்டு அந்த ஊர் மக்களும் அதுக்குப் பால் வச்சாங்களாம். இந்தப் பால் வச்சவங்க கலிங்ககுலப் பரம்பரையினராம். இப்பிடி ஊர்மக்கள் எல்லாரும் சேந்து பந்தலிட்டு வழிபட்டு புறகு கோயிலும் கட்டி வழிபட்டு வந்தாங்களாம். அந்தப் பாம்பு இப்பவும் இருக்கு எண்டு சொல்றாங்க. இந்தக் கோயில் புறகு பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில் எண்டு சொல்லப்பட்டது.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்பு வாவியைக் கடந்து செம்பி மகிழடித்தீவை அடைந்ததையும் அங்கு எருமை மாட்டை அடக்கிய வீரச் செயலையும் இக்கதை கூறுகின்றது. மகிழடித்தீவில் பிரசித்தி பெற்ற கண்ணகி ஆலயம் ஒன்று உள்ளது. அவ்வாலயத்திலுள்ள கண்ணகி சிலை செம்பிக்கிழவியால் கொண்டுவரப்பட்டதென அவ்வாலய வரலாறு கூறுகின்றது. செம்பி எருமையை அடக்குவதற்கு கண்ணகியின் திருவருளே காரணமென்பது இங்குள்ளோரின் நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பாம்புக்குப் பங்கு பிரித்தது (வடிவம் 3)

மண்முனய ஆண்ட உலகநாச்சி காலத்தில கலிங்க குலப் பொம்புளைக்கு அஞ்சி பொம்புளப் புள்ளைகள் பொறந்தாங்க. அஞ்சாவது புள்ளயோட ஒரு நாகபாம்பும் ரெட்டயாப் பொறந்திக்கி. தாய் புள்ளைக்குத் தாய்ப்பால் குடுத்தும் பாம்புக்குப் பால் கறந்து குடுத்தும் வளத்து வந்தாவு. அந்தப் பொம்புளப் புள்ளைக்கி நாகம்ம எண்டு பேர் வச்சாங்க.

மூத்த புள்ளைகள் நாலுபேரும் களியாணம் முடிச்சி வேற வேற இடங்களில சீவிச்சாங்க. நாகம்மையும் அம்மாவும் பாம்பும் அவங்கட ஊட்டுலதான் சீவிச்சாங்க. புறகு நாகம்மையும் களியாணம் முடிச்சி ஒரு புள்ளயப் பெத்தாள். கொஞ்சக் காலத்துல நாகம்மட புருசன் சாக அவள் அவட அம்மாட ஊட்ட போய் இருந்தாவு. அவங்கட அம்மய்க்கி வயது போனதால அவையும் செத்துத்தாவு.

புறகு அம்மட சொத்துக்களப் பங்கு போடுறதுக்கு மூத்த பொம்புளப் புள்ளைகள் எல்லாரும் வந்தாங்க. அவங்கட ஊட்டுல இருந்த சாமான்கள் எல்லாத்தையும் அஞ்சி பங்காகப் பிரிக்க எடுக்கவும் நாகம்ம தன்னோட புறந்த பாம்புக்கும் பங்கு வேணும் எண்டு சென்னாப்ப மூத்த புள்ளைகள் பாம்புக்கு என்னத்துக்குச் சாமான்கள் எண்டு செல்லிக் குடுக்காம இரிக்க பாம்பு சீறிப் படமெடுத்து பிரிச்ச சாமான் எல்லாத்தயும் குலச்சி ஒண்டாக்கிட்டாம். கடசியில நாகம்ம அவங்களோட சண்ட புடிச்சித்து அவ கும்பிட்டு வந்த கண்ணகியம்மன் சிலயயும் எடுத்துப் பொட்டிக்குள்ள வச்சித்து தண்ட புள்ளயோட போனாப்ப அவவோட அந்தப் பாம்பும் போனதாம்.

அவங்க மூணு பேரும் மகிழடித்தீவுக் கிராமத்துக்கு வந்தாங்க. அங்க வந்த காலத்தில மகிழடித்தீவு அடந்த காடாகவும் காட்டெருமைகள் கூடுதலாத் திரியிற இடமாகவும் இருந்திக்கி. அங்க இருந்த சனம் கண்டுக்குட்டிகள மரத்துக்குக் கீழ கட்டிப்போட்டு மேல இருந்து தாய் எருமைகள கயிறு போட்டு புடிக்கிறவங்க. அந்தப் பக்கமா நாகம்ம புள்ளையோட வாறதக் கண்டவங்க அந்தப் பக்கம் வர வேணாம், மாடு குத்திப்போடும் எண்டு சத்தம் போட்டாங்க. நாகம்ம அதக் கேக்காம அந்தப் பக்கமா வந்தாவு. அப்ப முன்னுக்கு ஒரு எரும அவவ முட்டுறதுக்கு வந்திக்கி. அப்ப அவ கொண்டுவந்த பொட்டிய கீழ வச்சித்து புள்ளயையும் பணிய உட்டுத்து மாட்டுட கொம்பு ரெண்டயும் இறுகப் புடிச்சித்தாவு. அப்ப மாடு அப்படியே நிண்டுத்து. அதப்பாத்த சனம் நாகம்மயச் சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு நினச்சி கும்பிட்டு அந்தப் பொட்டிக்குள்ள என்னண்டு கேக்க அவ அதுக்க இரிக்கிறது எண்ட குலதெய்வம் எண்டா. புறகு அந்த ஊர்ச் சனம் அவவக் கும்பிட்டு அவ கொண்டந்த சிலய அவியளுக்குத் தரச் செல்லிக் கும்பிட்டு வாங்கி எடுத்தாங்க. நாகம்மயும் பாம்பும் நேராகப் போய்கொண்டிருக்க அந்தப் பாம்பு படையாண்ட குளத்துக்குப் பக்கத்துல இரிக்கிற புத்துல பூந்துத்து. அதாலதான் நாககட்டு எண்ட பேர் வந்த.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்பில் உள்ள முற்குகர் குலத்தில் உள்ள குடிகளுள் ஒன்று கலிங்ககுடி. சமூகப்பிரிவினைக் குறிக்கும் ஒரு சொல்லாகவே 'குடி' என்ற சொல் வழங்கி வருகின்றது. அதனை 'குலம்' என்றும் குறிப்பிடுவர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தலைவராக கலிங்க குடியில் வந்தவர்களே இருக்கமுடியுமென்பது அவ்வாலயத்தின் தொன்றுதொட்டுவரும் மரபாகும்.

## 22. ஆரையம்பதிக் கண்ணகியம்மன் கோயில்

ரெண்டாம் நூற்றாண்டளவில சேரன் செங்குட்டுவன் எண்ட சேர மன்னன் கண்ணகிக்குப் பெரிய விழாவொண்டு எடுக்க நினச்சிருக்கான். அப்ப எல்லா நாட்டிலயும் இருந்து அந்த நாடுகள ஆண்ட மன்னனுகள கூப்பிட்டிருக்கான். அந்த நேரத்தில நம்மட நாட்ட ஆண்டவன் கஜபாகு எண்ட ஒரு சிங்கள மன்னனாம். அவனும் அங்க போயிருந்தானாம். அவன் திரும்பி இங்க வரக்குள்ள சந்தண மரத்தால ஆன கண்ணகி உருவத்தையும். கண்ணகிட கால் சிலம்பையும் கொண்டு வந்து ஒரு இடத்தில கோயிலக் கட்டினானாம். அந்த இடத்திட பேர் சரியாத் தெரியல்ல. சிங்கள ஊர்ல இருந்த வழிபாடுதான் இங்க வந்திரிக்கி.

ஒத்துக்குடாக் கந்தன் எண்ட பேர்ல ஒருத்தன் இருந்தானாம். அவண்ட உண்மயான பேர் கந்தன்தானாம். ஒத்துக்குடாவில இருந்ததால அவன ஒத்துக்குடாக் கந்தன் எண்டு கூப்பிட்டாங்களாம். அவன் தண்ட புள்ளைகளோடயும் கூடப்பொறந்த சகோதரத்தோடயும் யாழ்ப்பாணத்தில இருக்கிற ஒத்துக்குடாவில இருந்து கப்பல்ல மட்டக்களப்பு வாவி ஓரமா புதுக்குடியிருப்பில இருக்கிற சிறாம்பியடி எண்ட இடத்தில் வந்திருந்தான். அவன் வரக்குள்ள ஏழு கண்ணகி சிலைகளக் கொண்டு வந்து சிறாம் பியடியில கோயில் கட்டி வணங்கியிருக்கான். அவனப்பத்திக் கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனிட்ட தப்பா ஆரோ செல்ல அவனும் விசாரிக்காம ஒத்துக்குடாக் கந்தன கொண்டுபோட்டு அவனிட்ட இருந்த ஏழு சிலைகளையும் ஏழு கிராமங்களுக்கு அனுப்பி அங்க வழிபடச் செய்யச் செல்லி உத்தரவு போட்டுத்தான். அதில ஒண்டுதான் நம்ம மண்முன. மண்முனயில கண்ணகி சிலய வச்சி வழிபட்டாங்க. கொஞ்ச நாளுக்குப் பொறகு அம்மாள் கோவமா நிண்டாவு. என்ன காரணமெண்டு ஆருக்கும் தெரியல்ல. அவட கோவத்தத் தணிக்க பூசையும் படயலும் வச்சாங்க. ஆனா அவட கோவம் கொஞ்சமும் கொறயல்ல. உக்கிரமாத்தான் இருந்தாவு. அதனால அந்தக் கோயிலப் பராமரிக்கிற கஸ்டமாப் போச்சி. இப்பிடி இருக்கக்குள்ளதான் மண்முன அம்மனப் பாத்துவந்த கிழவி ஒருவரால ஆரயம்பதியில வச்சி வழிபடுவம் எண்டு நினைச்சி அப்ப கந்தசாமி கோயிலில கணக்குப்புள்ளயா இருந்த சின்னத்தம்பி அவரிட்டப் போய் நடந்ததெல்லாம் செல்லி அம்மன அவரிட்டயே குடுத்திட்டுப் போயிட்டாவாம். அவரும் ஆரயம்பதியில கண்ணகியம்மன வச்சி வழிபடுறதுக்கு ஏற்பாடு செஞ்சாரு.

நம்மட ஊரில முன்ன பெரிய கோயிலா இருந்தது கந்தசாமி கோயில்தான். அந்தக் கோயிலுக்கு தெற்கு வீதியில வடக்குப் பக்கமா இரிக்கிற வளவுக்குள்ள கண்ணகிக்கு ஓலயாலயும் களி மண்ணாலயும் கோயில் கட்டினாங்க. 1912 ஆம் ஆண்டில களி மண்ணால கட்டியிருந்த கோயில கல்லால கட்டிக் கலசமும் வச்சாங்க.

முன்ன இந்தக் கோயிலுக்கு சரியாகப் பூச செய்யிறதுக்கு பத்தன் எண்ட ஒருத்தனத்தானாம் ஊராக்கள் எல்லாம் சேந்து சொன்னாங்களாம். அவன் எனக்கு மந்திரமும் தெரியாது படயல் வைக்கவும் தெரியாது எண்டு சொல்லி ஏலா எண்டுத்தானாம். புறகு மந்திரம் தெரிஞ்ச பூசாரிகள் பேரோட பத்தன்ட பேரையும் துண்டுல எழுதி அம்மாளுக்கு முன்னுக்க வச்சி குலுக்கி ஒரு துண்ட எடுத்தாங்களாம். அதில பத்தன்ட பேர்தான் இருந்திச்சாம். அண்டயில இருந்து அவன்தான் பூச செஞ்சானாம். அவண்ட வழியாக்கள்தான் பொன்னாச்சி குடியாக்கள்.

### விளக்கக் குறிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப் பற்றுப் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள பழைய கிராமம் ஆரையம்பதி. இதனை ஆரைப்பற்றை என்றும் அழைப்பர். இங்குள்ள கண்ணகி அம்மன் சிலையும் ஒத்துக்குடா கந்தப்பரால் கொண்டு வரப்பட்ட ஏழு சிலைகளுள் ஒன்று எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. மட்டக்களப்பிலுள்ள ஏனைய கண்ணகியம்மன் கோயில் சடங்குகளிலெல்லாம் கண்ணகி வழக்குரை படிக்கப்பட இந்த ஆலயத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள கோவலனார் கதை படிக்கப்படுகின்றது. கண்ணகி வழக்குரையில் கூறப்படும் கண்ணகியின் திருமணத்திற்கு கால் சிலம்பு எடுப்பதற்காக இலங்கைக்கு வந்த வீரனான மீகாமனுக்கும் இங்கு பூசை செய்யப்படுவது சிறப்புக்குரியது.

## 23. ஒத்துக்குடாக் கந்தப்பன் (வடிவம் -1)

ஒத்துவராக் கந்தன் யாழ்ப்பாணத்தில இருந்து வந்தான். அவன் வரக்க கண்ணகியம்மன் சிலைகளயும் கொண்டுவந்தான். ஒத்துவராக் கந்தன் யாழ்ப்பாணத்தில இருந்து துரத்தப்பட்டு தன்ர சகோதரிகள் இருவரோடயும் அவரின் மகளோடயும் வந்து இறங்கின இடம் இந்தப் புதுக்குடியிருப்பில இண்டைக்கு இருக்கிற சிறாம்பியடி எண்ட இடம். அது வயலுக்குள்ள இருக்கு. அங்கு வந்தபோதுதான் அவன்ட படகு கரைதட்டின. அப்ப அவர்கள் வந்த படகில் இருந்த கல் ஒன்று நீரில் விழுந்து நீரில் தாழாது மிதந்ததக்கண்டு அந்தக் கல்ல எடுத்து இறங்கின இடத்திலே வைத்து பிள்ளையாராகவும் வழிபட்டாங்க. அந்த இடந்தான் சிறாம்பியடி. அப்ப இருந்து இப்ப வரையும் மக்கள் மத்தியில் நம்பிக்கைவாய்ந்த இடமாக சிறாம்பியடி பிள்ளையார் இருக்கிது. அந்த இடத்தில வந்து இறங்கின ஒத்துவராக் கந்தனால கொண்டுவரப்பட்ட கண்ணகியம்மன் சிலைதான் இங்க வைக்கப்பட்டது. இங்கு செம்பிவெளி என்ற வயல் இருக்கு. ஒத்துவராக் கந்தன்ட சகோதரி செம்பி என்பவள் இறந்து அவவ புதைத்த இடந்தான் அந்த செம்பிவெளி. அதோட ஒத்துக்குடாக் கந்தனோட வந்த மயிலி என்பவள் எங்கு புதைக்கப்பட்டாள் என்று தெரியல்ல. ஆனா ஒத்துவராக்கந்தன கடுக்காமுனையில புதச்சாங்களாம். இண்டைக்கும் கூட்டங்களில குழப்பத்தை ஏற்படுத்திறவங்கள ஒத்துவராக்கந்தன் என்று சொல்லுவாங்க.

### விளக்கக் குறிப்பு

புதுக்குடியிருப்பு என்ற கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. இவ்வூரில் கண்ணகி அம்மன் சிலை கொண்டுவரப்பட்டதுடன் தொடர்புடைய இடமாக சிறாம்பியடி கூறப்படுகின்றது. அங்கு பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் அமைந்துள்ளது. புதுக்குடியிருப்பில் செம்பிவெளி என்ற இடமும் உண்டு. ஒத்துக்குடாக் கந்தனின் சகோதரியாகக் குறிப்பிடப்படுபவளே செம்பி. செம்பியை புதைத்த இடமே செம்பிவெளி என்று இப்பிரதேச மக்கள் கூறுகின்றனர். மயிலி என்று குறிப்பிடப்படுபவள் ஒத்துக்குடாக்கந்தனின் சகோரதரிகளுள் மற்றொருவர். கடுக்காமுனை என்ற இடம் படுவான்கரைப் பிரதேசத்தில் அம்பிளாந்துறைக் கிராமத்திற்கும் அரசடித்தீவுக் கிராமத்திற்கும் இடையில் அமைந்துள்ள மேட்டு நிலப்பிரதேசமாகும்.

## 24. ஒத்துக்குடாக் கந்தப்பன் (வடிவம் -2)

15 ஆம் நூற்றாண்டில ஒத்துக்குடாக் கந்தன் என்பவன் யாழ்ப்பாணத்தில இருந்து ஏழு கண்ணகி அம்மன் சிலைகளோட ஓடத்தில ஏறி கடல் வழியா வரக்குள்ள கடும் மழையோட காத்தும் அடிச்சதால அந்த ஓடம் புதுக்குடியிருப்பில தர தட்டித்தாம். அவங்க புதுக்குடியிருப்பில சிறாம்பி[13] கட்டி வாழ்ந்தாங்க. அதுக்குப் புறகு அவன் இரிக்கிற இடத்த அறிஞ்ச அவண்ட எதிரிகள் அங்க வந்து ஒத்துக்குடாக் கந்தனையும் அவண்ட குடும்பத்தையும் சாகவச்சிப் போட்டாங்க. அவண்ட தங்கச்சி செம்பி என்பவள ஆத்துல தள்ளி உட்டுச் சாகடிச்சிப்போட்டாங்க. இப்பிடிச் செத்த அவள்ர உடம்ப புதச்ச இடந்தான் செம்பிவெளி எண்ட பேரோட இப்ப புதுக்குடியிருப்பில இரிக்கி.

## 25. செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் (வடிவம்-1)

செட்டிபாளயக் கோயிலில் இருக்கிற அம்மன்ட சில முன்ன புதுக்குடியிருப்பிலதான் இருந்திக்கி. அது ஒத்துக்குடாவில இருந்த கந்தன் என்பவன் கொண்டு வந்த ஏழு சிலைகளில ஒண்டு. அது புதுக்குடியிருப்பில சிறாம்பியடி, புள்ளயாரடித்திடல், புள்ளயாரடி, முன்மாரி என அழைக்கப்படும் இடத்தில் வச்சி சிறாம்பி கட்டி வணங்கப்பட்டது. அக்காலத்தில இருந்த அறுமக்குட்டிப் போடியின் கனவில கண்ணகி அம்மன் தோண்டி எனக்குப் புள்ளக்குரல் கேட்டுச் சகிக்க ஏலாது. மஞ்சலிடிச் சத்தம், மாவிடிச் சத்தம் பொறுக்கேலாது, வெப்பம் சகிக்க

---

13 மேலே இருக்கத் தக்கதாக அல்லது வைக்கத்தக்கதாக உயரமாக கம்புகளால் கட்டப்படும் காவல் பரண்/அட்டாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அதனால என்னச் செட்டிபாளயம் கிராமத்தில் மருத மரச் சோல நடுவ ஆலயம் அமச்சி வழிபடச் சொல்லிக் கூறினாவாம். அவட வாக்குப்படியே முன்மாரி இடத்தில இருந்த சிலயக் கொண்டுவந்து செட்டிபாளயத்தில வச்சி கோயில் கட்டி வணங்கிவந்தாங்களாம்.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கிராமமே செட்டிபாளையம். இங்குள்ள கண்ணகி அம்மன் ஆலயம் பல ஊர் மக்கள் சேர்ந்து சடங்கு செய்யும் சிறப்புக்குரியது. இது மண்முனை வாவிக்கு கிழக்குத்திசையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சற்றுத் தொலைவில் வயற்காணிகளுக்கு மத்தியில் மருதமரங்கள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது.

இக்கதையில் ஒத்துக்குடா கந்தப்பர் பற்றி குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக மட்டக்களப்புத் தேசத்திற்கு கண்ணகி வழிபாடு யாழ்ப்பாணத் தினூடாகப் பரவியது என்று கூறப்படும் கதையுடன் தொடர்புபடுத்தப் படுபவராக இவர் காணப்படுகின்றார். போர்த்துக்கேயர் இந்துக்கோயில்களை இடித்து கிறிஸ்தவ மத ஆலயங்களை அமைத்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் நாடாரும் நம்பிகளும் ஒத்துக்குடாக் கந்தப்பரை அணுகி எங்களையும் எங்கள் கண்ணகி அம்மன் விக்கிரகங்களையும் மட்டக்களப்பில் கொண்டு குடியிருக்க வகைசெய்யவேண்டுமென்று வேண்டினர் என்றும் அதன்படி ஏழு கண்ணகி விக்கிரகங்களையும் ஏழு நாட்டார்க் குடும்பங்களையும் மகள் மற்றும் சகோதரிகளிருவரையும் அழைத்துக் கொண்டு ஒத்துக்குடாக் கந்தப்பர் மட்டக்களப்பிற்கு வந்தார் என்றும் கண்டி மன்னனின் அனுமதி பெறாமல் இவர்கள் இங்கு வந்து குடியேறியமையால் கந்தப்பனைக் கொன்று அவ்விக்கிரகங்களில் ஒன்றினை இருந்த இடத்திலும் ஏனைய ஆறினையும் ஆறுபிரதான ஊர்களில் இருக்கவும் நாடாரைப் பூசகராகவும் கோவியரை ஆலய ஊழியராகவும் நியமிக்கும்படியும் கண்டி மன்னன் கட்டளை இட்டான் என்றும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது (1962:68-70).

இக்கருத்திற்கு மேலும் வலுச் சேர்ப்பதாக ஒத்துக்குடாக் கந்தப்பர் சரித்திரமும் (1962) அமைந்துள்ளது. ஒத்துக்குடா கந்தப்பரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துவராக்கந்தன் என்றும் குறிப்பிடுவர். இவருடன் தொடர்புடைய கதைகள் ஆரையம்பதி, கிரான்குளம், புதுக்குடியிருப்பு, செட்டிபாளையம், அம்பிளாந்துறை முதலான பிரதேசங்களில் பரவலாக வழங்கி வருகின்றன.

## 26. செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயில் (வடிவம்-2)

பதினெட்டாம் நூற்றாண்டு காலப்பகுதியில இந்தியாவில இருந்து ஏழு சிலைகளைக் கொண்டு வந்திருக்கிறாங்கள். மண்முனைப் பகுதியில் இருந்த திமிலர்கள் அவர்கள கைது செய்ய வேறொரு பகுதியார் துலுக்கர் இவங்கள விடுவிச்சி விட்டுத்தாங்கள். விட்ட உடனே அந்த ஏழு சிலை களையும் கொண்டு புதுக்குடியிருப்பில சிறாம்பியடி என்ற இடத்தில வச்சித்தான் அதுக்குப் பிறகு கிரான்குளம் தீவில ஒரு சிலைய வச்சிருந்திருக்கிறாங்கள். அந்தச் சிலையத்தான் இங்க கொண்டு வைச்சிருக்காங்க. அதுக்காகத்தான் கிரான்குளம் தாயூர் என்ற சிறப்புப் பெயரும் வந்தது. அவங்கதான் செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயிலுக்கு வந்து கதவு திறக்கிற. மற்றைய சிலைகள் தம்பிலுவில், காரைதீவு போன்ற ஊர்களில் வைக்கப்பட்டதாம்.

அப்போ அறுமக்குட்டிப் போடி திக்கதிபதியனாக இருந்திருக்கிறாரு. செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயம் அமைந்துள்ள இடம் தரிசி நிலமா இருந்திருக்கு. 127 ஏக்கர் தரிசி நிலமா இருந்திருக்கு. அந்த நிலத்தில டச்சிக்காரன் வந்து குடியேற பார்த்திருக்கிறான். அப்ப இந்த திக்கதிபதியனாக இருந்தவர் பார்த்தாரு இந்த இடத்தில அவனுகளுக்கு சேச் கட்டிறதுக்கு இடங்கொடுக்கக் கூடாது என்று உடனே ஓலையால கொட்டில் அமைச்சி அந்தச் சிலையக் கொண்டு இங்க வச்சித்தாரு. அந்த நேரத்தில சிலையக் கொண்டு வச்சா ஒரு அம்மையார் வந்திருக்கிறாவு. வன்னிச்சி எண்டு சொல்லி, அவதான் அந்தத் தெய்வம். வந்த உடனே ஒல்லாந்தன் வந்திருக்கிறான். அப்ப இது ஆரு என்ன இது? எண்டு கேட்டிருக்கிறான். அவனுக்கு நம்பிக்க இல்ல. புறகு பாத்தா தலை முடிய விலத்திவிட தலையில கண்ணெல்லாம் தெரிஞ்சிதாம். அப்ப உடனே அவன் ஓடித்தான். புறகு அந்த முயற்சியையும் விட்டுத்தான். அந்தக் காணி அவ்வளவும் கோயிலுக்குச் சொத்தாகக் கொடுக்கப்பட்டது.

இதே நேரத்தில அந்தக் கோயில அமைக்கிறதுக்கு நாள் பார்க்க வேணும். நிலயம் எடுக்க வேணும். இதெல்லாம் அம்மண்ட அருளால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச்சிகள் நாட்டப்பட்டிருந்திச்சாம். வேப்பம் குச்சியால. கல்லு வைக்கிறதுக்கு நாள் எப்பிடி எடுத்த எண்டா கடலுக்குள்ள வெடிக் கேட்கும் அந்த நேரத்தில காடு வெட்டி, அந்த நேரத்தில கடும் காடுதானே கடற்கர மட்டும் ஆக்கள நிறுத்தி கடலுக்குள்ள சத்தம் கேட்டா சொல்லனும் எண்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்திச்சாம். அப்ப நிரயில நிண்டாக்களுக்கு சத்தம் கேட்கல்லையாம். இங்க கல்லு வைக்கிறதுக்காக நிண்டவருக்கு மட்டும் கடலுக்குள்ள கேட்ட சத்தம் கேட்டிக்காம். அதன் படி கல்லு வச்சி கோயில் அமச்சாங்களாம்.

## 27. மாம்பழம் குதிச்ச கதை

மாங்கனிதான் கண்ணகை. கண்ணகைதான் மாங்கனி. கண்ணகையின் உருவச் சிலைக்குப் பக்கத்தில ஒரு மாங்கனி இருந்தது. அந்த மாங்கனி எல்லா வகையிலையும் ஒரு பெறுமதியானது. ஒன்று கண்ணகைக்கு ஈடானதாக இருந்தது. மற்றையது அது தங்கம். அது பெறுமதியானது. அப்பிடியான ஒரு மாங்கனி செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயத்தில் இருந்திக்கி. இந்த மாங்கனிய களவு எடுக்கணும் எண்டுபோட்டு அந்த நகைய செஞ்சவனே களவெடுக்கத் திட்டம் போட்டான். ஒருநாள் அதக் களவு எடுத்துத்து ஆத்தால தோணியில போகக்குள்ள கொஞ்சத் தூரந்தான் போயிருப்பான். அந்த நேரத்தில களவெடுத்துக் கொண்டுபோன அந்த மாங்கனி தானாக தண்ணியில குதிச்சித்தாம். இப்பவும் அந்த இடம் மாங்கனி குதிச்ச பள்ளம் எண்டு சொல்லப்படுது. அந்த இடம் அவ்வளவும் சரியான பள்ளம். ஒருவருக்கும் ஒரு காலமும் எட்டாது.

### விளக்கக் குறிப்பு

கண்ணகி வழக்குரையில் கண்ணகி மாங்கனியில் இருந்து உதித்ததான ஐதீகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. செட்டிபாளையத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மண்முனை வாவியின் ஓரிடத்தினையே மாம்பழம் குதிச்ச பள்ளம் என்று கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. நாகமணி

எங்கட ஆரயம்பதியில இரிக்கிற வடபத்திரகாளி அம்மன் கோயில் ஆரம்பத்தில செத்தப் பந்தலாகத்தான் இருந்திக்கி. அதனால கோயிலுக்குள்ள வைக்கிற சாமிட முகக்களய[14] பாதுகாப்புக் காரணமாக கோயில்ல வைக்கிறல்ல. கோயில் தலைவர் அழகையா என்றவர்ர ஊட்டிலதான் வைக்கிற வழக்கமா இருந்துவந்திக்கி. அந்த நாள்ள சடங்கு மூண்டு நாள்தான். அதால சடங்கு முடிய அம்மாளயும் அம்மாள்ர நகைகளயும் ஒரு மரப் பேழயில போட்டு பாதுகாப்பா தலைவர்ர ஊட்டில கொண்டு வெய்ப்பாங்களாம். சடங்கு காலத்தில மேலுக்குச் செத்தையில ஒரு நாகபாம்பு பாதுகாப்பா காவல் காக்குமாம். புறகு சடங்கு முடிய தலைவர்ர ஊட்டில அம்மாளக் கொண்டு வச்சதும் அங்க வந்திருந்து அம்மாளப் பாதுகாக்குமாம்.

அந்த நாகம் ஒவ்வொரு அமாவாசையிலயும் இரவுல தன்ட தோல உரிச்சிப்போட்டுத்து நாகமணியக் கக்கி வச்சிட்டு அதுட ஒளியிலதானாம் இர தேடுமாம். இதக் கோயில் பூசாரி அறிஞ்சித்தாராம். அவரு அந்த நாகமணிய எடுக்கக் கண் வச்சித்தாராம். கன நாளா அத எடுக்க திட்டம் போட்ட அவர் அதுலயே கண்ணும் கருத்துமா இருந்து ஒரு திட்டம் போட்டுத்தாராம். நாகமணியக் கக்குற பாம்பு சுமார் பதினஞ்சி அடி தூரம் வரயிலயும் விசத்தக் கக்குமாம்.

அவர் எண்ணினது போலவே அமாவாச நாளொண்டு வந்ததாம். அவரும் நாகமணிய எடுக்கிறதுக்காகப் பாத்திட்டு இருந்தாராம். இரவுப் பூசைகள் எல்லாம் முடிஞ்சதும் சனம் எல்லாம் கலஞ்சி போனதுக்குப் புறகு தூங்காமக் காத்துத்து இருந்தாராம். பூசாரி நினச்சது போலவே பாம்பும் இரதேட நள்ளிரவு போல வந்து தன்ர நாகமணியக் கக்கி வச்சித்து தன்ட தோல கழட்டித்துக் கொஞ்சம் மண்ணில புரண்டு விளையாடித்து இர தேடிச்சாம். இவரும் உடனே மாட்டு சாணியக் கையில எடுத்துத்து அரவம் இல்லாம கிட்டப் போனாரு. போய்த்து நாகமணிக்கு மேல மாட்டுச் சாணிய எறிஞ்சாராம். உடனே நல்ல பிரகாசமா இருந்த அந்த இடம் இருளடஞ்சி போயித்தாம். நாகமணியச் சாணி முழுசா மூடித்து. உடனே கோபத்தில பாம்பு எல்லாத் திசையையும் நோக்கி தன்ட விசத்தக் கக்கித்தாம். அப்ப அந்தப் பூசாரியார் ஓடிப்போய் மரத்தடி ஒண்டில பதுங்கித்தாராம்.

---

14 அம்மன் சடங்குக் கோயில்களில் தெய்வ உருவத்துக்குப் பதிலாக வைக்கப்படுவது. அம்மனின் முக அமைப்பைப் பிரதிபலிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சக் காலத்தால பாம்புட சத்தம் ஒண்டயும் காணல்ல. உடனே வெளிவந்த பூசாரியார் பைய ஒழும்பி வெளிச்சத்தப் புடிச்சித்து தான் சாணி எறிஞ்ச இடத்துக்குப் போனாராம். அப்ப அந்தப் பாம்பு அவடத்திலயே செத்துக் கிடந்ததாம். புறகு அவர் நாகமணிய சாணியத் தட்டி உட்டுத்து எடுத்திட்டாரு. உடனே அவடத்தில சரியான பிரகாரம் வந்திட்டுது. புறகு பூசாரியார் பாம்ப உட்டுத்துத் தன்ட ஊட்ட கொண்டுபோயிருக்காரு. கோயில் தலைவர் காலயில எழும்பிப் பாத்திருக்கார் அம்மாள்ர பேளைக்கு மேல பாம்பக் காணல்ல. என்னடா எண்டு யோசிச்சித்து தன்ர வேலயப் பாக்கப் போயித்தாரு. ரெண்டு நாளாயும் பாம்பு வரல்லயாம். கோயில் பூசாரிட்ட விசாரிச்சிருக்கார். அவரு தனக்கு ஒண்டும் தெரியா எண்டுத்துப் போயித்தாராம். அடுத்த அமாவாசைக்கு எட்டு நாளைக்கு முதல்ல அம்பாள்ர பேழைக்கு மேல வேறொரு நாகம் வந்திருந்திச்சாம். காலயில பாத்தா கோயில் பூசாரியாரும் அவர்ர பேரப்புள்ளயும் பாம்பு கடிச்சி செத்துக் கிடந்தாங்களாம். அந்தப் பாம்பு அவரப் பழிவாங்கினது மட்டுமில்லாம அவர் எடுத்த நாகமணியையும் எடுத்துட்டுதாம்.

## 29. காட்டா விநாயகர்

அந்தக் காலத்தில் முல்லைத்தீவுப் பிரதேசத்தை சிற்றரசர்கள் ஆட்சி செய்தார்களாம். அப்போ ஒரு சிற்றரசன் கருத்தான்மடு என்ற இடத்தில் ஒரு குளத்தைக் கட்டுறதுக்கு எண்ணியிருந்தான். அந்தக் குளத்துக்குப் பலியிடுவதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு எருமை மாட்டை அக்கிராமவாசிகள் கொடுக்க வேண்டும் என்று கட்டளை போட்டான். அவ்வாறு வழங்காவிட்டால் அன்றைய தினத்துக்குரியவரைக் குளத்துக்கு மன்னன் பலியிடுவான். இப்படி இருந்துவாற நேரம் அந்தக் கிராமவாசியான கந்தன் என்பவனின் முறை வந்தது. அவன் ஒரு தாழ்ந்த சாதியைச் (பறையர்) சேர்ந்தவன். மிகவும் ஏழையான கந்தனால் எருமை மாட்டைக் கொடுக்க முடியவில்லை. அதனால் கந்தனைக் கொண்டு செல்வதற்கு அரச சேவகர்கள் வந்தினம். கந்தன் அவயளிட்ட இருந்து தப்பியோடி முள்ளியவளை மூண்டாம் வட்டாரத்தில் உள்ள ஒரு புள்ளயார் கோயிலின் முன்னால் இருந்த கொண்டை மரத்தின் மேலே ஏறி இருந்துகொண்டு 'என்னக் காட்டிக் கொடுத்துடாதே விநாயகா' எண்டு புள்ளயாரை வேண்டினான். அவனைத் தேடி சேவகர்கள் அவ்விடத்துக்கு வந்து சேந்தினம். ஆனால் அவயளால அவனைக் கண்டுபிடிக்க முடியேல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதால அன்று தொட்டு அந்தக் கோயில ''காட்டா விநாயகர்'' என்று அழைக்கினம். அதப் பேந்து காட்டு விநாயகர் எண்டு மாத்திப்போட்டினம்.

தன்னைக் காப்பாத்தினதால கந்தன் அந்தக் கோயிலுக்கு ஒரு பெரிய மணியச் செஞ்சி கொடுத்தான். அந்த மணியின்ரை ஓசை 'கந்தா' எண்டு அழைக்கிறதப் போல இருந்திக்கி. பேந்து சாதி வேறுபாடு வந்ததால கந்தன் செஞ்சி கொடுத்த மணி கோயிலில ஒலிக்கக் கூடாது எண்டு உயர் சாதியினம் எண்ணி கந்தன் செஞ்சி கொடுத்த மணியக் கோயிலில இருந்து நீக்கிப்போட்டு புதிசா ஒரு மணியச் செஞ்சி கொடுத்தினம். ஆனா அந்த மணியில இருந்து ஓச வரேல்ல. பேந்து கந்தன் செஞ்சி கொடுத்த மணிய ஒரசி அந்த மணியின்ர துகள்கள எடுத்து புதிதாகச் செய்யிற மணியோட சேத்துக்கொண்டாங்க. பேந்து அந்த மணியில இருந்து ஓச எழும்பினாலும்கூட அது மீண்டும் கந்தன அழைப்பது போலவே ஒலிக்கிது.

**விளக்கக் குறிப்பு**

காட்டா விநாயகர் ஆலயம் என்று முன்னர் அழைக்கப்பட்ட காட்டு விநாயர் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை என்ற இடத்தில் அமைந்துள்ளது. குறிப்பாக வற்றாப்பளைக்கு மூன்று மைல்கள் தொலைவில் உள்ளது. வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த பொங்கல் விழாவினை முன்னிட்டு இவ்வாலயத்திலேயே ஆரம்ப நிகழ்வுகள் அனைத்தும் நடைபெறும். அதன் பின்னர் இறுதி நாள் பொங்கல் நிகழ்வே வற்றாப்பளையில் இடம்பெறுவது வழக்கமாகவுள்ளது. இவ்வகையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வழிபாட்டு மரபுகளோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் ஆலயமாகவும் அற்புதங்கள் நிகழும் இடமாகவும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

## 30. கங்குவேலி ஆதிசிவன் ஆலயம்

அந்தக் காலத்தில அகத்தியர் தாபனத்த தரிசிக்க எண்டு முனிவர் வடிவிலான ஒருவர் கங்குவேலிக்கு வந்து தங்கினார். அந்தக் காலத்தில அகத்தியர் தாபனத்தச் சுத்தி ஆரும் குடியிருக்காததால கங்குவேலியில் இருந்துதான் அகத்தியர் தாபனத்துக்கு போய் சாமி கும்பிட்டு வருவாங்க. அப்பிடி அகத்தியர் தாபனத்துக்குப் பூசைக்குப் போன கிராமவாசிகளோட சேந்து இந்த முனிவர் பல தடவைகளில போய் சாமி கும்பிட்டு வந்திருக்கிறார். அவரு தான் போகும் இடங்களில எல்லாம் வச்சிச் சாமி கும்பிடுறதுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு தன்ட அடைப்பைக்குள் ஒரு சிவலிங்கத்த வச்சிருப்பாராம். அத அடப்பை லிங்கம் என்பார்களாம். இந்தச் சிவலிங்கத்த ஒவ்வொரு நாளும் அவர் கும்பிட்டபடியே இருப்பாராம். ஒரு நாள் திடீரெண்டு அந்த முனிவர் அந்தச் சிவலிங்கத்தத் தூக்க வெளிக்கிட்டபோது அதத் தூக்க முடியாமப் போயிட்டுதாம். பொறகு அவரு இங்கதான் இருக்க ஆசைப்படுறாரு, இங்கேயே இருக்கட்டும், நீங்களே பாத்துக்கொள்ளுங்கள். எண்டு சொல்லி அந்தச் சிவலிங்கத்த கங்குவேலிக் கிராம மக்களிடம் குடுத்திட்டுப் போயிட்டாராம். இப்படி வந்தவரு முனிவரா, ரிசியா, வேறு ஆர் எண்டு கூற ஏலாது. அப்போ அகத்தியர் தாபன சிவலிங்கப் பெருமானேதான் அப்படி வந்து தன்னை கங்குவேலி மக்கள் கும்பிடும்படி ஆதிசிவன் தேவஸ்தானத்தில் விரும்பிவந்து இருந்துள்ளார் எண்டு நம்மட பாட்டன், பூட்டன் சொல்லுறாங்க.

## 31. லிங்கபுரம் ஆதிசிவன் கோயில்

அம்மன்கேணி எண்ட ஊர்ல செல்வராசா எண்ட போடியார் இருந்தாராம். அவருக்கு ஏழு ஆம்புளப் புள்ளைகளும் மூண்டு பொம்புள்ள புள்ளைகளுமாம். இவங்கள்ட நிறயச் சொத்து சுகம் கொட்டிக்கிடந்ததாம். ஒரு நாள் செல்வராசாவும் அவர்ர கடசி மகன் பத்தக்குட்டியும் இன்னுஞ் கொஞ்சம் வேலையாக்களும் காட்டுக்க மாட்டு வண்டில்ல கொள்ளிக்குப் போனாங்க. காட்டுக்குப் போனதும் மாடுகள வண்டில்ல இருந்து அவிட்டு மேச்சலுக்குக் கொஞ்சம் தள்ளியிருந்த கட்டையில கட்டிற்று இவங்க எல்லாரும் கொள்ளி எடுத்து முடிஞ்சதும் கொஞ்சம் இளைப்பாறித்து ஊட்டுக்குப் போவம் எண்டு சொல்லித்துப் பாத்தா கட்டியிருந்த இடத்தில மாடுகளக் காணல்லயாம். இப்ப எப்பிடி ஊட்டுக்குப் போற. மாடுகள் எங்க போச்சோ எண்டு நினைச்சிற்று செல்வராசாவும் அவர்ர மகனும் மத்தாக்களும் ஒவ்வொரு திசையிலயும் மாடு தேடிப் போற நேரத்தில புதிசா ஒருத்தர் வந்து சொன்னாராம். உண்ட மாடுகள் குளக்கட்டுப் பக்கம் மேயுது எண்டு. செல்வராசா அவர இதுக்கு முன்னம் எங்கேயும் பாக்கல்லயாம். சரி யாரா இருந்தா நமக்கென்ன நம்மட மாட்டப் போய்க் கொண்டு வருவம் எண்டுத்து குளக்கட்டுப் பக்கம் போனா அங்க மாடுகள் புதுசா ஒரு கூனியில[15] கட்டியிருக்காம். சரி நம்மட மாட்ட அவுட்டு வருவம் எண்டு கூனியப் புடுங்கினா என்னமோ ஒரு கல்லுத் தட்டுப்படுற

---

15 மாடு அல்லது ஏதோவொன்றை இழுத்துக் கட்டுவதற்கு நிலத்தில் ஏற்றும் கம்பு. இதனைக் கூனிக்கட்டை என்றும் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி இருந்ததாம். அப்ப அந்த இடத்தத் தோண்டிப் பாத்தாராம். அங்க ஒரு சிவலிங்கம் இருந்ததாம். உடனே போன எல்லாரையும் கூப்பிட்டு லிங்கத்தத் தோண்டி வண்டியில ஏத்தி வேப்பிலயால மூடி பத்திரமாக் கொண்டுவந்து மகாவலி கங்கக் கரயப் பாத்தமாதிரி ஒரு இடத்தில செல்வராசாப் போடி கோயிலக் கட்டி அங்க லிங்கத்த வச்சி அந்தக் கோயிலப் பராமரிக்க கொஞ்ச ஆக்களயும் இருத்தி அவங்களுக்குச் சொந்தமா வயல் காணிகளையும் குடுத்து அந்த ஊருக்கு லிங்கபுரம் என்ற பேரையும் வெச்சாராம்.

## 32. பாட்டுவாழிக் குடிக்காரன்

மாவிலாறு நதியின் கிள ஓடுற நாலுபக்கமும் வயல்காடு சுத்திக் கிடக்கிற அல்லை இடதுகரை எண்ட கிராமத்தில அம்மனுக்குப் பாடுற பாட்டுவாழிக் குடிக்காரன் காத்தமுத்து கதிர்காமத்தம்பி வாழ்ந்து வந்தாராம். இவருக்குப் பசுபதி எண்ட தம்பி ஒருத்தனும் இருந்தான். இவன் சில செய்யிறதில கொஞ்சம் கைப்பழக்கமா இருந்தான். கதிர்காமத்தம்பிக்கு நாலு புள்ளையள். அதில ரெண்டு ஆம்பிளயும் ரெண்டு பொம்புளயும். இவர்ர மனவி தன்ட அஞ்சாவது புள்ளப்பேறு ஊட்டுக்குள்ளேயே செத்திட்டா. இவர் தனியாகத்தான் தனக்குச் சொந்தமான வயல்காட்டிலயும் பயிர் நிலத்திலயும் பயிர் செஞ்சி தன்ட பிள்ளயள வளத்து வந்தாராம். இவர்ர பயிர் நிலத்தில ஒரு வேப்ப மரத்துக்குக் கீழ ஒரு பெரிய கருங்கல்லொண்டு அவர் அறிஞ்ச காலத்தில இருந்தே கிடந்திச்சாம். அவர் அந்தக் கல்ல வேற இடத்துக்குக் கொண்டு போக நெறய தடவ பாத்திருக்கார். ஆனா அந்தக் கல்லு அசயல்லயாம். சரி அது அங்கேயே கிடக்கட்டும் எண்டு உட்டுத்தாராம்.

ஒரு நாள் இவர் வயல் காட்டில நெல்லப் போட்டுத்து இரவாப் போனதும் களைப்பில ஊட்ட போய் தூங்கிட்டாராம். அப்ப இவர்ர கனவுல ஒரு பொம்புள வந்து ''கதிர்காமா உனக்குச் சொந்தமான பயிர் நிலத்தில என்ட அடையாளம் வச்சிருக்கேன்'' என்று சொன்னாவாம். விடிஞ்சதும் கதிர்காமர் ஓடிப்போய் பயிர் வளவுக்குள்ள பாத்தா அங்க நிண்ட வேப்பமரம் நடுப்பகுதி புளந்து ஆவெண்டுத்து இருந்திச்சாம். கிட்டப்போய்ப் பாத்தா அதுக்குள்ள ஒரு சோடிச் சிலம்பும் வெள்ளநிறச் சாறியும் இருந்திச்சாம். இதக்கண்டு கதிர்காமர் தன்ர தம்பி பசுபதிட்ட சொல்ல அவன் அதப் பாத்துத்து இது நம்ம கண்ணகி அம்மாதான் எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லித்து அந்த வேப்பமரத்துக்குக் கீழ கிடந்த கல்லிலேயே சில செஞ்சி அம்மாவக் கும்பிடுவம் எண்டு சொல்லித்து அந்தக் கல்ல மெல்ல மெல்லச் சுத்தியலால தட்ட அது உடஞ்சித்தாம். இதக் கதிர்காமத்தம்பி பேயறஞ்ச மாதிரி பாத்துத்து நிண்டானாம். புறகு சில செஞ்சி முடிச்சதும் வேப்ப மரத்துக்குள்ள இருந்த சிலம்பையும் சாறியையும் எடுக்கப் புளந்த மரம் வழம போலத் திரும்பித்தாம். அதுக்குப் புறகு அந்த இடத்திலேயே ஒரு கொட்டகையப் போட்டு அந்தச் சாறியச் சிலைக்கு உடுத்து சிலம்பையும் கால்ல போட்டு பாட்டுவாழியான் குடியான் கதிர்காமத்தம்பிர பரம்பரை மட்டுமில்லாமல் அந்த ஊர்ச்சனமும் அல்லை இடதுகரை அம்மன வழிபட்டு வந்தாங்களாம்.

## 33. பாட்டுவாழியான் குடி

மூதூர் பிரதேசத்தில கங்கைவேலி எண்ட கிராமத்துக்குப் பக்கத்தில நிறைய வயல்காட்டுப் பகுதி கிடந்ததாம். அந்த இடத்தில இருந்த சனங்களில கூடுதலான ஆக்கள் வெள்ளாம செஞ்சிதான் தங்கட சீவியத்த நடத்தி வந்தாங்களாம். இந்த ஊர்ல பாட்டுவாழியான் எண்டொராளும் இருந்திருக்கார். இவருக்குச் சொந்தமா வயல் நிலங்கள் இல்ல. மாடுகளும் இல்ல. அவர் கடும் வறுமயில சீவிச்சாரு. ஆனா எவ்வளவு கஸ்டம் வந்தாலும் தீய வழிக்குப் போகாம நல்ல வழியிலதான் சம்பாதிப்பாராம். பண்ணக்காரங்கள்ர மாட்ட மேய்க்கிறதுதான் இவர்ர தொழிலாம். இவர் வயல்காட்டுப் பக்கம் மேச்சலுக்கு மாடுகள ஒதுக்கிற்றுப் போறப்ப ஒவ்வொரு நாளும் செந்தாமர மடுவுக்குப் போய் செந்தாமர பூவ ஆஞ்சி வயல்காட்டில இருக்கிற தேமா மரத்துக்குக் கீழ வச்சிற்று மாடுகள மேச்சலுக்கு விரட்டிற்று அந்தத் தேமா மரத்து நிழல்ல இருந்து அம்மனுக்குப் பாடல் பாடுறதுதான் இவர்ர வழக்கமாம். ஒரு நாள் இவர் வழக்கம் போல பூவ ஆஞ்சி வெச்சிற்று தேமா மரத்துக்குக் கீழ உட்காந்திருக்கிற நேரத்தில வட்டயில வேல செஞ்சாக்கள் தங்கட தங்கட வட்டய உழுதாங்க. இதப்பாத்துப் பாட்டுவாழியான் எனக்கும் சொந்தமா வயலும் மாடுகளும் முதலும் இருந்தா எண்ட ஊட்டிலயும் பசி பஞ்சம் இருக்காது எண்டு நினைச்சிற்று அப்படியே கண்ணயந்துவிட்டாராம். அப்ப அவர் ஒரு கனவு கண்டாராம். 'இந்தத் தேமா மரத்துக்குக் கீழ கயிறு இருக்கு. அத எடுத்துக்கொண்டு செந்தாமர மடுவுல மாடு கிடக்கு. நீ அங்க போய் நீலா பள பள எண்டு மாட்டக் கலச்சையெண்டா உண்ட மாடு வரும். அத நீ இந்தக் கயித்தால புணச்சி தேமா மரத்தின் இடப்பக்க வயற்காட்டின் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி உனக்கானது. அதை உழுது பயிச் செஞ்சி உன் பட்டினியப் போக்கு' என்டு ஒரு பெண் வடிவம் சொல்ல அதக் கேட்டுப் பாட்டுவாழியான் போய் தேமா மரத்துக்குக் கீழ பாத்தா மாடு புணைக்கும் கயிறு இருந்திச் சாம். அத் எடுத்திற்று செந்தாமர மடுவுக்குப் போய் நீலா பள பள எண்டு கலைக்க ரெண்டு மாடுகள் பாட்டுவாழியான் பக்கம் வர உடனே அதப் புணச்சி வயல் பக்கம் கொண்டுவர அந்த மாடுகள் தாங்களாகவே போய் தேமா மர இடதுபக்க வயல உழுதிற்று மாயமா மறஞ்சிற்றாம். புறகு பாட்டுவாழியான் வயல்ல நெல்லு நல்லா விளைஞ்சிற்று. அந்தத் தேமா மரத்துக்குக் கீழேயே அம்மனுக்குக் கோயிலக் கட்டி அவர்ர பரம்பரையே கோயிலப் பராமரிச்சி அம்மனுக்கான பூசைகளையும் செய்தது. அம்மனுக்கான பாட்டுக்களப் பாடுறதும் இந்தப் பாட்டுவாழியான் பரம்பராயினர்தான்.

பாட்டுவாழியான் முதன்முதல் அம்மனுக்குப் பாடி கோயில் அமைச் சத்தால பாட்டுவழி வந்தவன் பாட்டுவாழியான் என்னும் அம்மனுக்குச் சொந்தமான குடி உருவானது. பாட்டுவாழியான் அமைச்ச கோயில் நீலாப்பொள பத்தினியம்மன் ஆலயம். பாட்டுவாழியான் மாடுகள நீலா பள பள எண்டு கலச்சதால அந்தக் கோயில் நீலாப்பொள பத்தினியம்மன் கோயில் எனப்பட்டது.

## 34. கன்னன்குடா கண்ணகி கோயிலில் கள்ளர்கள் பிடிபட்ட கதை

1981 ஆம் ஆண்டு வியாழக்கிழமை, மார்கழி மாதம் நடுச்சாமம் ரெண்டு கள்ளனுகள் கன்னன்குடா கண்ணகி அம்பாளின் கோயிலுக்குள்ள இருந்த தங்க நகைகளையும் சாமானுகளையும் களவெடுக்க வந்தானுகள். கோயில் கூரையைக் கழட்டி உள்ள இறங்கி களவாடத் தொடங்கினானுகள். அப்போ கண்ணகி அம்மாள் ஒரு பொம்புள வடிவில ஊருக்குள்ள போய் ஐயரையும் வேற ஆக்களயும் எழுப்பி, விசயத்தச் சொன்னாவு. அவவே வழியும் காட்டி கோயில் வாயில் வர வந்து புறகு மறஞ்சி போயித்தாவு. அந்த ஊரவங்க கோயிலுக்குப் போய் ஒருவனைப் புடிச்சித்தாங்க. மற்றையவன் ஓடிப்பெயித்தான். ஓடிப்போனவனுக்கு வழி தெரியாமல் போக, போன இடத்தில அண்டு காலை வரயும் திகச்சிப்போய் நிண்டான். மறுநாள் விடியச்சாமம் ஊராக்கள் அவனையும் புடிச்சி வந்தாங்க. ரெண்டுபேரயும் ஊரவங்க சேர்ந்து அடியன்ன அடிச்சி பொலிஸில கொடுத்தாங்க. திருட வந்த கள்ளனுகளப் புடிக்க அம்மன்தான் அருள் செஞ்சாவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விளக்கக் குறிப்பு

கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலயத்தில் களவெடுக்க வந்த கள்வர்களை கண்ணகி அம்மாள் காட்டிக்கொடுத்து, அக்கள்வர்களைப் பிடிக்கச் செய்தமை பற்றி வழங்கி வருகின்ற இக்கதையை, 'கன்னன்குடாக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் கள்வர் பிடிபட்ட காவியம்' என்ற பெயரில் இவ்வூரைச் சேர்ந்த மா.சிதம்பரப்பிள்ளை பாடியுள்ளார்.

## 35. மாவேற்குடா பிள்ளையார் ஆலயம் பற்றிய கதை

ஆரம்பகாலத்தில இப்ப வண்ணாண்டசேன எண்டு சொல்லப்படுற இடத்தில போடிச்சி மனிசி எண்ட பொம்பிள ஒருவ இருந்தாவாம். வண்ணாண்டசேனய அந்தக்காலத்தில வேலாச்சிக்கிழவன் மடு எண்டுதான் சொல்லுவாங்களாம். அவட காலத்தில மாவற்குடாக் கோயிலில நடக்கும் திருவிழாவுக்கு பூசைப்பொட்டி கொண்டு போறது வழக்கமாம். ஒரு ராவு திருவுழாச் செய்றத்துக்கான சாமான் சிலத தலயில சுமந்துகொண்டு போயிரிக்காவு. அவ போன வழிர ரெண்டு பக்கமும் காடா இரிந்ததாம். இவ போகக்குள்ள காட்டுக்க நிண்ட ஆன அரிசிப் பொட்டியில தும்பிக்கையப் போட்டதாம். இவ பயந்து 'அரிசி' எண்டாவாம். அந்த ஆன அசையாம நிண்டதாம். என்ன காரணமெண்டா அரிசி ஆனய உறுக்கிற மந்திரமாம். புறகு இவ பூச முடிய ஊட்ட திரும்பி வரக்குள்ளயும் அந்த ஆன அப்பிடியே நிண்டதாம். புறகு அந்த ஆன அப்பிடியே இருந்துதான் இறந்ததாம். அந்தக்காலத்திலதான் நீலாவணயச் சேந்த ஆக்கள் மீன்பிடிக்கிறதுக்கு மாவற்குடாவுக்கு முன்னால இரிக்கிற கன்னக்குடா ஆத்திக்கு வாறது வழக்கம். ஒரு ராவு சரிசாமத்தில கொட்டு மேளம், குரவச் சத்தம் எல்லாம் கேட்டதாம். புறகு இவங்க அங்க போய் பாத்திரிக்காங்க திருவுழாச் செய்த தடயம் இருந்திரிக்கி. அங்கால பாத்தா தங்கவேல் ஒண்டும் வச்சி வணங்கப்பட்டிருந்ததாம். அவங்க அங்க இருந்த தங்கவேலயும் எடுத்துக்கொண்டு போய்த் தங்கட ஊரில தில்ல மரத்தில பாச்சிவச்சி வணங்கினாங்களாம்.

### விளக்கக் குறிப்பு

படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பழுகாமம் என்ற கிராமத்தை அண்மித்து அமைந்துள்ள இடமே மாவேற்குடா ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. செம்பக நாச்சி சிலம்பு கண்ட கதை

உலகநாச்சி மண்முனயிலதான் இருந்தவ. பொறகு கொக்கட்டிச்சோலயில லிங்கத்தக் கண்டு அதுக்குரிய ஏற்பாடுகளயெல்லாம் செஞ்சிபோட்டுத்தான் வண்ணக்குப் பொறுப்பயும் எடுத்திட்டு பொறகு வந்து திமில தீவில குடியேறியிருக்காவு. அங்க இருந்துதான் இங்க கன்னங்குடாவுக்கு வந்திருக்காவு. இஞ்ச இரிக்கிற பெரிய வளவு எண்ட வளவுக்குள்ளதான் அவ வந்து குடியேறினாவு. அப்ப அவ குடியேறின பொறகுதான் 13 குடும்பங்கள் வந்து குடியேறி இரிக்கி. அவதான் ஆரம்பம் எண்டு சொல்லப்படுது.

அந்தக்காலத்தில இங்க இந்த 13 குடும்பங்கள் இருந்தப்ப இதெல்லாம் காடாக இருந்தது. ஒரு மனிசியும் இன்னும் மூண்டு பொம்புளைகளும் கொள்ளி எடுக்க வந்திருக்காங்க. அப்பிடி வாற நேரத்தில இங்க தேத்தா மரத்தில இருந்த பட்ட கொள்ளிகள் இரிந்திக்கி. அதப் புறக்கிக் கொண்டிருக்கக்குள்ள செம்பக நாச்சி எண்ட பொம்புளட கண்ணிலதான் அந்த மரப் பொந்துக்குள்ள இருந்த சிலம்பொண்டு தெரிஞ்சிக்கி. அதக் கண்ட அவ மத்த ஆக்களயும் கூப்புட்டிருக்காவு. கூப்பிடுற நேரம் கூடப்போனவங்களும் வந்து பாத்திருக்காங்க. ஆனா அவங்கட கண்ணுக்கு அது தென்படல்ல. அவக்கு மட்டுந்தான் தெரிஞ்சது. முதல்ல செம்பகநாச்சி போய் பக்கத்து வளவில இருந்த உமயாத்த எண்ட மனிசியக் கூட்டித்து வந்தாவு. அவ வந்து பாத்தாவு அவவுக்குத் தெரிஞ்சது. அப்ப சரியெண்டு அதில ஒரு பந்தலப் போட்டாங்க. அந்த முக்கோணச் சிலம்பு இருந்த இடத்தில பந்தலொண்டப் போட்டாங்க. அதில 7 வரிசம் ஒரு நாளயச் சடங்கு செஞ்சி வந்தாங்க. ஆனா சடங்கு செய்தவிய மாரியம்மனுக்குத்தான் சடங்கு செஞ்சாங்க.

சடங்கு செஞ்சி வரக்குள்ள 7 வருசத்துக்குள்ள கோயில் ஒண்டக் கட்டிப்போட்டாங்க. அது சொறிக்கல் கட்டடம். இப்பயும் அந்தச் சொறிக்கல் கட்டடந்தான் இரிக்கி. புறகு உசத்திக் கட்டினது. அதுக்குள்ள அம்மனக் கொண்டு வச்சாங்க. அப்ப அந்த நேரம் வாக்கொண்டு கேட்டிக்கி. என்னெண்டு கேட்டா. 'நான் மாரியில்ல கண்ணகி' எண்டு. அதுக்குப் பொறகுதான் கண்ணகி வழிபாடு இங்க நடந்திரிக்கி. அந்தச் சிலம்ப வச்சி த்தான் கண்ணகி வழிபாட செஞ்சி வந்திரிக்காங்க. அதுக்குப் புறகு அம்மன வாத்திரிக்காங்க. சிலம்பக் கண்ட விசயம் ஐப்பசி மாதத்திலதான் நடந்தது. பொறகுதான் கண்ணகி எண்டு சொன்ன பொறகு வைகாசில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்தில் ஆடுறதுக்கு ஒழுங்க செஞ்சிருக்காங்க. இப்பயும் இங்க ஒரு பெரிய பந்தல் போட்டு ஐப்பசி மாதத்தில மாரியம்மனுக்குச் சடங்கு செய்யிறாங்க.

### விளக்கக் குறிப்பு

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த கிராமங்களுள் கன்னன்குடாவும் ஒன்று. இது மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ளது. இங்குள்ள கண்ணகி அம்மன் ஆலயம் மிகவும் பிரபலியம் வாய்ந்தது. ஆதியில் தேத்தா மரத்தடியில் செம்பக நாச்சியால் கண்டெடுக்கப்பட்ட சிலம்பே இவ்வாலயத்தில் இன்றும் உள்ளதாகக் கூறுவர். இக்கோயிலுடன் தொடர்புடைய சடங்குப் பாடல்களும் இக்கதையைக் கூறுகின்றன. இவ்வாலயத்திலுள்ள கண்ணகி அற்புதங்கள் நிகழ்த்தும் சக்தி வாய்ந்தவள் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் உண்டு.

இங்கு குறிப்பிடப்படும் உலக நாச்சி மண்முனைத் தேசத்தின் அரசியாகக் குறிப்பிடப்படுகிறார். இவர் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வரலாற்றுடனும் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறார்.

## 37. உலகநாச்சி மண்முனைக்கு வந்த கதை

குணசிங்கன் மட்டக்களப்ப ஆண்டு வாற காலத்தில கலிங்க ஓரிசா தேச அரசன் குகசேனண்ட மகள் உலகநாச்சி இலங்கைக்கி வந்தவவாம். அப்ப அவ புத்தர்ர தந்தத்தையும் சிவலிங்கத்தையும் தண்ட கூந்தலுக்குள்ள ஒளிச்சிக்கொண்டு தண்ட சகோதரன் உலகநாதனோடதான் இலங்கைக்கு வந்தாவாம். அப்பிடி வந்த அவ சிங்கள மன்னன் ஒருவனச் சந்திச்சி தான் வச்சிருந்த தந்தத்தக் கொடுத்துட்டு தனக்குக் குடியிருக்கிறதுக்கு சன நடமாட்டம் இல்லாத காடு நிறஞ்ச ஒரு இடம் வேணும் எண்டு கேட்டாவாம். அப்ப அந்த மன்னன் அவட வேண்டுகோள ஏத்துக்கொண்டு மட்டக்களப்ப ஆச்சி செய்த மன்னனுக்கு ஓல ஒண்ட எழுதி அத உலகநாச்சியிடமே கொடுத்தனுப்பினானாம். அந்த ஓலயப் பாத்த மட்டக்களப்பு மன்னன் உலகநாச்சிக்கு மண்ணேரிமுனைய கொடுத்து ஆக்களையும் அனுப்பி காடுகள வெட்டி மாளிகையும் கட்டிக்கொடுத்தானாம். அந்தக் காலத்திலதானாம் கொக்கட்டி மரத்த வெட்ட குருதி கொப்பிளிச்சதாம். மரத்த வெட்டின திகடன் அவட்ட போய் சொல்ல அவ வந்து பாத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கத்தையும் கண்டிட்டு கொத்துப்பந்தல் போடச் சொன்னவவாம். புறகு அவ களியாணம் கட்டி ரெண்டு புள்ளைகள் பொறந்திக்கி. அதில ஒண்டு பொம்புளப் புள்ள. அதுக்கு இந்நியாவில இருந்த கலிங்க மாகோன்ட தம்பி முறையான ஒருவனக் கட்டிக் கொடுத்தாவாம். அவக்குப் புள்ளைகள் இல்லயாம். அப்ப உலகநாச்சி நேந்து வெச்சாவாம். 'எண்ட புள்ளைக்குப் புள்ள பொறந்தா கொத்துப்பந்தலில இரிக்கிற கோயிலக் கட்டித்தாறன் எண்டு. புறகு உலகநாச்சிர மகளுக்குப் புள்ள புறந்திக்கி. அதுக்குப் புறகு அவ இந்தியாவில இருந்து இந்தக் கோயிலக் கட்ட நிறையச் சனத்தையும் சாமான்களையும் கட்டுமரத்தில ஏத்தி வந்தாவாம். புறகு கோயிலக் கட்டுவிச்சி அந்தக் கோயிலக் கும்பாபிசேகமும் செஞ்சி வெச்சாவாம்.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 'மண்முனை' தொன்மைமிக்க இராசதானியாக இருந்தது. மட்டக்களப்பு வரலாற்றில் பேசப்படுகின்ற ஒரு அரசியே உலகநாச்சி. இவள் கலிங்க ஒரிசா தேசத்தை ஆட்சி செய்த குகசேனனுடைய மகள் என்பதையும் அவள் கௌதமபுத்தருடைய தசனத்தை கூத்தலுக்குள் வைத்து மறைத்துக்கொண்டும் சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டும் தனது சகோதரன் உலகநாதனுடன் இலங்கைக்கு வந்த செய்தியை மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது (1998:47). இவ்வரசியின் காலத்திலேயே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் கொத்துப்பந்தலாக அமைக்கப்பட்டு பின்னர் கற்கட்டிடமாகக் கட்டப்பட்டதென்பதும் வழங்கிவரும் செய்தியாகும். கொக்கட்டிச்சோலை ஆலயம் குறித்துப் பாடப்பட்ட 'தான்தோன்றீச்சர அந்தாதி', 'கொக்கொட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் திருவூஞ்சல்' முதலான பாடல்களும் உலகநாச்சி கோயிலமைத்த செய்தியைத் தருகின்றன.

## 38. கொக்கட்டி மரத்தை வெட்ட குருதி கொப்பளித்த கதை

உலகநாச்சி மண்முனைக்கு வந்திருந்த காலத்தில திகடன் எண்ட வேடன் கொக்கட்டிச்சோலையில கொக்கட்டி மரத்த வெட்டினாப்ப அந்த மரத்திர அடியில இருந்து இரத்தம் வடிஞ்சிக்காம். என்ன இது மரத்தில இருந்து இரத்தம் வழியிது எண்டு நினச்ச அவன் கொஞ்ச நேரம் பாத்திரிக்கான். ரத்தம் நிக்காம வழிஞ்சிகொண்டுதான் இருந்திரிக்கி. அப்ப ஒடனே தன்னட்ட இருந்த சீலத் துணியால ரத்தம் வழிஞ்ச பக்கம் இறிக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்போட்டு உலகநாச்சிட்ட ஓடிப்போய் நடந்தத சொல்லியிரிக்கான். அவவும் ஒடனே அங்க போய் பாத்திரிக்காவு. தொட்டு மணந்து பார்த்திரிக்காவு. இரத்த வாடதான் எண்டு தெரிஞ்சிகொண்ட அவ இந்த இடத்தில ஏதோ அதிசயமான ஒண்டு இரிக்கணும் எண்டு நெனச்சி நல்லா கூர்ந்து பாத்தாவாம். அப்ப ஒரு சிவலிங்கம் அந்த மரத்தடியில இரிக்கிறத்த கண்ட அவ உடனே அந்த இடத்தில கொத்துப்பந்தல்[16] அமைக்க கட்டளை இட்டாவாம். அதுக்குப் பொறகு கொத்துப்பந்தலும் அமச்சி வழிபடத் தொடங்கினாங்களாம். பொறகுதானாம் அவ முன்னிண்டு கோயிலயும் கட்டின.

### விளக்கக் குறிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தித்திலிருந்து பதினான்கு கி.மீ. தொலைவில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. 'தானாகத் தோன்றிய லிங்கம்' என்பதற்கு இக்கதை கூறும் செய்தி சான்று பகருகின்றது. இவ்வாலயம் குறித்துப் பாடப்பட்ட பாடல்களில் இச்செய்தி முக்கியம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 39. சேனக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் கோயில்

அந்தக் காலத்தில கிட்டங்கி தொறமுகந்தான் இருந்தது. சேனக்குடிப்புக்கும் சொறிக்கல்முனைக்கும் எடையில றோட்டில்ல. ஆக்கள் பாதயிலதான் பயணம் செஞ்சாங்க. மட்டக்களப்புக்குக் கிட்டங்கி ஆத்தாலதான் போவாங்க. சொறிக்கல்முனயில முதல்ல கொல்லர்கள்தான் வாழ்ந்து வந்திருக்காங்க. இவயதான் தாங்க வணங்கிறதுக்கு காளி செல ஒண்ட வெச்சிக் கும்பிட்டு வந்தாங்க. இப்படி இருந்துவாற காலத்தில றோட்டில்லாததால போக்குவரத்தும் கொறைவு. கொல்லர்களுக்கும் தொழில் இல்லாமப் போயித்து. அவய சேனக்குடிப்புக்கு வந்து இப்ப கோயில் இரிக்கிற எடத்தில கம்பால ஒண்டக் கட்டிப் பக்கத்தில அந்தக் காளி செலைக்கி குடில் ஒண்டக் கட்டி கும்பிட்டு வந்தாங்க. இந்தக் குடில ஆயிலிய மரத்துக்குக் கீழதான் கட்டினாங்க. அதுக்குப் பொறகு தொழில் நல்லாப் போகிச்சாம்.

16 புராதன வணக்க முறையில் அல்லது கிராமிய வழிபாட்டு முறையில் கொத்துகளால் பந்தலமைத்து வழிபடுவது மரபாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ப கதிர்காமத்தில அடங்கியிருக்கிற பார்குடிவாவா இந்தியாவில இருந்து கதிர்காமத்துக்குப் போறதுக்கு இதால வாறாரு. அவரு ஒரு பிராமணி. அந்தக் காலத்தில றோட்டில்லாததால மட்டக்களப்பில இருந்து ஆத்தால கிட்டங்கித் தொறமுகத்துக்கு வந்திருக்காரு. அந்தக் காலத்தில நாய்ப்பட்டிமுன எண்ட ஊரு சேனக்குடிப்புத்தானாம். அங்கதான் கொஞ்சச் சனங்கள் இரிந்திரிக்கி. இந்தப் பகுதி நிலம வன்னிமட ஆச்சிக்குக் கீழதான் இரிந்திரிக்கி. பால்குடி வாவாவும் நிலம வன்னிமட ஊட்டதான் தங்கியிருந்தொடனே காலயில ஒழும்பிக் காலக் கடன முடிக்கிறதுக்கு அங்காலப் பக்கம் நடந்து போயிருக்கார். போகக்குள்ள அந்தக் காளிகோயில் செலயக் கண்டுத்தாரு. அதுர அற்புதத் தன்மய அறிஞ்சி வளச்சி இருக்கிற கொல்லச் சனங்கள்ர ஊட்ட போய் இத எப்படி பராமரிக்கிறங்க எண்டு கேட்டார். அப்ப அவய அவயிர வழிபாட்டு மொறயச் சொன்னாங்க.

பால்குடி வாவா ஞானி எண்டதால சொன்னாரு இப்படி நீங்க பூசிக்கப்படா எண்டுபோட்டு செலய எடுத்து கழுத்தில ஒரு யந்திரம் கீறி நெத்திலயும் யந்திரம் கீறி அம்மன வாலாயம் பண்ணி நேருக்க நேர கேட்டொடனே அது செரியான அகோரமா இருக்காம். இப்படி இருந்தா பூச செய்ய ஏலாது. எண்டுபோட்டு அம்மன்ட ரூபத்த மாத்தி ஒரு பொம்பிளயப்போல வந்த பொறகுதான் பூச செய்யலாம் எண்டு தீர்மாணிச்சி வெச்சாரு. பொறகு அந்தச் சனங்களிட்டச் சொன்னாரு இதுக்குப் பூச செய்யிற எண்டா கொல்லர்கள்தான் செய்யொணும் எண்டு கட்டள போட்டுத்து கதிர்காமத்துக்குப் போனாராம். இப்பவும் சடங்கு காலங்களில் கொல்லர்கள்தான் (பொற்கொல்லர்) செஞ்சி வாறாங்க.

**விளக்கக் குறிப்பு**

நற்பட்டிமுனையும் சேனைக்குடியிருப்பும் பக்கத்துப் பக்கத்து ஊர்கள். இவற்றுக்கும் சவளக்கடை, சொறிக்கல்முனை ஆகிய ஊர்களுக்குமிடையே மட்டக்களப்பு வாவி ஊடறுத்துச் செல்கின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னர் மட்டக்களப்பிலிருந்து இத்தகைய ஊர்களுக்கு வள்ளங்களில்தான் (பாதை என்று கூறுவர்) பயணம் செய்தனர். கிழக்கிலங்கையில் பொற்கொல்லரின் பிரதான வழிபாட்டு தெய்வமாக காளி கொள்ளப் பட்டுவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. பக்தஞானிக்கு எட்டாம் சடங்கு செய்ர கதை

கண்ணகி அம்மாள் மதுரைய எரிச்சிப்போட்டு வற்றாப்பளைக்குத்தானே வந்தவ. அந்தக் காலத்தில இருந்து கண்ணகி அம்மாளுக்கு வற்றாப்பளையில பொங்கல் பொங்கி படைச்சி வழிபடுற வழக்கம் இருந்து வருது. அப்பிடி வழிபட்டு வரேக்க இந்தியாவில இருந்து பக்தஞானி எண்ட ஒருவர் பத்ததிகளோடயும் ஏடுகளோடயும் வற்றாப்பளைக்கு வந்தாராம். அவருதான் பத்ததி நடமுறைகள கொண்டுவந்தவரு. கண்ணகி அம்மாளுக்கு எப்பிடி பூச செய்யவேணும் எண்ட விதிமுறைகள எல்லாம் ஒழுங்கமைச்சி கொடுத்து அவரு அங்க வாழ்ந்து வந்தாராம். அப்பிடி அவரு வாழ்ந்து வாற காலத்தில வயதாகிப்போய் ஒரு நாள் இறந்திட்டாராம். பேந்து அவரு இறக்க அவருக்கு முள்ளியவளயில கல்லற கட்டினவியள். கண்ணகி அம்மாளிட வைகாசிப் பொங்கல் வருமே! அது முடிய வாற எட்டாம் நாள் அவரின்ர கல்லறைக்கு ரொட்டி எல்லாம் சுட்டுப்படச்சி பூச செய்து வாறாங்க. ஏன் அவரின்ர கல்லறையில எட்டாஞ் சடங்கு செய்ர எண்ட உந்த விசயம் நிறையப்பேருக்குத் தெரியாது.

**விளக்கக் குறிப்பு**

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி மாத விசாகப் பொங்கலை அடுத்து வரும் எட்டாம் நாள் முள்ளியவளையில் உள்ள பக்தஞானியின் கல்லறையில் எட்டாம் நாள் வைரவர் வழிபாடு இடம்பெற்று வருகின்றது. தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே பன்னெடுங்காலமாக தொடர்புகள் இருந்துவருகின்றன. ஏடுகள் தொடர்பான பரிமாற்றமும் புலமைத்துவ உறவும் காலத்துக்குக்காலம் இடம்பெற்று வந்திருப்பதை அறியமுடிகிறது. இவ்வகையிலேயே பக்தஞானி தமிழ்நாட்டிலிருந்து வந்து வாழ்ந்த இக்கதையும் முக்கியம் பெறுகின்றது.

## 41. வற்றாப்பளைக்கு கண்ணகி அம்மன் வந்த கதை

பொய்க்குத்தம் சாட்டி கோவலன கொண்டதால கோபப்பட்டு தலவிரிகோலமாக பாண்டியண்ட அரண்மனக்கிப் போன கண்ணகி வழக்காடி சிலம்ப எறிஞ்சாவு. மன்னன் செத்துப் பொய்த்தான். அவண்ட மனிசியும் செத்திட்டா. கோபம் அடங்காம மதுரயயும் எரிச்சிப்போட்டு சரியான பசியோடயும் அடங்காத கோபத்தோடயும் வற்றாப்பள கடற்கரைக்கு வந்தாவு. அந்த நேரத்தில சின்னப்புள்ளைகள் கொஞ்சப்பேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்து கோயில் கட்டி பொங்கி படைச்சி விளையாடுரத கண்டாவு. கிழவி வடிவத்தில வந்த அவவ கண்ட புள்ளைகள் என்ன பாட்டி எண்டாங்களாம். எனக்குப் பசிக்கிது எண்டாவாம். நாங்க பொங்கிச் சாப்பிட்டுத்தமே பாட்டி எண்டு சொல்ல எனக்குப் பொங்கித்தாங்கோவன் எண்டாவாம். பேந்து பிள்ளைகள் பொங்கினாங்களாம். அப்ப நீங்க பூச செஞ்சமாதிரி இப்பயும் செய்யுங்க எண்டாவாம். விளக்குக்கு எண்ண இல்லயே பாட்டி எண்டாங்களாம். கடலில போய் தண்ணி அள்ளி வைத்து அதில கொளுத்துங்க எரியும் எண்டாவாம். பிள்ளைகளும் போய் தண்ணிய எடுத்து வந்து விளக்கு வைக்க விளக்கு எரிஞ்சிக்காம். அதிசயத்தக்கண்ட புள்ளைகள் விடுவினமே! நீங்க ஆரு பாட்டி எண்டு கேட்டு தலையப் பாத்தாங்களாம். தலையில எல்லாம் நிறைய கண் தெரிஞ்சிக்காம். புள்ளைகளுக்கு பயம் வந்தித்தாம். அந்தநேரத்தில நான் மதுரயில இருந்து வாறன். எண்ட பேரு கண்ணகி. நீங்க இந்த வைகாசி மாதத்தில ஒவ்வொரு வருசமும் பொங்கி வழிபட்டா நான் இங்க வந்து அது முடிய கரையால நடந்து கதிர்காமத்துக்குப் போவன் எண்டு சொல்லிப்போட்டு பொய்த்தாவாம். பேந்துதான் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில பொங்கல் செய்து வழிபட்டு அது முடிய கதிர்காமத்திக்கு கரையோரமாக நடந்து போற வழக்கமும் வந்திருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# அரசியல் சார்ந்த கதைகள்

## 42. ஆலப்புள்ள

விக்கிரமராசசிங்கன் எண்ட ஒரு மன்னன் கண்டிய ஆச்சி செஞ்சான். அப்ப வெள்ளக்கார ஆக்கள் இலங்கையில பல இடங்களப் புடிச்சி ஆச்சி செஞ்சிகொண்டிருந்தாங்க. அவங்களால கண்டியப் புடிக்க முடியல்ல. அவண்ட படக்கி ஆலப்புள்ள எண்டவன் படத்தளபதியா இருந்தான். அவனுக்கு ஒரு மருமகள். அழகான பொம்புள. அவள்ர தலமுடி 60 அடி நீளமாம். அவள்ர பேரு பூசணியாள். ஒரு நாள் மன்னன் ஆலப்புள்ளயிர ஊட்ட போனப்ப பூசணியாள் குளிச்சிக்கொண்டிருந்தாள். அப்ப மன்னன் அவள்ர காலக் கண்டுத்தான். அவள்ர கால் இவ்வளவு அழகா இருந்தா அவள் எப்பிடி அழகா இருப்பாள் எண்டு எண்ணி அவளக் களியாணம் கட்ட ஆசப்பட்டான்.

ஆலப்புள்ள தான் பூசணியாளக் கட்டுறத விரும்பமாட்டான் எண்டதால ஆலப்புள்ளய ஒரு நாள் வெள்ளக்காரனுகளோட போர் செய்யிறதுக்கு அனுப்பிப்போட்டு அந்த நேரம் பாத்து பூசணியாள்ர ஊட்டுக்கு அவளக் கொண்டுபோக வந்தான். ஆனா அவள் அதுக்கு மறுத்துப்போட்டு அவனிட்ட இருந்து தப்பி ஓடித்தாள். புறகு ஆலப்புள்ளயிர புள்ளைகளப் புடிச்சிக் கொண்டுபோட்டு அவங்கள உரல்ல போட்டு தாய உலக்கயால குத்த உட்டான். புறகு அவளயும் கொல செஞ்சான்.

மன்னனிட்ட இருந்து தப்பி மாமனாரிட்ட ஓடின பூசணியாள் ஆலப்புள்ள இல்லாததால தன்ட தலயில தேசிக்காயக் கட்டிப்போட்டு கடல்ல உழுந்து செத்துப்பெயித்தாள். புறகு மாமனார் அவள்ர உடலக் கண்டுபுடிச்சி அடக்கம் செஞ்சாரு. புறகு ஆலப்புள்ள வெள்ளக்காரனுகளோட சேந்துத்தாரு. வெள்ளக்காரனுகளயும் கூட்டிக்கொண்டு அவரு கண்டிக்கு தண்ட ஊட்ட வந்தப்ப அங்க மன்னன் தண்ட பொஞ்சாதி புள்ள குட்டிகளக் கொல செஞ்சிபோட்டு இருந்தான். அப்ப ஆலப்புள்ள போய் அவனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடிச்சி அடிச்சிக் கொல செஞ்சான். புறகு வெள்ளக்காரனுகள் ஆலப்புள்ளயத் தங்கட ஊருக்குக் கூட்டிப் போவதாகக் கூறிக் கூட்டிப் போனாங்க. கடல்ல கப்பல்ல போய்க்கொண்டிருக்கக்குள்ள வெள்ளக்கார ஆக்கள் பாத்தாங்க இவன் கடும் ஆள். மன்னனையே கொல செஞ்சவன். மன்னனக் காட்டிக் கொடுத்தவன். இவன உசிரோட உடக் கூடா எண்டுபோட்டு அவன கடல்ல தள்ளிச் சாகடிச்சிப் போட்டாங்க.

## விளக்கக் குறிப்பு

கண்டியை ஆட்சி செய்த கடைசி மன்னனாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பற்றிய மேற்படி கதையை கண்டிராசன் ஒப்பாரி, கண்டிராசன் ஊஞ்சல், கண்டிராசன் கூத்துப்பாடல்கள் என்பனவும் விரிவாகக் கூறுகின்றன.

ஆங்கிலேயரை எதிர்த்து நின்ற ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பெண்ணாசை கொண்டதனால் ஏற்பட்ட தீய விளைவுகளையும் இறுதியில் விக்கிரமராச சிங்கன் அவனது தளபதி ஆலப்பிள்ளையால் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டதையும் இக்கதைப் பாடல்கள் விபரிக்கின்றன. கண்டிராசன் ஒப்பாரியின்படி விக்கிரமராசசிங்கன் பிடிபட்டபோது ஆலப்பிள்ளை அவனைக் கொடூரமாகத் தாக்கினான் என்றும் அப்போது ஆங்கிலேயர் அவனைக் காப்பாற்றிக் கைது செய்தனர் என்றும் பின்னர் ஆலப்பிள்ளையைக் கப்பலில் கொண்டுசென்று நடுக்கடலில் மூழ்கவைத்தனர் என்றும் கூறப்படுகின்றது.

## 43. அறுமக்குட்டிப் போடி (வடிவம் 1)

கிரான்குளத்தில பொறந்து அம்பிளாந்துறப் பொம்பளயக் களியாணம் முடிச்சித்தான் அறுமக்குட்டிப் போடி அம்பிளாந்துறைக்கு வந்தவரு. கிரான்குளத்தில இருந்து வந்திருந்தாலும் அவரு அம்பிளாந்துறயில பெரிய தலக்கட்டா இருந்தவரு. மட்டக்களப்பில வன்னிம ஆச்சி நடந்த காலத்தில அறுமக்குட்டிப் போடிதான் கிழக்கு மாகாணத்தில இருந்த இடங்களுக்கெல்லாம் பெரிய ஆள். அவர்ர சொல்லுக்குத்தான் எல்லாரும் நடக்கொணும். அவரு போடுறதுதான் சட்டமா இருந்திக்கு. அவரு வேகமான ஆள். கிரான்குளம், அம்பிளாந்துறையில சனங்களக் குடியேத்தி வெச்சவரு அவர்தான். இவரெண்டா குஞ்சிலாப்போடி வன்னியனாருக்கும் பயந்தான். இவர்ர காலத்திலதான் அம்பிளாந்துற புள்ளயார் கோயில் கட்டப்பட்ட. அவர்ர சொல்லுப்படிதான் எல்லாம் நடந்த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமில்ல வெள்ளக்காரண்ட ஆச்சிக் காலத்தில இஞ்ச அம்பிளாந்துறயில அவருக்கு எதுப்பு வந்துத்து. அவரக் கொல்றதுக்கு எதுத்து வந்த அஞ்சாறு பேரு வெள்ளக்காரனுகள அடிச்சித் தாட்டுப்போட்டு கண்டியில போய் ஒழிச்சித்து இருந்தவராம். அவரு அம்பிளாந்துறயில பெரிய ஆளா இருந்ததுக்கு அடயாளமா பறப்பத்தண்ணன் வச்சிருந்த இராச மோளத்துல அறுமக்குட்டிப் போடி எண்டு அவருட பேரு எழுதியிருந்த. இப்ப அந்த ராசமோளத்த அவனுகள் வித்துத் திண்டுத்தானுகள்.

**விளக்கக் குறிப்பு**

கண்டி மன்னரின் ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு இருந்தபோது மட்டக்களப்பில் மிகச் செல்வாக்குடன் இருந்தவர், அறுமக்குட்டிப்போடி. அறுமக்குட்டிப் போடியின் காலத்தில் வன்னிமைப் பதவியில் இருந்தவர் குஞ்சிலாப்போடி வன்னியன் ஆவார்.

## 44. அறுமக்குட்டிப் போடி (வடிவம் - 2)

ஒல்லாந்தர் காலத்தில மட்டக்களப்பில பெரிய அரசியல் வெல்வாக்கோட இருந்தவரு அறுமக்குட்டிப்போடி. அவர்ர தம்பியும் அப்பிடித்தான். அப்ப மட்டக்களப்ப வடக்கு, தெக்கு எண்டு ரெண்டு பகுதியாப் பிரிச்சிருந்தாங்க. அதில வடக்குப் பகுதி அறுமக்குட்டிப் போடிர பொறுப்பிலயும் தெக்குப் பகுதி அவர்ர தம்பி கந்தப்போடிர பொறுப்பிலயும் கொடுக்கப்பட்டிருந்திக்காம். அப்பிடி இருக்கக்குள்ள இந்தப் போடிமார் ஒல்லாந்தருக்கு ஒழுங்காகக் கணக்குவழக்குகளக் காட்டுறதில்லயாம். சில கொலைகள், சீர்கேடுகளும் நடந்திக்காம். அதனால ஒல்லாந்தர் போடிமாரக் கண்காணிக்கிறதுக்கும் விசாரண செய்யிறதுக்கும் ரெண்டு பேர அனுப்பினாங்களாம். விசயமெல்லாம் புடிபட்டிரும் எண்டுபோட்டுத்தானாம் இந்த ரெண்டு பேரயும் அறுமக்குட்டிப்போடி கொல செஞ்சவராம். இந்தக் கொலயப் புடிக்கிறதுக்கு ஒல்லாந்தர் எவ்வளவோ முயச்சியெல்லாம் எடுத்தும் புடிக்க ஏலாமப் பொயித்தாம்.

## 45. அறுமக்குட்டிப்போடி (வடிவம் 3)

அறுமக்குட்டிப்போடி எண்டு ஒருவர் வாழ்ந்தார். இவர் காலிங்கா குடி. செரியான பலசாலி, கனக்கக் கோயில்கள கட்டி இருக்காரு, அறிவுள்ளவரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறுமக்குட்டிப் போடிக்கு பல பொஞ்சாதிமார் இருந்திருக்கிறாங்க. இவருக்கு அம்பிளாந்துற, கிராங்குளம் எண்டு பல ஊர்களில பொஞ் சாதிமாரு இருந்திரிக்காங்க. அவங்கட பேரு தெரியா. ஆனா மகன் மண்முனப்போடி எண்டு தெரியும். இவரிட மகள குஞ்சித்தம்பி வன்னியனார் களியாணம் செஞ்சிருந்தாரு. இந்த அறுமக்குட்டிப்போடி இருந்த இடம் அம்பிளாந்துறையில பெரிய குடியிருப்புப் பகுதியில இரிக்கிற கிட்டங்கி வளவு. பறயன் சித்திரை வருட கைமுழுத்தத்திற்கு வந்து கோயிலடியில முதல் தவில் அடிப்பான். பொறகு இந்த கிட்டங்கி வளவில அடிப்பான். இந்த நடமுற பழய காலமிருந்து வருது. அது அரசர் களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையாம் எண்டு சொல்லுவாங்க. அதுக்கு பொறகுதான் ஊடு ஊடா அடிப்பானுகளாம். இந்த கிட்டங்கி வளவில அறுமக்குட்டிப்போடி, குஞ்சிலியாப்போடி, கந்தப்போடி எண்டு இருந்திருக்காங்க. இத வளச்சிக் காடு இருந்ததாம். வெள்ளக்காறத் தொர இங்கு வந்துதான் அவங்களச் சந்திப்பானாம்.

குஞ்சித்தம்பி வன்னியண்ட அப்பனுக்கும் அறுமக்குட்டிப்போடிக்கும் செரியான போட்டி இருந்து வந்திச்சாம். இத சமன் செய்ரத்துக்காக குஞ்சித்தம்பி வன்னியனார அறுமக்குட்டிப்போடிர தங்கச்சிக்குக் களியாணம் முடிச்சி வச்சாங்களாம். அறுமக்குட்டிப்போடி அவருக்குச் சரியான சீதனமும் கொடுத்தாராம்.

## 46. குஞ்சிலயாப்போடி கட்டின மதில்

அம்பிளாந்துறையில குஞ்சிலயாப்போடி வன்னியனார் வாழ்ந்தவரு. அவரிட வயல பண்டிகளிட்ட இருந்து காப்பாத்த மதில கட்டினாரு. அவருக்கு 1111 ஏக்கரும் ஆத்திலும் ஒரு சங்கிலிப் பூமி[1] இருந்தது. இவர் வெள்ளக்காறனோட நல்ல தொடர்பு கொண்டிருந்தாரு. வெள்ளக்காறனுகள் இவருக்கு நல்ல காசி குடுத்தானுகள். அவரும் வேதத்துக்கு மாறினார். அப்படியான இவர் பெரிய உயரத்தில சொறிக் கல்லால மதிலைக் கட்டினாரு. அதோட அகலம் கூடிய மதிலாயும் இருந்திக்கி. கிட்டடிலையும் அது இருந்திச்சி. அந்த மதில் கூடாமப் போய் இருந்திச்சி. அத ஒடைச்சி சொறிக்கல்ல எடுத்து ஊட்டுக்கு அத்திவாரம் போட்டாங்க ஆக்கள். அது எப்பெண்டா அரசாங்கம் 4000 ரூபா ஊடு

1 சங்கிலி என்பது அப்போதைய அளவுத்திட்டங்களில் ஒன்றாகும். குஞ்சிலியாப் போடியின் காணி எல்லையினுள் குறிப்பிட்ட தூரம் (சங்கிலி) அம்பிளாந்துறை ஆற்றிலும் அடங்குவதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்ட காசி கொடுத்திச்சே அப்பதான். ஊட்ட கட்டுறதுக்கு அதுக்கு சீமெந்துக் கல்லுவெட்ட சொறிக்கல்ல ஒடைச்சி எடுத்து கல்லு வெட்டினாங்க. அப்ப எப்பிடி பெரிய மதிலா இருந்திருக்கும் பாருங்கோவன். முத்திலிங்கப் பிள்ளையார் கோயில் இரிக்கே அதால நீண்டு சவக்காலையால போய் கன்னாக்காடு வர அவளவுக்கு நீளம். அந்த மதில் பழுகாமத்தாலையும் போனெண்டு எங்கட பெரியாக்கள் கதச்சத கேள்விப்பட்டிருக்கிறன். பண்டிக்கு மதில் கட்டின பெரிய வன்னியனார் இவரு என்று இப்பயும் சொல்லுவாங்க.

## 47. வில்லுக்குளம்

அறுமக்குட்டிப்போடியாரிட காலந் தொடக்கம் வில்லுக்குளம் இருக்கு. இவரிர காலத்திலதான் 1100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில வேளாம செய்யப்பட்டிருக்கி. அதுக்கு வில்லுக்குளத்திலிருந்துதான் தண்ணி பாச்சியிரிக்காங்க. பொறகு அம்பிளாந்துறையிலிருந்த வன்னியர்கள்தானாம் இந்தக் குளத்தக் காட்டினாங்களாம். ஆறுதல வாய்க்கால அறுமக்குட்டிப் போடியும், கானடி வாய்க்கால வன்னியர்களும் வெட்டிக் கன்னங்குடாவுக்கு தண்ணி பாய்ச்சினாங்களாம்.

குஞ்சிலயாப்போடி வன்னியரிட காலத்தில வில்லுக்குளம் ஒடைஞ்சி போற நெலையில காணப்பட்டதாம். குளம் ஒடைஞ்சா பண்டாரியாவெளி, அரசடித்தீவு கிராமங்கள் எல்லாம் வெள்ளத்தில தாண்டுபோகும் எண்டத அறிஞ்ச குஞ்சிலாப்போடி வன்னியனாரு குளக்கட்டிர ஒரு பகுதிய வெட்டி தண்ணியப் போக்காட்டினாராம். அப்ப வெள்ளக்காறத்துர அங்க வந்து கோபப்பட்டு ‘ஆரு இந்த வேலையச் செஞ்சது? இத எப்பிடிக்கட்டிர? எண்டு ஆத்திரத்தில கேட்டிருக்காரு. அதக்கேட்ட வன்னியனாரு நான் தான் செஞ்சன் அந்த கொளத்த நானே திருத்தித்தாறன் எண்டு சொன்னாராம். வன்னியனாரிட கதயக் கேட்ட தொர எதுவும் பேசல்லையாம்.

பொறகு அவரு அம்பிளாந்துறையில உள்ளவங்களக் கொண்டு தோளால மண்ணச் சுமந்து உடச்ச கொளக்கட்டக் கட்டினாராம். அந்த இடத்த வந்து பாத்த வெள்ளக்காரத்தொர அதிற்சியுற்றாராம். சந்தோசத்துடன் இருந்த தொர நான் என்ன செய்ய வேண்டும் எண்டு குஞ்சித் தம்பி வன்னியனாரிட்ட கேட்டாராம். அதுக்கு வன்னியனாரு சொன்னாராம் அம்பிளாந்துற வயல்களுக்கே முதல் பாய்ச்சல் கொடுக்க வேண்டும் எண்டு. அத ஏத்துக்கொண்ட துர அந்தக்காலம் மொதலே அவரிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோள நிறைவேற்றினாராம். அண்டக்கியிருந்து இண்டைக்கு வரயும் வில்லுக்குளத்திர முதல் பாய்ச்சல் நீர் அம்பிளாந்துறை வயல்களுக்குத்தான் பாயிது.

இனிமேல் வில்லுக்குளம் ஒடைக்காம இரிக்கவேணும் எண்டு குஞ்சிலாப்போடி வன்னியனார் இப்ப இரிக்கிற வில்லுக்கட்டுக்கு அருகில காணப்படுர பிள்ளையார நிறுத்தி வணங்கி இருக்கார். அந்தக்காலத்தில இருந்து இண்டைக்கி வரையும் வில்லுக்கட்டுக்கு எந்த பொல்லாப்பும் இல்ல. வில்லுக்குளம் கட்டுரதுக்காக தம்பட்டையிலிலுந்து வேலையாட்கள் வந்தாங்களாம். அவங்க ரெண்டு பகுதியாகப் பிரிஞ்சி கடுக்காமுனச் சோதயன் கட்டுப் பகுதியிலயும் வில்லுக்குள புளியமுனப் பகுதியிலயும் இருந்தாங்களாம். அவங்க வில்லுக்குள வேல முடிஞ்சும் போகல்லயாம். அங்கயே இருந்திட்டாங்களாம். அவங்க ஆடல் பாடலில வல்லவங்களாம். வைலா பாடல்களப்பாடி சந்தோசமா இங்கயே இருந்தாங்களாம். அப்ப கடுக்காமுன மக்கள் குஞ்சிலயாப்போடி வன்னியனாரிட்ட கூற, அவர் குதிர வண்டியில வந்து நீங்க எல்லாரும் நாளக்கி காலயில இங்க இருந்து வெளிக்கிட்டு போகவேணும் எண்டு சொன்னாராம். அவங்களும் அவர்ர சொல்லக் கேட்டு குடும்பத்தோட எல்லாச் சாமான் சக்கட்டுக்களயும் ஏத்தித்தி தம்பட்டக்கு போனாங்களாம்.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வில்லுக்குளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் நீர் நெற்காணிகளுக்கு மட்டுமன்றி கடுக்காமுனை, வால்கட்டு மக்களால் குளிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

## 48. மண்முனைப்போடியின் வயலைப் பறிச்ச கதை

அறுமக்குட்டிப்போடியார்ர மகன் மண்முனப்போடிக்கு பல ஏக்கர் பூமிய அவர் எழுதிக் கொடுத்தாராம். இந்த பூமியப் பறித்தெடுக்க வேண்டும் எண்டு குஞ்சிலயாப்போடி வன்னியனாரு திட்டம் போட்டாராம். இவர மட்டக்களப்பில இரிக்கிற நீதி மண்டத்தில வழக்குப் போட்டாராம். மண்முனப்போடி அரசாங்க நிலங்கள வச்சிரிக்காரு, அந்த நிலங்கள் எல்லாம் பறிக்கப்பட வேண்டும் எண்டுதான் வழக்கப் போட்டாராம். இந்த வழக்கு திட்டமிட்டுத்தான் செய்யப்பட்டதாம். நீதி மண்டம் அவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் வழக்குக்கு வரச் சொல்லிச்சாம். அவரும் நீதிமண்டம் செல் ரதுக்காக பூமிகளின்ட உறுதிகள் இருக்கும் ஏடுகள பொட்டகத்திற்கு மேல எடுத்து வச்சிப்போட்டு சாமிர ஊட்டுக்க போய் சாமியக் கும்பிட்டாராம். இவரு சாமி கும்பிட குறைந்தது ரெண்டு மணித்தியாலமாவது தேவைப்படுமாம். அந்த நேரம் பாத்து வெள்ளக்கார ஆயாவைப் பயன்படுத்தி உறுதிக்கட்டு எல்லாத்தயும் களவெடுத்தாராம் வன்னியனாரு. இந்த ஆயா குஞ்சித்தம்பி வன்னியன்ட வீட்டு வேலைக்காறி, மண்முனைப்போடி வீட்டாருடன் நல்ல தொடர்புள்ளவள். இரண்டு வீடும் பக்கத்தில இருந்தது. களவாடிய உறுதிய நெல்லுடன் வைத்து அவித்து எழுத்துக்களையெல்லாம் அழித்துப் புறகு உறுதிகளை அவருடைய வீட்டிலேயே போட்டாங்களாம். உறுதியக் காணல்ல எண்டு மனத்தாபப்பட்டு நீதிமண்டம் போன மண்முனைப்போடிற்ற நீதிமன்றம் உன்னிட்ட இரிக்கிர பூமிர ஆதாரத்தக் காட்டு எண்டாங்களாம். அவரும் நடந்ததைக் கூறினாராம். அத ஏக்காத நீதிபதி அவர்ர பூமிகள அரசாங்கத்திர பூமியாக அறிவித்தாராம். பொறகு தந்திரமாக குஞ்சிலயாப்போடி வன்னியனாரிட பேருக்கு மாத்தினாராம். அந்தப் பூமிகள் எல்லாம் அரச பூமியாக மாற்றப்பட்டிக்கி. அத அறிவிக்க நீதிமண்டத்தச் சுத்தி தவில் அடிச்சி அறிவிச்சாங்களாம். பாவம் மண்முனைப்போடிய ஒன்றர நாள் சிறைக்குள்ள அடச்சி வைச் சாங்களாம். பொறகு அவர் மனத்தாக்கத்தால பணம் ஒண்டும் இல்லாம கடும் கஸ்டப்பட்டு திரிஞ்சாராம்.

**விளக்கக் குறிப்பு**

அறுமக்குட்டிப்போடி, மண்முனைப்போடி, குஞ்சிலயாப்போடி முதலானோர் நிலப்பிரபுக்களாகக் காணப்பட்டவர்கள். மட்டக்களப்பில் இவர்களைப் போடி பரம்பரை என்று குறிப்பிடுவர். தமது சொத்தா திக்கத்தாலும் ஆளுமையினாலும் தேச அதிபதிகளாகவும் மேலதிகாரிகளுடன் தொடர்புடையவர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் வாழ்ந்தவர்கள். இவர்களுக்கிடையே சொத்தாதிக்கப் போட்டிகள் நடந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. ராசமேளம் பற்றிய கதை

அம்பிளாந்துறையில இருந்த பறையாக்களிட தலைவனான மூப்பன் பத்தனுக்கு அறுமக்குட்டிப்போடியால ராசமேளம் ஒண்டு கொடுக்கப்பட்டிருந்திச்சாம். அந்த மேளத்த அவங்க பரம்பரை பரம்பரையா மரண ஊடுகளுக்குக் கொண்டு போய் வாறது வழக்கமாம். இந்த மேளத்த மரண ஊடுகளுக்கு எடுத்துப்போற நோக்கம் என்னெண்டா அறுமக்குட்டிப்போடி மரணவீட்டில தங்களோட இருக்கிறாரு எண்டிறத ஞாபகப்படுத்துறதுக்காம்.அறுமக்குட்டிப் போடியால வழங்கப்பட்ட அதிகாரத்தினாலதான் இங்க வந்திரிக்கிறம் எண்டதையும் வலியுறுத்துமாம். இந்த ராச மேளத்துக்கு வெள்ளைத்துணி சுத்தியிரிக்குமாம். அத மூப்பனே கொண்டு வருவாராம். அத தனியா பாய் விரிச்சித்தானாம் வெக்கிற. இந்த மேளத்த அவங்க மேளமடிக்கிற எல்லா இடங்களுக்கும் கொண்டுபோறது வழக்கமாம். இந்த மேளத்தில 'அறுமக்குட்டிப் போடியால் வழங்கப்பட்டது' எண்டு எழுதப்பட்டிருக்குமாம். ஊரில ஆரும் செத்தா இராசமேளம் உறுமுற சத்தமும் கேட்குமாம். இத மூப்பன் உணந்து கொண்டு ஆயத்தங்களைச் செய்வாராம்.

இந்த மேளம் வெங்கலத்தால் செய்யப்பட்டதாம். கனக்கத் துண்டு வெங்கலங்களக் கொண்டு பொருத்தப்பட்டதாக இருந்திச்சாம். அதால துண்டு துண்டாகவும் பிரிக்கலாமாம். மூப்பன் பத்தன் வறுமையில இருந்தாலும் அந்த மேளத்த பாதுகாத்து வந்தாராம். ஒருநாள் பத்தன் இல்லாத நேரத்தில இவர்ர மகள் பஞ்சத்தால இரும்பு வாங்கிற ஒருவனுக்கு வித்துப்போட்டாளாமே. மூப்பன் பத்தன் விசயத்த அறிஞ்சி பலருக்கும் செல்லி ஆரவாரப்பட்டு அவனத் தேடியும் அவன் அகப்படாம துறையால அக்கரப்பட்டு பொய்த்தானாம். அவன் மேளத்த கொண்டு போனத நிறையப்பேரு கண்டவங்களாம். ஆனால், அவர்களுக்கு இந்த மேளம் ஆர்ர எண்டு தெரியாதாம். மூப்பன் பத்தன் ராசமேளத்த எழந்திட்டமே எண்டு செரியான கவலயில இருந்தாராம்.

## 50. வெள்ளக்காரனுக்குக் குளவி குத்தினது

போத்துக்கேய வெள்ளக்காரனுகள் இலங்கய ஆச்சி செய்யக்குள்ள சைவ ஆக்கள்ர கோயில்கள எல்லாம் ஒடச்சி வந்தானுகளாம். மட்டக்களப்பிலயும் முக்கிய கோயில்களையெல்லாம் ஒடச்சானுகளாம். ஒரு நாள் மண்டூர் முருகன் கோயிலயும் ஒடக்கிறதுக்கு ஆயுதங்கள், சாமானெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துத்துப் படயா வந்தானுகளாம். அப்ப முருகன் கருங்கொளவியள ஏவினாராம். அந்தக் கொளவிகள் வெள்ளக்காரனுகள தொரத்தித் தொரத்திக் குத்தவும் வலி தாங்கமுடியாம சிதறி ஓடின அவனுகள் கையில கொண்டுவந்திருந்த வாள், துவக்கு எல்லாத்தையும் போட்டுத்து ஓடினானுகளாம். மறுகா அவனுகள் உட்டுத்துப் போன துவக்கு, வாள் ஆயுதங்கள எடுத்துக்கொண்டு வந்து கோயிலுக்குள்ள வெச்சாங்களாம். அவனுகள் உட்டுப்போட்டு ஓடின துவக்கும், வாளும் இப்பயும் கோயிலுக்க இரிக்கி.

**விளக்கக் குறிப்பு**

மண்டூர் முருகன் ஆலயத்தினுள் போத்துக்கேயர் கைவிட்டுச் சென்றதாகக் கூறப்படும் ஒரு துப்பாக்கியும் ஒரு வாளும் இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## 51. நந்தி புல் தின்ற கதை

போத்துக்கேயன் கோயில எல்லாம் ஒடைச்சிக்கொண்டு வந்த காலம். அப்ப ஒருநாள் போத்துக்கேய தளபதி ஒருவன் கொக்கட்டிச்சோலக் கோயிலுக்குப் போனானாம். அங்க நந்தியின் செலயக் கண்ட அவன் உன் தெய்வம் உண்மையாக இருந்தால் இந்த நந்தி புல்லுச் சாப்பிடுமா எண்டு பூசாரியிட்ட கேக்க அவரும் ஒடனே ஆம் எண்டு சொன்னாராம். அப்ப இப்ப இந்தப் புல்ல தின்னச் சொல்லுபாப்பம் எண்டானாம். இண்டைக்குச் சாப்பிட்டுத்து எண்டு சொல்ல, அப்படியெண்டால் நான் நாளைக்கு வரக்குள்ள அது புல் சாப்பிடணும் இல்லையெண்டால் கோயிலையும் ஒடைச்சி ஒன்னையையும் கொண்டுபோடுவன் எண்டு சொல்லிப்போட்டு போனானாம். பூசாரிக்கு நடுக்கம் புடிச்சித்து. அவரு பயந்துபோய் கடவுளே நீதானப்பா புல்லத்தின்ன வச்சி காப்பாத்தணும் எண்டு வணங்கிப்போட்டு அண்டிரவு நித்திரைக்குப் போனாராம். அப்ப கனவில சிவன் வந்து நீ பயப்படாத. நாளைக்கி அவன் வர நீ நந்திக்குப் புல்லக்கொடு அது சாப்பிடும் எண்டு சொன்னாராம். அதப்போல அடுத்த நாள் வெள்ளக்காரன் வந்து எங்கடா பூசாரி எங்க புல்லக்கொடு சாப் பிடட்டும் எண்டானாம். பூசாரி புல்ல நந்திக்கு நீட்ட அது உடனே வாலச் சுறுட்டி எழும்பி புல்லச் சாப்பிட்டுத்து சாணியும் போட்டுத்து படுத்ததாம். இதக்கண்ட வெள்ளக்காரன் பயந்துபோய் அங்க இருந்து ஓடிப்போனானாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு**

கொக்கட்டிச் சோலை மட்டக்களப்புப் படுவான்கரையில் அமைந்துள்ள பழைய கிராமம். மண்முனைப் பாலத்தைத் தாண்டி மகிழடித்தீவு, முதலைக்குடா கிராமங்களை ஊடறுத்துச் செல்லும்போது வரும் கிராமம். இது மட்டக்களப்பு நகரிலிருந்து பதினான்கு கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு அமைந்துள்ள சிவன் ஆலயம் தேசத்துக் கோயிலாகக் கொள்ளப்படுகின்றது. இங்கு குடிமுறைத் திருவிழாவும் தேரோட்டமும் சிறப்பாக நடைபெறுகின்றது. கிழக்கிலங்கையிலுள்ள ஒரேயொரு தேரோடும் சிவன் கோயில் என்ற சிறப்பும் இதற்கு உண்டு. இக்கோயில் பண்டைய அரசர்களின் மதிப்பும் மானியமும் பெற்றது. மேற்படி கதையைப் பிரதிபலிப்பதாக அக்கோயிலுக்கு முன்பாக ஒரு புல் சாப்பிடும் தோற்றத்தில் நந்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் மீது பாடப்பட்ட பாடல்கள் அனைத்திலும் இக்கதையுடன் தொடர்புடைய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

## 52. கண்ணகி அம்மன் பனிச்சை மரத்தை ஆட்டிய கதை (வடிவம்-1)

போத்துக்கேய வெள்ளக்காரனுகள் இலங்கைய ஆச்சி செஞ்ச காலத்தில முல்லத்தீவுப் பகுதியும் அவயளின் ஆச்சிக்குக் கிழ இருந்துதாம். அவயள் தங்கட சமயத்தத் தவிர வேற எந்தச் சமயத்தையும் மதிக்கிறதில்லயாம். நெவில் எண்ட போத்துக்கேய அதிகாரி குதிரயில வற்றாப்பள கோயிலத் தாண்டிப் போற போதெல்லாம் கோயிலயும் அம்மனயும் பரிகாசம் செய்வானாம். அப்படி வரேக்க ஒருநாள் கோயிலுக்குப் பக்கத்தில போய் இருந்து அந்தக் கோயில் பூசாரியப் பாத்து ''எங்கே உங்க கடவுள் அதிசயங்களெல்லாம் செய்வதாகக் கேள்விப்பட்டேன். அது உண்ம எண்டா இப்ப செஞ்சி காட்டட்டும்'' எண்டு அகங்காரத்தோட கூறினானாம். பேந்து அம்மனத் தூற்றியவாறு கோயிலுக்குப் பக்கத்தில இருந்த பனிச்ச மரத்தின்ர அடியில போய் குதிரயின் மேல இருந்தானாம்.

அம்மனின் கட்டளைக்கு இணங்க பூசாரியும் நீராடிவிட்டு வேப்பிலயுடன் வெள்ளிப் பிரம்பும் ஓர் செம்பு நீரும் கொண்டுவந்து அந்தப் பனிச்சமரத்தின் மேல வெள்ளிப் பிரம்பால தட்டினவராம். அப்ப காத்து பலமா வீசிக்காம். அந்தப் பனிச்ச மரம் குலுங்கத் தொடங்கித்தாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்ர காய், பழமெல்லாம் அவன்மேல உழுந்து தாக்கத் தொடங்கித்தாம். அப்ப அதத் தாங்க முடியாம (அவன் மயங்கி அந்த இடத்திலயே உழுந்துத்தான் என்றும் கூறுவர்.) அந்தப் போத்துக்கேய அதிகாரி நந்திக்கடலின் பக்கமாக குதிரையுடன் மிக வேகமாகப் பாய்ந்தோடினானாம். ஒண்டர மயில் தூரம் வர அந்தப் பனிச்சங்காய்கள் அவனப் பின்தொடந்து தாக்கினவாம். அப்படி அவன்ர குதிர பாஞ்ச இடத்த "குதிரை பாய்ந்தோடிய இறக்கம்" எண்டு கூறுவினம். ஆனா இப்ப அந்தப் பேரு மறஞ்சி போட்டுது. அண்டயில இருந்து இண்ட வரயிலயும் அந்த மரம் காய்க்கிறதும் இல்லயாம் பழுக்கிறதுமில்லயாம். அதனால இந்தக் கோயிலின்ர தலவிருச்சமாக பனிச்சமரந்தான் இரிக்கி.

### விளக்கக் குறிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை என்ற இடத்தில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் ஆலயம் வன்னிப் பிரதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதம் பொங்கல் திருவிழா நடைபெறும். இதனை விசாகப்பொங்கல் என்று அழைப்பர். இங்கு இரண்டு வாரங்களாக நடைபெறும் இப்பொங்கல் விழாவின் தொடக்க நிகழ்வுகள் அனைத்தும் முள்ளியவளையிலுள்ள காட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று பின்னர் இறுதி நாள் நிகழ்வு வற்றாப்பளையில் இடம்பெறுவது வழக்கமாக உள்ளது. வைகாசி விசாகத்தை அடுத்து வரும் திங்கட்கிழமை வற்றாப்பளைக் கண்ணகி அம்மனுக்குப் பொங்கல் நடைபெறுவது வழக்கம்.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பனிச்சையாடிய பாடற்சிந்து (2003) கோயிலை இடிக்க வந்த பறங்கிக்காரத் தலைவனை பனிச்சை மரத்தை ஆட்டி, பனிச்சங்காயால் ஓட ஓட எறிந்து பயமுறுத்தி கடைசியில் அவனை அடிபணிய வைத்த இக்கதையினை அடிப்படையாக வைத்துப் பாடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53. கண்ணகி அம்மன் பனிச்சை மரத்தை ஆட்டிய கதை (வடிவம் - 2)

பறங்கியர்கள் இலங்கைய ஆண்ட காலத்தில பறங்கித் தலைவன் குதிரையில் வந்து வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வாசலில் நின்று 'ஆரடா பூசாரி கேளடா நீ அம்மனின் அருள் ஏதும் இருக்கிறதோ? அதிசயம் ஏதும் உண்டோ? அதை அறிவதற்காகவே இங்கே வந்தேன்' என்று திமிரோடு கேட்டு கோயிலின் தெற்கே நின்ற பனிச்சை மரத்தினை உங்கள் அம்மன் ஆட்டுவித்தால்தான் அருளுடைய அம்மன் என்று ஆதரிப்பேன். இல்லையேல் ஆலயத்தையும் அழித்து உன் தலையையும் எடுப்பேன்' என்று கூறினான். அதனைக் கேட்ட பூசாரியார் 'கண்ணகி அம்மனின் அருளினாலே மரத்தை ஆட்டுவதற்கு ஒரு தவணை தரவேண்டும். அடுத்த திங்கட் கிழமை வாரும். நான் பனிச்சை மரத்தை ஆட்டுகின்றேன் பாரும்' என்று கூறினார். பூசாரியின் மனமுருகுதலைக் கேட்டு கண்ணகை அம்மாள் 'நன்று நீ அஞ்சாதே மகனே அஞ்சாதே. நான் அவன் அஞ்ச மரத்தை ஆட்டி வைப்பேன். திங்கட் கிழமை அன்று காலையில் நீ எழுந்து முழுகிக் குளித்து, செம்பிலே தண்ணீர் எடுத்து, வேப்பிலையினையும் கையிலே எடுத்து, வெள்ளிப்பிரம்பினை கையிலே எடுத்து, மரத்தடியில் சென்று நிற்பாய். அப்போது பறங்கி வருவான். வந்து பனிச்சையை ஆட்டும் என்பான். உடனே செம்பில் இருந்த தண்ணீரைத் தெளித்து, வேப்பிலையை மரத்தின் மீது சாத்தி, வெள்ளிப்பிரம்பினால் தட்ட பனிச்சை மரம் வேகமாக ஆடும்' என்று கனவில வந்து கூறினாள். பூசாரியார் கண்ட கனவினை நினைத்துக்கொண்டு எழுந்து குளித்து பறங்கியை எதிர்பார்த்திருந்தார். பறங்கியும் வந்து 'உந்தனது அம்மனின் அருள்தன்னைக் காட்டு. பனிச்சை மரமதனை நீ ஆட்டு' என்று கூறினான். பூசாரியார் அம்மனை மனதில் நினைத்து, செம்பில் வைத்திருந்த நீரை மரத்தில் தெளித்து, வேப்பிலையினை அம்மரத்தில் சாத்தி அம்மாளைத் துதித்து பிரம்பால் அடித்து ஆடு என்று வேண்டினார். அவ்வேளை பனிச்சை அதன் கிளைகளை அசைத்து, உலகிலுள்ளவர்கள் அஞ்சும்படியாக ஓசை எழுப்பி, கிளை வீசி, இலை வீசி தாமாகவே நின்று ஆடத் தொடங்கியது. குனிந்தும், நிமிர்ந்தும், வளைந்தும், குலுங்கிக் குலுங்கி ஆடியது. பனிச்சை மரம் வானம்தட்டிர தூரம் எழும்பி ஆட, பூசாரியாரும் சேர்ந்து ஆட, பறங்கி வந்ததே பிழை என்று மனங் கலங்கி, குதிரையில் ஏறி ஓடுவதற்குத் தயாராகினான். அப்போது ஓயாது பனிச்சங் காய்கள் எல்லாம் அவன் மீது வீசப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறங்கி பதறினான்; கதறினான். ஆனாலும் எறி ஓயவில்லை. இனி ஏது வழி என்று ஏங்கித் தவித்தான். பனிச்சை குண்டுபோல் காய்களை வீச, குதிரை நீரினூடாக பறங்கியைச் சுமந்து ஓடியது. நீண்ட தூரத்திற்கு பனிச்சை மரமும் காய்களை எறிந்தது. இனி எனது உயிர் போகும் என்று மயங்க, நடுக்கல், காய்ச்சல், அம்மை நோய் அனைத்தும் அவனுக்கு ஏற்பட அம்மனைச் சோதிக்கச் சென்று, அம்மனின் கோபத்திற்கு ஆட்பட்டேனே என்று அழுதான். 'பாவி நான் செய்த பிழையைப் பொறுத்தருளம்மா. பனிச்சை எறியாதே பணித்தருளுமம்மா. நான் பொன்னாலே அவல் மாலை ஒன்று காணிக்கையாகச் செய்து தாறேன். அறியாமலே நான் இந்தப் பிழையைச் செய்தேன். மன்னித்துக் கொள்ளவேண்டும் தாயே' என்று கூற அம்மனும் இரங்கி, அவனுக்கு ஏற்படுத்திய நோய்களை விலக்கிக் கொண்டாள். பனிச்சை எறிகளையும் நிறுத்திக்கொள்ள அவனும் அவல்மாலை சாற்றி, பணிந்து அம்மையே காப்பாய் என்று கூறினான்.

## 54. சேனைக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் கோயில்

அந்தக் காலத்தில சொறிக்கல்முனயில இருபத்தஞ்சி குடும்பம் அளவிலதான் இருந்தாங்களாம். அவய எல்லாரும் சைவக் குடும்பங்கள்தானாம். இப்படி இருந்துவாற காலத்தில வெள்ளக்காரனுகள் இலங்கைக்கி வந்துட்டானுகளாம். இவனுகள் இங்க இருந்த தமிழாக்கள எல்லாம் வேதத்துக்கு மாறச்சொல்லி கரச்சல்படுத்தத் தொடங்கித்தானுகள். அப்ப சனங்கள் கோயிலுக்குக் கும்பிடப் போக ஏலாதாம். கோயிலுக்குப் போற ஆக்களுக்கெல்லாம் குதிரயில வந்து சவுக்கால அடிச்சி துரத்தினானுகளாம். கோயில்களயும் இடிச்சி தரமட்டமாக்கிப் போட்டானுகளாம். சில சனங்களுக்குக் காசையும் அதையும் இதையும் குடுத்து வேதத்தில மாத்திப்போட்டானுகள். இப்படி இடிச்சித் தள்ளின கோயிலில இந்தக் காளிகோயிலும் ஒண்டு. அந்தக் காலத்தில சேனக்குடியிருப்பு ஆக்களும் நாய்ப்பட்டிமுன ஆக்களும் ஒத்துமையா இருந்ததால சேனக்குடியிருப்புல காளிகோயில் செலயக் கொண்டுவந்து அதுக்கொரு கோயிலும் கட்டி கும்பிட்டு வந்தாங்களாம்.

இப்படி இரிக்கக்குள்ள இந்தக் காளி அகோர காளியாக இருந்ததால சாபம் போட்டிட்டாவு. அதால சொறிக்கல்முனையில இருந்த ஆக்களுக்குப் பாம்பு கடிக்கத் தொடங்கிற்றாம். செல ஆக்கள் அம்மன் கோதாரி வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்டு போயித்தாங்களாம். பொறக்கிற புள்ளயளுக்கெல்லாம் மொகத்தில கரிபுடிச்சாப்போல பொறந்திச்சாம்.

**விளக்கக் குறிப்பு**

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கல்முனை நகருக்கு மேற்குப் பக்கமாக அருகருகாமையில் அமைந்துள்ள கிராமங்களே சொறிக்கல்முனை, சேனக்குடியிருப்பு, நற்பட்டிமுனை (நாய்ப்பட்டிமுனை) ஆகிய கிராமங்களாகும். சொறிக்கல்முனை கிறிஸ்தவ கிராமமாக விளங்குகின்றது.

## 55. ஏழு கன்னிகள்

போத்துக்கேய ஆட்சிக் காலத்தில வட்டுவாகலில் அக்கரை எண்ட இடத்தில ஏழு கன்னிப் பொம்புளப் புள்ளைகள் வாழ்ந்து வந்தாங்க. அவயள் சிறந்த கன்னிப் பொம்புளைகளாக திகழ்ந்தாங்க.

இந்த ஏழு கன்னிப் புள்ளைகளும் நீராடுறதுக்காகவும் பாண்டு விளையாடுறதுக்காகவும் தினமும் வட்டுவாகல் கடற்கரைக்கு வந்துபோவாங்க. இப்படி வந்துபோறத அவதானிச்ச ஒரு போத்துக்கேய அதிகாரி அவயள பலாற்காரம் செய்யிறதுக்கு முயச்சி செஞ்சான். அவன்ட பிடியில இருந்து விடுபடுறதுக்கு அந்த ஏழு பேரும் வட்டுவாகலின் கடற்கரைப் பகுதியில் தற்கொல செஞ்சிகொண்டாங்க.

பேந்து வட்டுவாகலில் உள்ள ஒரு பூசாரியின்ர கனவில தோன்றி தமக்கு ஆலயம் அமச்சி பொங்கல் செய்யும்படி கூறினாங்களாம். அன்று தொடக்கம் இண்டை வரைக்கும் ஆனி மாசத்தில பொங்கல் செய்வதோட அண்டைய தினத்தில பாண்டியும் விளையாடப்படுது. அப்படி பொங்கல் செய்யாம உட்டா இந்த ஊரில உள்ளவியளுக்கு தீமையெல்லாம் ஏற்படும்.

## 56. சீமானின் கொலை

பதினஞ்சாம் கொளனியில முன்ன துறைநீலாவண ஆக்கள்தான் குடியேறி இருந்தாங்க. அப்ப அங்க ஆக்களும் பெரிசாகக் குடியேறல்ல. வாடிகட்டித்து கொஞ்சப்பேர்தான் இருந்து வெள்ளாமச் செஞ்சிகொண்டிருந்தாங்க. அவங்க மாட்டுப்பட்டி வச்சிருந்தாங்க. அதனால அவங்க கோணாவளயில மாட்டுப்பட்டிகள கட்டினாங்க. அப்ப பதினஞ்சாம் கொளனியில கடகிட ஒண்டுமில்ல. அம்பாறயில இருந்து சீமான் எண்ட ஒரு சிங்கள ஆள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தோட இஞ்ச வந்து தேத்தண்ணிக் கடயொண்டப் போட்டிருந்தான். அங்கதான் வெள்ளாமச் செய்யிற அக்கஎெல்லாம் சாமான் சக்கட்டுகள வாங்குவாங்க. அவன் நல்ல ஆள்தான். அந்தக் காலத்திலதான் இந்த பகுதிகளில கொளனி ஊடுகள அரசாங்கம் கட்டிக்கொண்டிருந்திக்கி.

1956 ஆம் ஆண்டு சிங்களக் கலவரமொண்டு வந்திக்கி. அம்பாறயில இருந்து சிங்களவனுகள் மண்டூரில இருந்த முருகன் கோயில உடக்கிறதுக்கும் அங்க இருக்கிற தமிழாக்களக் கொல்றதுக்கும் ஆயுதங்களோட வந்தானுகள். அத அறிஞ்ச மண்டூருல இருந்த சனங்கஎெல்லாம் ஆத்தக் கடந்து குறுமண்வெளி ஊருக்கு ஓடினாங்க. நாங்களும் அங்கதான் போயிருந்தம். வந்த சிங்களவனுகள் சீமாண்ட ஊட்டிலதான் வந்து தங்கி தமிழாக்களத் துரத்தவும் கொல்லவும் வந்தாங்க. ஆனா மொதல்ல அவங்க மண்டூருக்கு வராம அக்கம் பக்கம் தமிழ் கொளனிகளுக்குள்ள வாடிகளில இருந்த தமிழ் ஆக்களக் கொல்றதுக்குப் போனாங்க. அந்தநேரத்தில பதினஞ்சாம் கொளனியில இருந்த நீலாவணயாக்கள் இத அறிஞ்சி சீமான்ட ஊட்டுக்குப் போயிப் பாத்தப்ப சீமாண்ட ஊட்டில நூறுபேருக்கு கோப்பயில இறச்சிக் கறியும் சோறும் போட்டு விருந்து கொடுக்க ஏற்பாடு செஞ்சிருந்ததக் கண்டாங்க. இவன்தான் சிங்களவனுகளக் கூட்டி வந்திருக்கான் எண்டத அறிஞ்சி அவனில ஆத்திரப்பட்டு சோத்துக் கோப்பைகளயும் அள்ளி எறிஞ்சி, கடயயும் கொத்தினதோட சமயல் வேலகளச் செஞ்ச சீமான்ட ரெண்டு தஞ்கச்சிமாரயும் சுடுறதுக்குப் போக அவங்க பயந்துபோய் பாய்க்கட்டுக்குள்ள ஒழிச்சித்தாங்க. ஆனா அவங்களப் புடிச்சிச் சுடப்போக அந்தப் பொம்புளைகள் சுடவேணாம் எண்டு செல்லிக் கெஞ்சினாங்க. ஆனா போன தமிழாக்கள் கோவத்தில அவங்களச் சுட்டுக் கொண்டு போட்டாங்க.

அப்ப சீமான் தப்பி ஓடிப் போக போன ஆக்கள் அவனத் திரத்திச் சுட்டுப் புடிச்சாங்க. ஆனா அவனுக்குத் துவக்குத் தோட்டாச் சன்னம் ஏறல்லயாம். ஏனெண்டா அவன் வெடி ஏறாம் மந்திரம் ஓதி இடுப்பில அச்சரக் கூடு கட்டியிருந்தானாம். அப்ப அவண்ட கையில கிடந்த முக்காப்பவுண் தங்க மோதிரத்தக் கழட்டி துவக்குக் குழலுக்க போட்டு சுடவுந்தானாம் நெஞ்சில குண்டு ஏறிச் செத்தானாம்.

குளனிப்பக்கம் போன சிங்களவனுகள் மத்தியானச் சோத்தத் திண்டுத்து புறகு மண்டூருக்குப் போக சீமான்ட ஊட்டுக்கு வந்து பாத்தா சீமான்ட கடயெல்லாம் உடஞ்சி சீமானும் அவன்ட தஞ்கச்சிமாரும் செத்துக்கிடந்ததக் கண்டானுகளாம். இதக்கண்டு பயந்த சிங்களவனுகள் பயந்துபோய் புறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூருக்கு வரல்லயாம். ஒடன சவங்களயும் ஏத்திக்கொண்டு அம்பாறைக்கிப் போயித்தானுகள். அவன் சாகாம இருந்திருந்தா இஞ்ச இருந்த தமிழ்ச் சனமெல்லாம் அழிஞ்சிருக்கும். சீமான் செத்து அடுத்த நாள்தான் குறுமண்வெளியில இருந்து சனங்களெல்லாம் ஊட்டுக்கு திரும்பின.

**விளக்கக் குறிப்பு**

1949 இல் கல்லோயாத் திட்டத்தின்கீழ் கிழக்கிலங்கையின் தென்புறத்தில் பாரிய சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. அப்பிரதேசம் பின் அம்பாறை எனப் பெயர் சூட்டப்பட்டது. அதேவேளை அதை மையப்படுத்தியதாக பல சிறு சிங்கள, தமிழ்க் குடியேற்றக் கிராமங்களும் (கொலனி) உருவாக்கப்பட்டன. பதினைந்தாம் கொலனி, பதின்மூன்றாம் கொலனி, பதினான்காம் கொலனி, நாணமடு, ஆனைகட்டியவெளி, நெடியவட்டை, சின்னவத்தை முதலானவை தமிழ்க் குடியேற்றக் கிராமங்களில் சில. இவை மண்டூருக்கு அண்மையில் -மண்டூருக்கும் அம்பாறைக்கும் இடையில் அமைந்துள்ளன. இப்பிரதேசங்களில் உள்ள தமிழ்க் கிராமங்களில் சீமானின் கொலை பற்றிய கதை பரவலாக நிலவுகின்றது.

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களின்போது கல்லோயாக் குடியேற்றத்தை மையப்படுத்திய தமிழ்க் கிராமங்கள் இனவாதிகளால் தாக்கப்பட்டன. இதனைப் பின்வரும் கூற்றும் ஆதாரப்படுத்துகின்றது.

''ஆறு குடியேற்றங்கள் தமிழருக்கு ஒதுக்கப்பட்டபோதும் 1956 யூன் 5 ஆம் திகதியன்று வெடித்த இனக்கலவரங்களின்போது அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர். அநேக தமிழர் சூறையாடுகின்ற சிங்களக் காடையர்களினால் கொல்லப்பட்டனர் அல்லது ஊனமாக்கப்பட்டனர்'' (மனோகரன், ஆ. க., 2008: 119-22) இதனுடைய ஒரு விளைவையே மேற்படி கதை எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 57. சிங்களவர் விரண்டோடியது

தம்பாப்புள்ள எண்டு ஒருவர் மாணிக்கப் புள்ளயாரடியில இருந்தார். அவர் ஒரு அய்யர் மட்டுமில்ல கடும் மந்திவாதியும்கூட. அவர் அய்யர் பரம்பரயச் சேந்தவர். அவர்ர அப்பன் யாழ்ப்பாணத்தில இருந்து வந்த ஒரு அய்யர். மண்டூரில ஒரு பொம்புளயக் களியாணம் செஞ்சாரு. அவர்ர புள்ளதான் தம்பாப்புள்ள. இவங்கட கத்தறயில வந்தவங்கள மண்டூரில குருக்கள் கத்தற எண்டு செல்லுவாங்க.

சீமானச் சுட்டு அடுத்த நாள் பதினாறாம் கொளனியில இருந்த சிங்கள ஆக்கள் மண்டூருக்கு ஆயுதங்களோட வந்துகொண்டிருந்தாங்க. அவங்க பதினாறாம் கொளனியில இருந்து பதினாலாங் கொளனிச் சந்தியால வந்துகொண்டிருந்தாங்க. அடுத்த ஊரு மாணிக்கப் புள்ளயாரடி. இத தம்பாப்புள்ள அறிஞ்சாரு. ஒடனே றோட்டில வந்து நிண்டாரு. சிங்களவனுகள் முன்னால வாறானுகள். அவரு அவனுகளுக்கு முன்ன போனாரு. மந்திரத்தச் செல்லி காலால நிலத்தில உதச்சாரு.[2] பெரிய பெரிய ஆக்கள், பெரிய பெரிய மூக்கோட்ட, வில்லம்போடயும் ஆயதங்களோடயும் படயெடுத்து தங்களுக்கு எதிரால ஒரு பட வாறது போல சிங்களவனுகளுக்குத் தெரிஞ்சிக்கி. இதக் கண்ட ஒடனே வந்த சிங்களவனுகள் பயந்து சிதறி ஓடினானுகள். அது மண்டூருக் கந்தண்ட விளயாட்டுத்தான். அது நடக்கல்ல எண்டா அவனுகள் மண்டூர அழிச்சிருப்பானுகள்.

### விளக்கக் குறிப்பு

மண்டூருக்குத் தென் கிழக்குப் பக்கமாக சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிராமம் மாணிக்கப் பிள்ளையாரடியாகும். மண்டூர் நாகன்சோலை என்பது இதன் பழைய பெயராகும்.

## 58. அம்மாள் கதவைத் திறந்த கதை

தொண்ணூறாம் ஆண்டு ஆமி வந்தாப்ப எல்லாரும் பயத்தில அங்கையும் இங்கையும் அடைக்கலம் புகுந்திட்டாங்க. அப்ப செட்டிபாளையத்திக்கு வந்த ஆமி கண்ணகி அம்மாளிண்ட கதவ திறக்கிறதுக்கு கன முயற்சி எடுத்து கதவ உடைச்சிருக்கிறானுகள். ஆனா உள்ளுக்க போக முடியல்ல. ஆமி போனவுடனே கட்டாடியார் போய் கதவ தொட்டுப் பாத்தாராம்.

---

2 சபிக்கும் மந்தி உச்சாடனத்தின் இறுதியில் காலால் நிலத்தில் உதைப்பதாகக் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவின்ட பூட்டு எல்லாம் உடைஞ்சி இருந்திருக்கு. தள்ளிப் பார்த்திருக்காரு திறபடல்ல. அப்ப அம்மாளுக்கு என்ன நடந்திருக்கெண்டு தெரியாம இருக்கே என்று கதவ திறம்மா எண்டு கதவ தட்டினாராம் கதவு திறபட்டிச் சாம். அவனுகள் கதவ உடைச்சிப் போட்டானுகள். ஆனா உள்ள போகல்ல. அம்மாளின்ற சக்தி கதவ திறக்க விடாம தடுத்து வச்சிருந்திருக்கு. அந்த ஆமிக்காரனுகள் ஊட்ட போய் சேரல்லயாம். இடையில நடந்த சண்டையில செத்துப் போனானுகளாம்.

### விளக்கக் குறிப்பு

இனப்போர் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழர் பிரதேசங்களில் பல இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டன; அழிக்கப்பட்டன. 1990களில் இத்தகைய அசம்பாவிதங்கள் அதிகம் நடந்தேறின. இத்தகைய நிகழ்வுகள் பற்றிய மக்களின் மனவுணர்வின் வெளிப்பாடாக இக்கதை அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# ஊர்கள்– ஊர்ச்சம்பவங்கள், தனிமனிதர் பற்றிய கதைகள்

## 59. நாய்ப்பட்டிமுன

அந்தக் காலத்தில நற்பட்டிமுனக் கிராமம் வெள்ளாம செய்யிற பூமியும் நல்ல தண்ணி வசதியும் இருந்ததால நெல்லு நல்லா விளஞ்சிச்சி. அதால சனங்க நல்ல செல்வந்தத்தோட சீவிச்சாங்க. இப்படி இருந்துவாற காலத்துல ஊருல களவு போகத் தொடங்கித்து. அதனால சனங்கள் ஊட்டுக்கொரு நாய வளத்தாங்க. இப்படி வளத்தொடனே ஊட்டுக்கு நாலும் அஞ்சுமாப் போயித்து. அதனால கிளவனான நாய் எல்லாத்தையும் கால ஒண்டில அடச்சி வச்சாங்க. நாய் சொந்தக்காராக்கள் வேளைக்கி வேள சோத்த வெச்சி அதுகள் கக்கூசிக்கிப் போறதுக்குத் தொறந்து உடுவாங்களாம். அப்ப அதுகள் ஒரு கொளத்துக்கு ஓடிப்போய் அங்க தங்கட எசமான்மாரக் கண்டு வாலாட்டுமாம். அதனால அந்தக் கொளத்த வாலாட்டியான் கொளம் எம்பாங்க.

இப்படி இருக்கக்குள்ள ஒரு வெள்ளக்காறன் வாறான். வந்து பாத்தான் நாய் பட்டியா அடச்சிக் கிடக்கு. என்னெண்டு ஆக்களிட்டக் கேக்க சனம் நாய்ப்பட்டி எண்டாங்க. அதனால அவன் அந்த ஊருக்கு நாய்ப்பட்டிமுன எனப் பேரவச்சான். புறகு அந்தப் பேரு மருவி நற்பட்டிமுன எண்ட பேரு வந்தது.

## 60. சித்தாண்டி ஊர்

சிகண்டி முனியும் அவர்ர சீடர்கள் ரெண்டு பேரும் கதிர்காமத்துக்கு யாத்திர போக வரக்குள்ள இப்ப இரிக்கிற முச்சந்திப் புள்ளயாரடியில ஒரு ஆன அவங்கள அடிக்க வந்திச்சாம். உடன சிகண்டி முனி அந்த ஆனைக்கு முன்னுக்கு ஒரு இலய எறிஞ்சாராம். உடன அந்த இல வேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிச்சாம். அதக்கண்ட ஆன திரும்பிப் பொயித்தாம். புறகு அவங்கட யாத்திரய தொடங்கக்குள்ள வேலத் தாண்டினா அவங்களுக்குக் கண் தெரியாமப் பொயித்தாம். வேலுக்கு இங்கால வந்தா கண் தெரியுமாம். புறகு அவங்க அங்க சிலகாலம் தங்கியிருந்து சித்து வேலைகளச் செஞ்சி அந்த இடத்த ஆண்டதால அந்த இடத்துக்குச் சித்தாண்டி எண்ட பேருவந்திச்சாம்.

**விளக்கக் குறிப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று (செங்கலடி) பிரதேச செயலாளர் பிரிவில் சித்தாண்டிக் கிராமம் அமைந்துள்ளது. இங்கு பிரசித்திபெற்ற முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் கிழக்கிலங்கைத் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. மட்டக்களப்பிலுள்ள பழமை வாய்ந்த பல ஆலயங்களின் ஆரம்ப வரலாறுகள் வேல் வழிபாடு பற்றியனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 61. மண்டூர்

மண்டூரில அந்தக் காலத்தில வேட ஆக்கள்தான் வாழ்ந்தவங்க. இதெல்லாம் காட்டுப் பிரதேசமாகத்தான் இருந்த. முக்கியமா மண்டு மரங்கள் இஞ்ச கூட இருந்த. நான் அறிஞ்ச காலத்திலேயே நிறய மண்டு மரங்கள் நிண்ட. இந்த மண்டு மரத்திர கொட்டய ஆக்கள் இடிச்சிப் புட்டும் அவிச்சித் திண்ட. இப்பிடி மண்டு மரங்கள் நிறஞ்சி இருந்ததாலதான் இந்த ஊர மண்டூர் எண்டு அழச்சாங்களாம். அதோட அந்தக் காலத்தில மண்டு நாகன் எண்ட மன்னன் இந்த ஊரில இருந்து ஆச்சி செஞ்சவனாம். அவன் அப்ப மண்டுக்கோட்டமுன எண்டு செல்ற இடத்தில கோட்ட கட்டித்து இருந்து ஆச்சி செஞ்சவனாம். அதனாலயும் மண்டு நாகன்ட பேரால மண்டூர் எண்டு அழச்சாங்களாம். அவன் கோட்ட கட்டி இருந்த இடத்த மண்டுக்கோட்டமுன எண்டாங்க. அதோட மண்டூருக்குப் பக்கத்தில இரிக்கிற மண்டுநாகன் சோல எண்ட இடத்தில இருந்தும் அவன் ஆச்சி செஞ்சிருக்கான். அதனாலதான் அந்தப் பேரு வந்திருக்கி. மண்டுநாகன் சோலய இப்ப புள்ளயாரடி எண்டும் செல்லுவாங்க. அங்க இருக்கிற புள்ளயார் கோயிலும் பழமையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு**

மண்டூரின் மூன்றாம் பிரிவின் ஒரு பகுதி மண்டூர் கோட்டைமுனை என்று அழைக்கப்படுகின்றது. இது மட்டக்களப்பு வாவிக்கரையில் அமைந்துள்ளது. மண்டூரின் மேற்குப்புறமாக மண்டூர் நாகன் சோலை அமைந்துள்ளது. அங்கு ஒரு பழமையான பிள்ளையார் ஆலயமும் அமைந்துள்ளது. இந்தப் பிரதேசத்தில் அண்மைக்காலம் வரை நாவல் மரங்களும் நிறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மண்டுநாகன் மண்டூரை ஆட்சி செய்தமை பற்றிய குறிப்புக்கள் மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூலிலும் இடம்பெறுகின்றன.

## 62. கப்பாச்சிக் கிராமம்

வவுனியா கப்பாச்சிக் கிராமத்தில் முன்னொரு காலத்தில் ஒரு உடையார் இருந்தார். அக்காலத்தில தந்திரி மலைப் பகுதியில் வேட்டையாடி வாழ்ந்த சமூகமொன்று இருந்தது. ஆனா இவர்கள் வேடர்கள் இல்லை. இவர்கள் பேந்து செட்டிக்குளப் பிரிவிலும் வந்து வாழத் தொடங்கினம். இவர்கள் வேட்டைக்குச் செல்லுவதற்கு முன்னம் கப்பாச்சி உடையாரின்ட அனுமதியப் பெற்றுத்தான் போக வேணும். ஒரு நாளைக்குப் பல மிருகங்கள வேட்டயாடக் கூடாது எண்ட கட்டுப்பாடும் அவங்களுக்கு இருந்திக்கு. வேட்டயாடிக் கொண்டுவாற மிருகங்களோட நல்ல மாமிசப் பகுதிகளையும் தோல், கொம்பு ஆகியவற்றயும் உடயாரிட்டக் கொடுக்கோணும். அவர் அதுக்குப் பதிலுக்கு மிச்ச மாமிசத்தையும் குரக்கன், வரகு, சாம ஆகியவற்றயும் கொடுப்பார்.

இவங்க ஒருநாள் வவ்வாலைக் கேணிப் பக்கம் வேட்டக்கிப் போனாங்களாம். அப்ப எப்போதும் வத்தாத கேணி அடிவர வத்தி இருந்ததாம். அவங்களில ஒருத்தன் கொட்டப் பாக்களவு உருண்டக் கட்டியளவான ஒரு மாலய கண்டெடுத்து தன்ர இடுப்பில ஒழிச்சி வெச்சித்தானாம். பேந்து எல்லாருமாக உடயாரிட்டப் போய் சென்னாங்களாம் கேணி வத்தியிருக்கு எண்டு. உடயாரோ அவங்கள மிரட்டி காளி மீது சத்தியம் செஞ்சி உண்மயக் கேட்க அந்த ஆள் தான் மாலய எடுத்தத்தையும் கேணி வத்தியிருக்கிறத்தையும் சென்னான். மாலய வாங்கிய உடயார் கேணிப்பக்கம் போனாராம். வத்திய கேணி நீர் நிறம்பி வழிஞ்சி இருந்ததாம். அப்ப நிறம்பின தண்ணி இப்ப வரைக்கும் வத்தயில்லயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில கப்பாச்சி உடயார் பெரிய செல்வாக்கோட இருந்தவர். பேந்து அக்கிராமம் அவரின்ர பேராலயே வழங்கியது.

## 63. சோனக வெள்ளாளர் (வடிவம் 1)

அந்தக் காலத்தில மண்டூருல இருந்து மட்டக்களப்பு, காத்தான்குடி, நீலாவண எண்டு எழுவான்கர ஊருக்கெல்லாம் பேராத்தால தோணியிலதான் பிரயாணம் போற. யாவாரத்துக்கும் அப்பிடித்தான். மண்டூரு பிலாப்பழம் கூடுதலா விளயிற இடம். மண்டூருல இருந்த வெள்ளாள ஆக்கள் காத்தான்குடிக்கு பிலாப்பழ யாவாரத்துக்கு தோணியிலதான் போய் வருவாங்க. அப்பிடி ஒரு நாள் பிலாப்பழம் வித்துப்போட்டு வரக்குள்ள வழியில 3 வயது பொம்புளப் புள்ள ஒண்டு நிண்டிக்கி. அப்ப இவங்க அந்தப் புள்ளயையும் தூக்கிக்கொண்டு தோணியில மண்டூருக்கு வந்துத்தாங்க. புள்ளயக் கொண்டுவந்து அவங்க ஒழிச்சி வச்சிருந்தாங்க. அதுக்குப் பொறகு புள்ளயிர சொந்தக்கார ஆக்கள் மண்டூருக்குக் கொண்டுவந்தத அறிஞ்சி புள்ளயத் தேடி இஞ்ச வந்து புள்ளயக் கேட்டாங்க. ஆனா இவங்க புள்ளயக் கொடுக்கல்ல.

அதுக்குப் புறகு அந்தப் புள்ள வளந்து பெரிய ஆளா ஆகிட்டா. அவ வடிவான புள்ளயாம். புறகு அந்தப் புள்ளய ஒரு வெள்ளாள ஆளுக்கு மண்டூருல களியாணம் கட்டிக் கொடுத்தாங்க. அந்தக் குடும்பத்தில இருந்து வந்த சந்ததி ஆக்கள சோனக வெள்ளாளர் எண்டு சொன்னாங்க.

### விளக்கக் குறிப்பு

மண்டூர் வேளாள சாதியினரில் சோனக வேளாளர் ஒரு குடியாக அன்றி ஒரு பிரிவினராக உள்ளனர். அவர்கள் சமூக நிலையில் அந்தஸ்துக் குறைந்தவர்களாகப் பார்க்கப்படுவதில்லை. வேளாள உயர் குடியினரான கவுத்தன் குடியினர் இவர்களுடன் திருமண உறவுகளை வைத்திருந்தமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

## 64. சோனக வெள்ளாளர் (வடிவம் 2)

அந்தக் காலத்தில மட்டக்களப்பில திண்ணப்பள்ளிகள்தான இருந்தன. ஒரு சில இடங்களில் போத்துக்கீசரின் மிசனரிப் பள்ளிகள் இருந்தன. திண்ணப் பள்ளிகளில் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வாறவங்கதான் படிப்பிச்சாங்க. இந்த நிலயில யாழ்ப்பாணம் மட்டுவில்லில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஒரு ஆசிரியர் குடும்பத்தோட வந்து மகிழடித்தீவில தங்கி அப்பகுதிக் கிராமங்களில படிப்பித்தார். அப்போ அங்க வியாபாரம் செய்யிறதுக்காக வாற முசிலிம் ஆக்கள் அந்த ஆசிரியரிட்டப் போய் தங்கட கிராமத்துக்கு வந்து தங்கட பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும்படி கேட்டாங்க. அப்ப மகிழடித்தீவில ஆசிரியர் தங்கியிருந்த வீட்டின் போடியார் வேலாப்போடியும் கேட்டுக்கொண்டதுக்கு இணங்கவும் அந்த ஆசிரியர் குடும்பத்தோட காத்தான்குடிக்குப் போனாரு. அந்தக் காலத்தில காத்தான்குடியும் ஆரைப்பற்றையும் பிரிஞ்சி இரிக்கல்ல. ஆரையம்பதி தீர்வைத்துறைக்கும் கோயிலுக்கும் இடையில ஓலக் கொட்டிலால் திண்ணப்பள்ளி கட்டி அங்க சோனகப் புள்ளைகளுக்கும் மத்தப் புள்ளைகளுக்கும் அந்த ஆசிரியர் படிப்பித்தார். இப்படி அவர் அங்க நீண்டகாலமாகத் தங்கியிருந்து படிப்பித்தார். இப்படி இருக்கிற நேரம் பழுகாமத்தச் சேந்த ஒருவர் காணித் தோம்பு எழுதும் வேலயில இருந்தார். அவர் ஆரயம்பதிக்குச் செல்லும்போது இந்த ஆசிரியர்ர வீட்டிலதான் தங்குவார். இந்த உறவால அவரு ஆசிரியர்ர ஒரே மகள தன்ட உறவினரான மண்டூர் கவுத்தன்குடியச் சேந்த ஒருவருக்குத் திருமணம் செஞ்சி வச்சார்.

கவுத்தன்குடி வெள்ளாள ஆம்புள அந்த வாத்தியார்ர மகள களியாணம் கட்டித்து மண்டூருக்குக் கூட்டித்துப் போய் வாழ்ந்தாரு. அந்தப் புள்ள வடிவான ஆள். சரியான வெள்ள நிறம். வெள்ள ஆக்கள முசிலிம் ஆக்கள் எண்டு சிலரு செல்றது வழக்கம். அதோட அந்தப் பொம்புள காதில முசிலிம் ஆக்கள் போடுறதப் போல பெரிய தோடும் போட்டிருந்தா. ஆரயம்பதி ஊரு காத்தான்குடி முசிலிம் ஊருக்குப் பக்கத்தில் இருந்ததால அந்தப் புள்ள காத்தான்குடிதான் எண்டு நினச்சாங்க. இதால அந்த வெள்ளாள ஆம்புள முசிலிம் பொம்புளயக் கூட்டித்து வந்திருக்கான் எண்டு கதச்சாங்க.

புறகு அந்தப் பொம்புளயில இருந்து உருவான வமிசத்த சோனக வெள்ளாளர் எண்டு ஊருல சொன்னாங்க. மண்டூரு முருகன் கோயிலில அவங்கட பரம்பரயினருக்குச் சில உரிமைகள் கொடுக்காட்டிலும் அவங்கள ஊருக்குள்ள குறஞ்ச ஆக்களாகப் பாக்கிறதில்ல.

**விளக்கக் குறிப்பு**

இக்கதை திருமதி பவளம் பத்மா பிறேமதாசன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு மலரிலும் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 65. மணற்பிட்டிக்கு கொள்ளை நோய் வந்த கதை

உலகநாச்சி மண்முனைய ஆச்சி செய்ரத்துக்கு மொதல்ல கூத்திகன் எண்ட மன்னன் ஆச்சி செஞ்சானாம். இந்தக்காலத்தில ராசாக்கள் கூடுற இடங்களில ஒண்டாக மணப்புட்டி இருந்திச்சாம். மணல் நெறஞ்ச புட்டி எண்ட தாலதானாம் மணப்புட்டி எண்டு பேரு வந்தது. இஞ்ச மக்கள் குடி ஏறி கனகாலமா வாழ்ந்து வந்தவையாம். இதால பல இடங்களுக்குப் போறதுக்கு ஆக்கள் வாறதால செல்வாக்காகவும் இருந்திச்சாம். இப்பிடி வாழ்ந்து வரக்குள்ள எதிர்பாக்காதவிதமாக தொத்து நோய் ஒண்டு வந்திக்காம். அது கொள்ள நோய்தானாம் எண்டு இப்பயும் சொல்லுவாங்க. அதனால நெறையப்பேரு செத்துப்போனாங்களாம். மிஞ்சின ஆக்கள் அந்த இடத்த உட்டுத்து வேறவேற எடத்துக்குப் பொய்த்தாங்களாம்.

### விளக்கக் குறிப்பு

மணற்பிட்டி என்ற இடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் கொக்கட்டிச்சோலை - தாந்தாமலை பிரதான வீதியில் ஐந்து வீதிகள் சேருகின்ற ஒரு பெரிய சந்தியில் அமைந்துள்ள இடமாகும். மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் அரசர்கள் கூடுகின்ற இடங்களுள் ஒன்றாக மணற்பிட்டியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 66. தலதா மாளிகைக்கு வழங்கிய யானை

அந்தக் காலத்தில ஏறாவூர் காட்டுப் பகுதிகளில கூடுதலான ஆனைகள் இருந்துச்சு. அதனால இங்க ஆனைகளப் பாதுகாக்குற வேலைகளயும் ஆனயப் புடிச்சி அவற்ற கட்டுப்பாட்டுக்குள்ள வளத்து வெளியூருக்கு விக்கிற வேலைகளயும் பணிக்கர் அப்பிடின்னு சொல்லுற ஆக்கள் செஞ்சி வந்தாங்க. அந்தக் காலத்துல இந்த ஆனைகள வளக்குறவங்களுக்கு எண்டே பணிக்கர் வீதி அப்பிடின்ற ஒரு றோட்டுட பெயர வெச்சி அவங்க கண்ணியப்படுத்தப்பட்டாங்க.

1900 ஆண்டுகள்ல ஏறாவூர் வடக்குப் பகுதியில பெரிய காடுகள் இருந்திக்கி. இந்தக் காடுகள்ல நிறயக் காட்டு மிருகங்கள் இருந்துச்சு. அப்போ அந்தப் பகுதியில இருந்த பணிக்கர்மாரு காட்டுக்குப் போய் ஆனைகளப் புடிச்சிட்டு வருவாங்க. இதுக்குப் பல வேலைகளச் செய்வாங்க. காட்டில நாலு பக்கத்துலயும் நெருப்புப் பந்தங்கள வச்சி ஆனைகள் எல்லாத்தையும் ஒண்டு சேப்பாங்க. அதுக்குப் புறகு கொம்பன் ஆனைகள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்திப் புடிப்பாங்க. இப்பிடி உமர்லெப்பை எண்ட பணிக்கரால புடிக்கப்பட்ட ஆனதான் தலதா மாளிகைக்குக் கொடுக்கப்பட்டிச்சு. உமர்லெப்பை என்றவர் புடிச்சிக் கொடுத்த ஆன ஒருநாள் அவரயே தேடி வந்திச்சாம். அதுக்குப் புறகு மறுபடியும் அந்த ஆனய அவரு தலதா மாளிகைக்குக் கொண்டு சேத்தாரு.

இந்த ஆனயும் அதப் பராமரிச்ச பணிக்கரையும் கௌரவிக்கிற வகையிலதான் அவங்கட படத்த ஆயிரம் ரூபா காசித்தாளில போட்டிருக்காங்க.

## 67. மந்திர விளையாட்டுக் கதை

கோளாவில்லில உள்ள கோயிலில கூட்டம் நடந்தா காளி மூப்பன் அந்தக் கூட்டத்துக்கு போவாராம். அவரைக் கண்டா எல்லாரும் ஒழும்பி மரியாத கொடுப்பாங்களாம். அப்பிடி செய்யாதவங்களையும், அவர எதிர்த்த வர்களயும் மந்திர சக்தியால சாகடிச்சி விடுவாராம். அப்படிப்பட்ட பொல்லாத மந்திரவாதி அவரு. இந்த நெலையில இருந்து எப்பிடி தப்புற எண்டு மனம் நொந்திருந்தாங்களாம். அப்பதான் அவங்க பலரிட்ட விசாரிச்சி அம்பிளாந்துறையில இருந்த மந்திரவாதி விஸ்வநாதரிட்ட வந்து விசயத்த விளங்கப்படுத்தினாங்களாம். அவரும் இவங்க சொன்ன விசயங்களக் கேட்டுட்டு ஒரு நாள் கோளாவில்லுக்குப் போனாராம். இவர் கோளாவில்லுக்கு போன விசயம் ஒண்டு ரெண்டு பேரத் தவிர மத்த ஆக்களுக்குத் தெரியாம இருந்திச்சாம். வழமபோல கூட்டம் கோயிலடியில நடந்துகொண்டிருந்திச்சாம். அப்ப காளிமூப்பன் அந்த கூட்டத்திற்கு வந்திருக்காரு. அவர கண்ட ஒடனே கூட்டத்தில் இருந்த குடியானவங்க எல்லாரும் ஒழும்பி நிண்டு மரியாத செய்தாங்களாம். விஸ்வநாதர் மட்டும் ஒழும்பல்லையாம். அப்ப மத்தாக்கள் இவரப் பாத்து ஒண்ட கத இண்டயோட முடிஞ்சிபொய்த்து எண்டு சொன்னாங்களாம். அதக் கேட்ட விஸ்வநாதர் அத நான் பாத்துக் கொள்றன் எண்டுபோட்டு பொய்த்தாராம். அதுக்கு பொறகு என்ன நடந்திச்செண்டு தெரியுமா? அண்டக்கி இரவே காளிமூப்பன் அங்கம், பில்லி, சூனியம் மூண்டயும் விஸ்வநாதர நோக்கி ஏவிவிட்டானாம். மூண்டும் இவர கொல்லுறத்துக்கு வந்திச்சாம். இவர் ஒரு வீட்டுக்குள்ள இருந்திரிக்காரு. அப்ப அவர் மூண்டு முட்டிய எடுத்து, மண்சுவரில மூண்டு துளையப்போட்டு, முட்டி மூணுட வாயயும் துளைக்குள்ள வைச்சி பிடிச்சாராம். வந்த அங்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லி, சூனியம் மூண்டும் அவரத் தேடித் திரிஞ்சிக்காம். இவரு சவுத்த ஆளா? என்ன செஞ்சாரு தெரியுமா? மூண்டையும் மந்திர சக்தியால மண் முட்டிக்குள்ள எடுத்து முட்டியக் கவுத்து உட்டாராம். பொறகு அங்கம், பில்லி, சூனியம் மூண்டையும் சத்தியம் கேட்டு, அந்த மூண்டயும் அவர நோக்கி ஏவி காளிமூப்பனக் கொண்டாராம். அடுத்தநாள் பாத்தா இவருக்கு செரியான மரியாதை இருந்திச்சாம். மக்களும் ஆரவாரத்தோட சந்தோசமா இருந்தாங்களாம்.

### விளக்கக் குறிப்பு

கோளாவில் கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் ஆலயடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பழைய கிராமமாகும். அம்பிளாந்துறை மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள பழம்பெரும் கிராமமாகும். இவ்விரு கிராமங்களும் மந்திரத்திற்குப் பெயர் போனவை. அதனால் மிகப்பழங்காலந்தொட்டு இவ்விரு கிராமங்களுக்கிடையிலும் தொடர்புகள் இருந்துவருகின்றன. இன்றுவரையும் மந்திரச் சடங்கில் இந்தக்கிராமத்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

மந்திர சக்தி பேராற்றலாக மதிக்கப்பட்ட சமூகத்தில் அத்தகைய மேம்பட்ட சக்தியுடையவர்களுக்கு மக்கள் கட்டுப்பட்டு வாழ்ந்தனர். அதேவேளை ஒரு மந்திரவாதியை அடக்குவதற்கு அவரைவிடவும் திறமைமிக்க பிறிதொரு மந்திரவாதியைக்கொண்டு அடக்குகின்ற வழக்கமும் காணப்பட்டுள்ளது.

## 68. தோட்டா சுறட்டைக்குள் வந்த கதை

பச்சனாவியர் கணபதிப்போடி எண்டவரு மாட்டுப்பட்டி வச்சிருந்தாராம். இவருக்குச் சோதயன்குளத்தில அறுபது ஏக்கர் பூமி இருந்ததாம். இது மாடு மேய்க்கிற பூமியாம். அங்க இருந்து அவர்ர மாடுகள் கன்னக்குடா எண்ட புல்லு நிறஞ்ச வயலுக்குள்ள மேயப் போகுமாம். அப்பிடி அவர்ர மாடுகள் போன வழிப்பாடுதான் வடிச்சல் வழி எண்ட வழியானதாம். இவர்ர மாடு பயிர்களத் தின்றது வழக்கமாம். அதால கோபங்கொண்ட வெள்ளாமச் செய்ர ஆக்கள் எல்லாம் இவர்ர மாடுகளுக்கு துவக்கால சுடுரது வழக்கமாம். இதுக்காகப் பச்சனாவியர் மந்திரத்தால செபம்பண்ணி மாட்டுக் காலையடியில ஒரு சுறட்டய வைப்பாராம். மாடுகளுக்குச் சுடுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக்குத் தோட்டாக்கள் எல்லாம் அந்தச் சுறட்டைக்குள்ள கிடக்குமாம். அதுமட்டுமில்ல இவர் மாடு மேய்க்கிறதுக்காக போகக்குள்ள குடபுடிச்சி போறல்லயாம். நாலு தேசிக்காய்கள மந்திரத்தால செபம் செஞ்சி சால்வையிட நாலு மூலயிலயும் பிடிக்கக்கூடிய வகையில வைப்பாராம். அது அவருக்கு குடயாகச் செல்லுமாம்.

**விளக்கக் குறிப்பு**

மந்திரத்துக்குப் பெயர்பெற்ற இடமாக மட்டக்களப்பு விளங்கிவந்துள்ளது. இப்பிரதேசக் கிராமங்களில் வாழ்ந்து மறைந்த 'மந்திரவாதிகள்' பற்றிய பல கதைகள் மக்கள் மத்தியில் நிலவிவருகின்றன.

## 69. சித்தானக்குட்டியின் கதை

கனகாலத்துக்கு முன்ன சித்தானக்குட்டி எண்ட ஒரு சித்தர் இருந்தாரு. இவர் காரதீவச் சேந்தவர். பல சித்துவிளையாட்டுக்களச் செய்தவர். ஒரு நாள் மாமாங்கப் புள்ளயார் தீத்தமாடச் சனமெல்லாம் போகுது. ஆனக்குட்டிச் சாமியார்ர சீசனுகள் என்னசாமி சனமெல்லாம் போகுது. நாம எப்ப போறண்டு கேக்க பொறுங்கடா கடசி வசிக்கிப் போவம் எண்டு போட்டு காரதீவுக்குப் போறாரு. போகக்குள்ள மணச்சேனப் பறங்கி ஒருவனக் கூப்பிட்டு பண்டியிறச்சி பத்துக்கிலோ ஆச்சிரமத்துக்கு அனுப்பு. நான் காரதீவுக்கு ஓடிப்போய் வாறன். தீத்தமாடப் போன சனமெல்லாம் நாளைக்கி வரும். அதுகளுக்கும் சாப்பாடு குடுக்கொணும் எண்டு சொல்லிப்போட்டுப் போறாரு. அந்தப் பறங்கி பாரு சாமிசாமி என்றான் பண்டியெறச்சி தின்றான் எண்டு நெனச்சித்து எறச்சியக் கொண்டு குடுத்தான்.சீசன்மாருக்கு ஆச்சரியம். என்னடா இந்தாள் பண்டி எறச்சிய வரக்காட்டியிருக்கார். சாப்பாடு சென்ன மாதிரி பண்டி எறச்சியக் கறியாக்கி முடிஞ்சி.

சாமியாரு வர நல்லாப் பிந்திப் பெய்த்து. சாமியாரும் போகல்ல, சீசன்மாரும் போகல்ல தீத்தமாட. நல்லா இருட்டுப்பட்டுப் பெய்த்து. சாமியாரு நாலஞ்சி பறங்கிமாரோட வாறாரு. என்ன சாப்பாடெல்லாம் முடிஞ்சா எண்டு கேட்டாரு. ஓஞ்சாமி சாப்பாடெல்லாம் முடிஞ்சி. அப்ப எல்லாத்தையும் எடுத்துற்று வா எண்டுபோட்டு எல்லாருக்கும் அவர்ர கையாலதான் பகிர்ராரு. கமகமண்டு நல்லா மணக்குது கறி. என்ன அதிசயம். பறங்கிமாருக்கு மட்டும் பண்டி எறச்சாம். மத்தாக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்காக் கொழம்பு. சாப்புட்டு முடிய பறங்கிமாரு சாமியார் கால்ல உழுந்து சாமி எங்கள மன்னிக்கோணும் நாங்க ஒங்களுக்கு ஏசியிருக்கம். பொண்புடியன் எண்டு நெனச்சிருந்தம். கொழறுனாங்களாம். சாமி அவயள மன்னிச்சி உட்டாராம்.

இன்னொரு நாள் வெள்ளிக்கிழம மண்டூரு தீத்தக்கர றோட்டால ஒருவன் ஆத்தங்கரையில இருந்து செல்லுவன் மீன் கோர்வ ஒண்ட வாங்கிக்கொண்டு வாறானாம். மீன் துடிச்சிக்கொண்டிருக்காம். எதிரால ஆனக்குட்டிச் சாமியார் வாறாராம். அவன் கிட்ட வரவும் ஆனக்குட்டிச் சாமியார் அவனிட்ட கேட்டாராம் வெள்ளிக்கிழம மீன் வாங்கி வாறயா எண்டாராம். புறகு அதக்கொஞ்சம் தா பாப்பம் எண்டு மீன் கோர்வய வாங்கி எடுத்த அவர் அத அவண்ட முகத்தில சடாரெண்டு எறிஞ்சாராம். மீன் கோர்வ பூ மாலயா அவண்ட கழுத்தில உழுந்துதாம்.

**விளக்கக் குறிப்பு**

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு என்ற பழங்கிராமத்தைச் சேர்ந்தவர் ஆனைக்குட்டிச் சாமியார். கிழக்கிலங்கையில் சாதாரண மக்கள் வரை நன்கு அறியப்பட்டவர். பல சித்துச் செயல்களைச் செய்து மக்களை அதிசயத்தில் ஆழ்த்தியவர்.

## 70. ராமக்குட்டி

வீரமன எண்ட ஊரில ராமக்குட்டி எண்ட ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர்ர பொஞ்சாதிர பேரு சீதப்புள்ள. அவர் மந்திர வாலாயம் கொண்டவரு. வேட்டக்கிப் போய் மான் வேட்ட ஆடுறதும் அவர்ர பழக்கம். அவருக்கு மூண்டு புள்ளைகள் இருந்தாங்க. நாலாவது புள்ள உண்டாகி நிறமாசமா இருக்கக்குள்ள ஒரு நாள் ராமக்குட்டியார் தன்ர ஊட்ட வளச்சி மண்வெட்டியால புல்லக் கொத்திக்கொண்டிருந்தாரு. அப்ப ஒரு இடத்தில் ஏதோ ஒண்டு கணீர் எனக் கொத்துப்பட்டிக்காம். அப்ப அந்த இடத்தில வெட்டிப்பாக்கவும் ஒரு புதயல் பான இருந்திக்காம். புதயல் பானய கிளப்பி எடுத்த அவர் பொஞ்சாதியக் கூப்பிட்டு அவட தலயில சீமாட்ட வச்சி அதுக்கு மேல பானய வச்சிப்போட்டு அத ஊட்டுக்குள்ள இருக்கிற நெல்லுப் பட்டறக்கி மேல வைக்கச் சென்னாராம். அப்படியே அவவும் கொண்டு வச்சா. புதயல் கிடச்சா அதுக்குப் பொலி கொடுக்கோணும். ஆனா மந்திர வித்தைகளத் தெரிந்த ராமக்குட்டிக்கு புத்தி தடுமாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதயெல்லாம் கவனிக்காம உட்டுத்தாரு. புறகு அண்டக்கே மான் வேட்டயாடி ஈக்கில் சத இறச்சி கொண்டுவாறன் எண்டு செல்லிப்போட்டு வேட்டக்கிப் போயித்தாராம். புள்ளத்தாச்சிமாருக்கு ஈக்கில் சத இறச்சி[1] கொடுக்கிறது வழக்கம். அதுக்குப் புறகு அண்டு மாலைக்குள்ள வாசலில இருந்த தென்ன மரத்தில இருந்து வெள்ள வேட்டி கட்டின ஒருவர் இறங்கிவந்து கைவிரலக் காட்டி 'ஒண்டுக்கு ரெண்டெடுப்பன்' எண்டு சீதப்புள்ளயப் பாத்துச் செல்லித்துப் போயித்தாராம். சீதப்புள்ள பயத்தில அத ஆரிட்டயும் செல்லலல்ல. அண்டு ராவு சீதப்புள்ளக்கி வயித்து நோவு ஏற்பட்டுத்தாம். அப்ப மருத்துவிச்சி, ஆக்கள் எல்லாம் வந்து எவ்வளவோ முயச்சி செஞ்சிம் புள்ள புறக்காமக் கிடந்து அவதிப்பட்டாவாம். அப்பதான் நடந்ததச் சென்னாவாம். அதுக்குப் புறகு புள்ளயப் பெத்தெடுக்க முடியாம சீதப்புள்ள செத்துப்போயித்தாவு. அடுத்த நாள் ராமக்குட்டி ஈக்கில் சத இறச்சியோட வந்தப்ப சீதப்புள்ளய சவமாகத்தான் கண்டாரு. புறகு புதயல் பானைக்குள்ள இருந்த தங்கக் காசெல்லாம் பித்தளயா மாறித்தாம். புறகு அந்தப் புதயல் பானய அம்பாறப் புள்ளயார் கோயிலுக்குக் கொடுத்தாங்களாம்.

அவர்ர மந்திர வல்லம பத்தி நெறயக் கத இரிக்கி. 1956 ஆம் ஆண்டளவில வீரமுனயில முசிலிம் - தமிழ் குழப்படி ஏப்பட்ட. அப்ப கலவரக்காற ஆக்கள் தமிழாக்கள்ர ஊடெல்லாத்தயும் பத்தவச்சி வந்தவங்க. அப்ப வீரமுனயில இருந்த தமிழாக்களெல்லாம் ஊர உட்டு ஓடி மல்வத்த, மண்டூரு போண்ட இடங்களுக்குப் போயித்தாங்க. அந்த ஆண்டிலதான் மல்வத்தையில தமிழாக்கள் குடியேறின. ஆனா ராமக்குட்டியார் மட்டும் ஓடல்ல. அவரு தண்ட ஊட்டிலேயே பயமில்லாம இருந்தாரு. அப்ப கலவரக்காற ஆக்கள் அவர்ர ஊட்டுப் பக்கம் வாறாங்க. ஆனா ராமக்குட்டியாரோ வாசலுக்குப் பயமில்லாம வந்து நிண்டாரு. தோளில கிடந்த சாலுவய எடுத்து மந்திரத்தால உறுக்கி அத முறுக்கித் தோளில போட்டாரு. வந்த கலவரக்காற ஆக்கள் 'என்ன ராமக்குட்டி அண்ண நல்லா இரிக்கங்களா' எண்டு கேட்டுத்து ஊட்டக் கடந்து போனாங்க. அவர்ர வளவுக்குள்ள காலும் வெய்க்கல்ல. அப்பிடியான மந்திரவாதி அவர்.

அப்படித்தான் அவர் ஒருநாள் காட்டுக்குக் கம்பு வெட்டப் போனாரு. மரத்தில ஏறிக் கம்பு வெட்டக்குள்ள ஒரு மலப் பாம்பு அவர்ர காலச் சுத்திப்

1 பின்னங்கால் சந்தில் இருந்து எடுக்கும் சதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடிச்சித்து. புறகு பாம்பு சரசரவெண்டு அவரச் சுத்தத் தொடங்கித்து. இடுப்பு வரயிலயும் சுத்தி வந்துத்து. தல மட்டும் சுத்திருமெண்டா ஆள முறிச்சி விழுங்கிடும். அவர் பயப்படல்ல. இடுப்பில இருந்த சின்னக் கூர்க்கத்திய எடுத்தாரு. மந்திரத்த ஓதினாரு. தண்ட ரெண்டு காலுக்கு இடயாலயும் கத்திய பாம்புச் சுருளுக்குள்ளால பூத்தி சறசறவெண்டு பாம்ப அறுத்தாரு. பாம்பு துண்டுதுண்டாப் போயித்து. அப்பிடிப்பட்ட துணிவு உள்ளவரா அவரு இருந்தாரு.

**விளக்கக் குறிப்பு**

இராமக்குட்டியாரின் உறவினர்கள் வீரமுனை, மண்டூர், குருமண்வெளி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். அவருக்கு நான்கு பிள்ளைகள் (3 ஆண்களும் 1 பெண்ணும்) இருந்தனர். முத்த மகன் குருமண்வெளியிலும் ஏனையவர்கள் மண்டூரிலும் மணம் புரிந்து வாழ்ந்து மறைந்தார்கள்.

## 71. வெள்ளக்காரத் தொரமார்

இந்தியாவுல இருந்து மலையகத்துக்கு வந்த காலத்துல இருந்தே நம்ம ஆளுக கொடுமைய தா அனுபவிக்கிறோம். எங்க அப்பா சொல்லி யிருக்காரு. நா பொறந்த காலத்துல இலங்கை சுதந்திரம் அடைஞ்சாலும் எஸ்டேட் எல்லாம் வெள்ளக்காரத் தொரமாரின் கீழதான் இருந்ததாம். அவங்கட சர்வாதிகாரம் தலை தூக்கி இருந்துச்சாம்.

அந்தக் காலத்துல தொரமார் எளம்பொண்ணுகள பங்களாவுக்கு வேலைக்கு எடுத்து நாசமாக்குறதையே வழக்கமா வச்சிருந்தாங்களாம். பல பொம்புளைங்க கெடுக்கப்பட்டிருக்காங்க. அதால செலர் செத்தும் இருக்காங்க. கூலிக்கு மேல வேலை வாங்குவாங்களாம். 15 கிலோ தேயிலை எடுக்குற நேரத்துல 20, 30 கிலோ தேயிலை எடுத்து குடுக்கணுமாம். கால் ஏக்கர் புல் புடுங்குற இடத்துல ஒரு ஏக்கர் கிட்ட தனி ஆளா துப்புரவாக்கணுமாம். ஏதும் தப்பு செஞ்சா ஊட்ட புடிங்கிக்கிட்டு வெரட்டி உட்டுறுவாங்களாம். யூனியனுக்கு ஆள் சேத்தா பத்துச் சீட்டு கொடுத்து ஊர உட்டே ஒதுக்கி வச்சிருவாங்களாம். வேற தோட்டத்திற்கும் போகமுடியாம சிவப்புக்கோடு போட்டுறுவாங்களாம்.

வெள்ளக்கார தொரமார் குதிரயில ஏறி தொழிலாளிகள அந்த குதிரகள புடிச்சிக்கிட்டு ரெண்டு, மூண்டு கிலோ மீட்டர் தூரம் ஓட வைக்கிறத தண்டனையா குடுப்பாங்களாம். தாய்மார் தங்கட புள்ளைகளக்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்டுட்டுப் போக ஒரு இடம் இல்லாததால அவங்க வேலை செய்ற மலையில உள்ள சவுக்க மரத்துல தொட்டி கட்டி புள்ளகள போட்டுட்டு வேலை செய்யணுமாம்.

இப்படியே சர்வாதிகாரப் போக்கு இருந்ததுனால அந்தக்கால பொடியனுகள் மத்தியில புரச்சி ஏப்பட்டிச்சாம். இந்தக் காலத்துலதானாம் டெமேரியா எண்ட தோட்டத்தில வள்ளியம்ம எண்ட பொம்புள இந்த அனியானங்கள எதுத்து நிண்டா. அவதான் மலையகத்திர முதலாவது புரச்சிப்பொம்புள. அவ றொம்ப துணிஞ்ச பொம்புள.

அப்ப வெள்ளக்காரத் தொரமார் பாக்கிஸ்தானிய பாய்மார்களை காவலாளியாக கொண்டு வந்து புரச்சி செஞ்சவங்கள பயமுறுத்துனாங்க. பொறகு தொரமார் வரும் வழியில அவங்கட காருக்கு கல் வச்சி வள்ளியம்ம போராடினா.

கடைசில வெள்ளக்கார தொரமார் திட்டமிட்டு பாய் காவலாளி ஒருவனத் தூண்டிஉட்டு வள்ளியம்மயச் சுட்டுக் கொண்டுபோட்டாங்க. பாவம் அவ செத்துட்டா. கார்டேஜ் சிதறி உள்ளூர் ஆக்களுக்கும் காயங்கள் ஏற்பட்டுருச்சுதாம். இதுக்குக் காரணமாக இருந்தவர் ஒரு தமிழ் கணக்குப்புள்ள. இவர் மாதிரியான சில தமிழ் அதிகாரிகள் மூலமா வெள்ளக்காரத் தொரமார் தொழிலாளிகளை அடிமைகளாக்கினாங்க. இவரது இதுபோண்ட துரோகத்தை எதித்த செல எளைஞர்கள் நிர்வாகத்திற்கு எதிராக புரச்சி செஞ்சாங்க. கடசியில நிர்வாகத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில சண்ட நடந்திருச்சி. நடந்த சண்டையில அந்தக் கணக்கப்புள்ள கொல செய்யப்பட்டாரு. இதுக்குக் காரணமானவங்கள தோட்ட கம்பனி வெளியேத்திப்போட்டுது. செலர சிறையில அடச்சிட்டாங்க. அவங்க குடும்பமும் சிதறி வீணாகிருச்சி. அந்தச் சம்பவத்துக்கு அப்புறம் இந்த அடிமை முறை கொஞ்சம் கொஞ்சமா மாறி வந்திருச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

1. கணபதிப்பிள்ளை,சி. (பதி.), 1971, *மகாமாரித்தேவி திவ்விய கரணி,* யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்.

2. கந்தையா,வி.சீ., 2002, *மட்டக்களப்புத் தமிழகம்,* பிரான்ஸ்: எக்ஸில் வெளியீடு (இரண்டாம் பதிப்பு)

3. சிவசுப்பிரமணியம்,ஆ.,2016, *அடித்தள மக்கள் வரலாறு,* சென்னை: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.

4. சிவசுப்பிரமணியன் , 2014, *வரலாறும் வழக்காறும்,* நாகர்கோயில்: காலச்சுவடு பதிப்பகம்.

5. சிவராம்,டி., 2004, *மட்டக்களப்புக் குடியேற்ற மரபு, சித்திரலேகா,மௌ., (பதி), வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக,* இலங்கை: மொழித்துறை, கிழக்கப் பல்கலைக்கழகம்.

6. மனோகரன்,ஆ.க., 2008, *இலங்கை தேசிய இனமுரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும் - ஒரு வரலாற்றுப் பார்வை* - 1948 - 2007, சென்னை: திபார்க்கர் வெளியீடு.

7. Vansina, Jan, 1965, Oral Tradition – *A Study in Historical Methodology,* Wright, H.M.(Trans.), London: Routledge & Kegan Paul Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு – 1

| எண் | கதைத் தலைப்பு | தகவலாளியின் பெயர் | பால் | வயது | கல்வி | தொழில் | ஊர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மண்டூர் முருகன் கோயில் உருவான கதை | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 2 | மண்டூருக்கு வெள்ளாளர் வந்த கதை (வடிவம்-1) | மு.விமலநாதன் | ஆண் | 65 | பட்டதாரி | ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் | மண்டூர் |
| 3 | மண்டூருக்கு வெள்ளாளர் வந்த கதை (வடிவம்-2) | கலாநிதி கோ. கோணேசபிள்ளை | ஆண் | 88 | கலாநிதிப் பட்டம் | விரிவுரையாளர் | மண்டூர் |
| 4 | விராகமுத்துப் போடி | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 5 | பலாப்பழம் கொண்டு போன கதை | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 6 | சீர்பாததேவி வந்த கதை (வடிவம்-1) | மா. தம்பிராசா | ஆண் | 65 | வகுப்பு 3 | சுருட்டுச் சுற்றுதல் | சேனைக் குடியிருப்பு |
| 7 | சீர்பாததேவி வந்த கதை (வடிவம்-2) | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 8 | வதனமார் வந்த கதை | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 9 | வதனமார் கதை (வடிவம் 1) | த. ஜெயக்குமார் | ஆண் | 50 | வகுப்பு 10 | விவசாயம் | வெல்லாவெளி |
| 10 | வதனமார் கதை (வடிவம் 2) | தேவரசி | பெண் | 81 | வகுப்ப 3 | தோட்டம் | வெல்லாவெளி |
| 11 | சுவாதியம்மன் கோயிலினுள் பிள்ளைகள் அடைபட்டது | தேவரசி | பெண் | 81 | வகுப்பு 3 | பயிர் செய்தல் | வெல்லாவெளி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | வதனமார் வழிபாடு | வைரமுத்து தேவராசா | ஆண் | 75 | வகுப்பு 10 | பூசாரி | கதிரவெளி |
| 13 | செட்டியாரின் திருப்பணி | இ. திலகவதி | பெண் | 64 | வகுப்பு 3 | வீட்டுப்பணி | கங்குவேலி |
| 14 | சன்னியாசி மடு | உதயகுமார் | ஆண் | 71 | உயர் கல்வி | அரச உத்தியோகம் | கோயில் போரதீவு |
| 15 | கொங்கண முனிவர் | உதயகுமார் | ஆண் | 71 | உயர் கல்வி | அரச உத்தியோகம் | கோயில் போரதீவு |
| 16 | காஞ்சிரமரத்தடிப் பிள்ளையார் கதை | செ. ஆறுமுகம் | ஆண் | 65 | வகுப்பு 2 | விவசாயம் | சேனைக் குடியிருப்பு |
| 17 | பெரியசாமி | இ. கணபதிப்பிள்ளை | ஆண் | 70 | வகுப்பு 5 | விவசாயம் | அம்மந்தனா வெளி |
| 18 | நல்லைநாதச் செட்டி | உதயகுமார் | ஆண் | 71 | உயர் கல்வி | அரச உத்தியோகம் | கோயில் போரதீவு |
| 19 | பாம்புக்குப் பங்கு பிரித்தது (வடிவம்-1) | அழகையா | ஆண் | 76 | வகுப்பு 3 | சாத்திரி | ஏறாவூர் -5 |
| 20 | பாம்புக்குப் பங்கு பிரித்தது (வடிவம்-2) | பாலசுந்தரம் | ஆண் | 75 | வகுப்பு 5 | விவசாயம் | முனைக்காடு |
| 21 | பாம்புக்குப் பங்கு பிரித்தது (வடிவம்-3) | சி. ராசரெத்தினம் | ஆண் | 60 | வகுப்பு 2 | வவிசாயம் | பண்டாரியா வெளி |
| 22 | ஆரையம்பதிக் கண்ணகியம்மன் கோயில் | கணபதிப்பிள்ளை | ஆண் | 76 | வகுப்பு 10 | விவசாயம் | ஆரையம்பதி-3 |
| 23 | ஒத்துக்குடாக் கந்தப்பன் (வடிவம்-1) | மா.சதாசிவம் | ஆண் | 81 | உயர்தரம் | வியாபாரம் | புதுக் குடியிருப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | ஒத்துக்குடாக் கந்தப்பன் (வடிவம்-2) | பொ. கேசவப்போடி | ஆண் | 80 | வகுப்பு 5 | விவசாயம் | புதுக் குடியிருப்பு |
| 25 | செட்டிபாளயம் கண்ணகி அம்மன் கோயில் | வே. கணபதிப்பிள்ளை | ஆண் | 94 | வகுப்பு 5 | விவசாயம் | அம்பிளாந்துறை |
| 26 | செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயில் உருவாகிய கதை | ச. இளையதம்பி | ஆண் | 64 | வகுப்பு 9 | வியாபாரம் | செட்டி பாளையம் |
| 27 | மாம்பழம் குதிச்ச கதை | ச. இளையதம்பி | ஆண் | 64 | வகுப்பு 9 | வியாபாரம் | செட்டி பாளையம் |
| 28 | நாகமணி | அழகையா வள்ளியம்மை | பெண் | 85 | வகுப்பு 5 | வீட்டுப்பணி | ஆரையம்பதி - 2 |
| 29 | காட்டா விநாயகர் | மனோரஞ்சன் | ஆண் | 53 | உயர் கல்வி | உதவிக் கல்விப் பணிப்பாளர் | முல்லைத்தீவு |
| 30 | கங்குவேலி ஆதிசிவன் ஆலயம் | செ.துரந்திரியம்மாள் | பெண் | 63 | வகுப்பு 4 | வீட்டுப்பணி | கங்குவேலி |
| 31 | லிங்கபுரம் ஆதிசிவன் கோயில் | க. முத்துலிங்கம் | ஆண் | 67 | வகுப்பு 5 | பூசகர் | லிங்கபுரம் |
| 32 | பாட்டுவாழிக் குடிக்காரன் | தெய்வேந்திரன் செல்லத்தங்கம் | பெண் | 76 | வகுப்பு 3 | வீட்டுப்பணி | அல்லை இடதுகரை |
| 33 | பாட்டுவாழியான் குடி | அ. இராசரெத்தினம் | ஆண் | 70 | வகுப்பு 3 | விவசாயம் | மேன்கமம் |
| 34 | கன்னன்குடா கண்ணகி கோயிலில் கள்ளர்கள் பிடிபட்ட கதை | விளங்கிப்போடி முருகுப்பிள்ளை | ஆண் | 74 | வகுப்பு 8 | வண்ணக்கர் | கன்னன்குடா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 35 | மாவேற்குடா பிள்ளையார் ஆலயம் பற்றிய கதை | வே. கணபதிப்பிள்ளை | ஆண் | 94 | வகுப்பு 5 | விவசாயம் | அம்பிளாந்துறை |
| 36 | செம்பக நாச்சி சிலம்பு கண்ட கதை | விளங்கிப்போடி முருகுப்பிள்ளை | ஆண் | 74 | வகுப்பு 8 | வண்ணக்கர் | கன்னன்குடா |
| 37 | உலகநாச்சி மண்முனைக்கு வந்த கதை | பாலசுந்தரம் | ஆண் | 75 | வகுப்பு 5 | விவசாயம் | முனைக்காடு |
| 38 | கொக்கட்டி மரத்தை வெட்ட குருதி கொப்பளித்த கதை | எஸ். குமாரவேலி | ஆண் | 77 | வகுப்பு 5 | விவசாயம் | முனைக்காடு |
| 39 | சேனக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் கோயில் | செ. ஆறுமுகம் | ஆண் | 65 | வகுப்பு 2 | கமம் | சேனைக் குடியிருப்பு |
| 40 | பத்தஞானிக்கு எட்டாம் சடங்கு செய்ர கதை | சிவச்சாமி ஐயர் | ஆண் | 87 | வகுப்பு 8 | ஐயர் | முல்லைத்தீவு |
| 41 | வற்றாப்பளைக்கு கண்ணகி அம்மன் வந்த கதை | சிவச்சாமி ஐயர் | ஆண் | 87 | வகுப்பு 8 | ஐயர் | முல்லைத்தீவு |
| 42 | ஆலப்புள்ள | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 43 | அறுமக்குட்டிப் போடி (வடிவம்-1) | கணபதிப்பிள்ளை | | 94 | வகுப்பு 5 | விவசாயம் | அம்பிளாந்துறை |
| 44 | அறுமக்குட்டிப் போடி (வடிவம்-2) | கலாநிதி முருகு தயாநிதி | ஆண் | 50 | உயர் பட்டம் | சிரேஸ்ட விரிவுரையாளர் | அம்பிளாந்துறை |
| 45 | அறுமக்குட்டிப் போடி (வடிவம்-3) | வே. சின்னத்தம்பி | ஆண் | 85 | வகுப்பு 5 | பூசாரி | அம்பிளாந்துறை |
| 46 | குஞ்சிலயாப்போடி கட்டின மதில் | மு. முருகேசு | ஆண் | 73 | வகுப்பு 6 | பூசாரி | அம்பிளாந்துறை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 47 | வில்லுக்குளம் | சிவபாலன் | ஆண் | 63 | வகுப்பு 11 | தோம்புதர் | பட்டிப்பளை |
| 48 | மண்முனைப்போடியின் வயலைப் பறிச்ச கதை | வே.சின்னத்தம்பி | ஆண் | 87 | வகுப்பு 5 | பூசாரி | அம்பிளாந்துறை |
| 49 | ராசமேளம் பற்றிய கதை | க. ஏகாம்பரம் | ஆண் | 90 | வகுப்பு 4 | விவசாயம் | அம்பிளாந்துறை |
| 50 | வெள்ளக்காரனுக்குக் குளவி குத்தினது | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 51 | நந்தி புல் தின்ற கதை | எஸ். குமாரவேலி | ஆண் | 77 | வகுப்பு 5 | விவசாயம் | முனைக்காடு |
| 52 | கண்ணகி அம்மன் பனிச்சை மரத்தை ஆட்டிய கதை (வடிவம்-1) | காசிராசா | ஆண் | 72 | வகுப்பு 6 | விவசாயம் | முத்தையன் கட்டுக் கிராமம் |
| 53 | கண்ணகி அம்மன் பனிச்சை மரத்தை ஆட்டிய கதை (வடிவம்-2) | சிவச்சாமி ஐயர் | ஆண் | 87 | வகுப்பு 8 | ஐயர் | முல்லைத்தீவு |
| 54 | சேனைக் குடியிருப்பு பத்திரகாளியம்மன் கோயில் | செ. ஆறுமுகம் | ஆண் | 65 | வகுப்பு 2 | விவசாயம் | சேனைக் குடியிருப்பு |
| 55 | ஏழு கன்னிகள் | தவமணிதேவி | பெண் | 63 | வகுப்பு 4 | வீட்டுப்பணி | வட்டுவாகல் |
| 56 | சீமானின் கொலை | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 57 | சிங்களவர் விரண்டோடியது | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 58 | அம்மாள் கதவைத் திறந்த கதை | ச. இளையதம்பி | ஆண் | 64 | வகுப்பு 9 | வியாபாரம் | செட்டி பாளையம் |
| 59 | நாய்ப்பட்டிமுன | வீ. வேலுப்பிள்ளை | ஆண் | 71 | வகுப்பு 2 | சுருட்டுச் சுற்றுதல் | மணல்சேனை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 60 | சித்தாண்டி ஊர் | தம்பிராசா யோகராணி | பெண் | 52 | வகுப்பு 5 | வீட்டுப் பணி | மாவடிவேம்பு |
| 61 | மண்டூர் | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 62 | கப்பாச்சிக் கிராமம் | கந்தர் ஞானப்பிரகாசம் | ஆண் | 65 | வகுப்பு 5 | விவசாயம் | சின்னத் தம்பனை |
| 63 | சோனக வெள்ளாளர்(வடிவம்-1) | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 64 | சோனக வெள்ளாளர்(வடிவம்-2) | க. தேவானந்தம் | ஆண் | 54 | உயர்தரம் | மில்கோ உத்தியோகத்தர் | மண்டூர் |
| 65 | மணற்பிட்டிக்கு கொள்ளை நோய் வந்த கதை | பா. இன்பராசா | ஆண் | 74 | வகுப்பு 10 | கிராமசேவை உத்தியோகத்தர் | முனைக்காடு |
| 66 | தலதா மாளிகைக்கு வழங்கிய யானை | ஹாறுதீன் | ஆண் | 72 | க.பொ.த. சா.தரம் | வியாபாரம் | ஏறாவூர் |
| 67 | மந்திர விளையாட்டுக் கதை | வே. கணபதிப்பிள்ளை | ஆண் | 94 | வகுப்பு 5 | விவசாயம் | அம்பிளாந்துறை |
| 68 | தோட்டா சிறட்டைக்குள் வந்த கதை | செ.கோவிந்தராசா | ஆண் | 68 | வகுப்பு 7 | பூசாரி | அம்பிளாந்துறை |
| 69 | சித்தானக்குட்டியின் கதை | சி. வாலலெட்சுமி | பெண் | 80 | வகுப்பு 9 | வீட்டுப் பணி | மண்டூர் |
| 70 | வெள்ளைக்காரத் தொரமார் | ரா. சித்திரவேல் | ஆண் | 60 | இல்லை | தொழிலாளி | பதுளை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு – 2

## வட்டார வழக்குச் சொற்கள்

| வழக்குச் சொல் | பொருள் | கதைத் தலைப்பு எண் |
|---|---|---|
| அங்கருந்து | அங்கிருந்து | 5 |
| அங்காலயும் | அந்தப்பக்கமும் | 6 |
| அடச்சி | அடைத்து | 48 |
| அடஞ்சாங்க | அடைந்தார்கள் | 19 |
| அடஞ்சி | அடைந்து | 18 |
| அடந்த | அடர்ந்த | 21 |
| அடியன்ன அடிச்சி | கடுமையாக அடித்து | 34 |
| அடைப்பை | ஒருவகைப் பை | 30 |
| அண்டக்கியிருந்து | அன்றிலிருந்து | 47 |
| அண்டிரவு | அன்று இரவு | 51 |
| அண்டு | அன்று | 32 |
| அண்டயில இருந்து | அன்றிலிருந்து | 10 |
| அதப்போல | அதைப்போன்று | 51 |
| அதன்ர | அதனுடைய | 52 |
| அதால | அதனால் | 68 |
| அதுக்கு | அதற்கு | 47 |
| அதுர | அதன் | 18 |
| அதோட | அத்துடன் | 23 |
| அப்ப | அப்போது | 4 |
| அப்பண்ட | தகப்பனுடைய | 11 |
| அப்பயும் | அப்போதும் | 54 |
| அப்பிடி | அப்படி | 30 |
| அப்பிடித்தான் | அப்படித்தான் | 44 |
| அப்பிடின்னு | அப்படி என்று | 66 |
| அப்பிடியே | அப்படியே | 19 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அமச்சாங்களாம் | அமைத்தார்களாம் | 26 |
| அமச்சி | அமைத்து | 12 |
| அமைச்ச | அமைத்த | 33 |
| அமைச்சி | அமைத்து | 26 |
| அம்மட | அம்மாவின் | 21 |
| அம்மண்ட | அம்மனின் | 26 |
| அம்மய்க்கி | அம்மாவுக்கு | 21 |
| அம்மாள்ர | அம்மாளின் | 28 |
| அரவம் இல்லாம | சத்தம் இல்லாமல் | 28 |
| அருளாண | அருள் ஆணை | 18 |
| அவ | அவள்/அவர் (பெண்) | 12 |
| அவக்கு | அவருக்கு (அவளுக்கு) | 36 |
| அவங்க | அவர்கள் | 1 |
| அவங்கட | அவர்களுடைய | 19 |
| அவங்கள் | அவர்கள் | 2 |
| அவங்களுக்கு | அவர்களுக்கு | 13 |
| அவடத்தில | அவ்விடத்தில் | 20 |
| அவட்ட | அவளிடம் | 37 |
| அவய | அவர்கள் | 6 |
| அவயள | அவர்களை | 69 |
| அவயள் | அவர்கள் | 55 |
| அவயிர | அவர்களுடைய | 9 |
| அவயளால | அவர்களால் | 29 |
| அவயளிட்ட | அவர்களிடம் | 29 |
| அவயளின் | அவர்களின் | 52 |
| அவடத்தில | அவ்விடத்தில் | 28 |
| அவயோட | அவரோடு (அவளோடு) | 20 |
| அவரிட்ட | அவரிடம் | 13 |
| அவரு | அவர் | 8 |
| அவருட | அவருடைய | 43 |
| அவரின்ர | அவருடைய | 40 |
| அவவிட்ட | அவரிடம் (அவளிடம்) | 7 |
| அவவ | அவரை (பெண்) | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அவவே | அவரே (அவளே) | 34 |
| அவவோட | அவரோடு (அவளோடு) | 7 |
| அவிச்சி | அவித்து | 61 |
| அவியளுக்கு | அவர்களுக்கு | 21 |
| அவைக்கி | அவளுக்கு | 6 |
| அழச்சாங்க | அழைத்தார்கள் | 17 |
| அழுதுத்து | அழுதுவிட்டார் | 19 |
| அழைக்கினம் | அழைக்கின்றார்கள் | 29 |
| அறிஞ்ச | அறிந்த | 61 |
| அறிஞ்சாரு | அறிந்தார் | 7 |
| அனுப்பினாரு | அனுப்பினார் | 7 |
| ஆக்கள்ர | ஆட்களின் | 50 |
| ஆசைப்படுறாரு | ஆசைப்படுகின்றார் | 28 |
| ஆச்சி | ஆட்சி | 13 |
| ஆத்தால | ஆற்றினூடாக | 27 |
| ஆத்திக்கு | ஆற்றுக்கு | 35 |
| ஆத்திலும் | ஆற்றிலும் | 46 |
| ஆத்துல | ஆற்றில | 24 |
| ஆம்புளைகளும் | ஆண்களும் | 2 |
| ஆரும் | யாரும் | 1 |
| ஆலோசிச்சி | ஆலோசித்து | 13 |
| ஆவெண்டுத்து | ஆவென்றவாறு | 32 |
| ஆன | யானை | 8 |
| ஆனகளயும் | யானைகளையும் | 8 |
| இஞ்ச | இங்கு | 61 |
| இஞ்சால | இந்தப்பக்கம் | 6 |
| இடமிரிக்கி | இடமிருக்கிறது | 14 |
| இடிச்சி | இடித்து | 61 |
| இண்ட | இன்று | 52 |
| இண்டக்கி | இன்றைக்கு | 14 |
| இதால | இதனால் | 64 |
| இந்தாள் | இவர் | 69 |
| இப்பயும் | இப்போதும் | 13 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இப்பிடி | இவ்வாறு | 20 |
| இர | இரை/உணவு | 28 |
| இரிக்கணும் | இருக்கவேண்டும் | 38 |
| இரிக்கி | இருக்கின்றது | 1 |
| இரிக்கிர | இரிக்கின்ற | 48 |
| இரிக்கிற | இருக்கின்ற | 48 |
| இருக்கக்குள்ள | இருக்கும்போது | 11 |
| இருக்கிறல்ல | இருப்பதில்லை | 20 |
| இரிந்திரிக்கி | இருந்திருக்கின்றது | 39 |
| இருந்த | இருந்தார்கள் | 10 |
| இருந்திக்கி | இருந்தது | 4 |
| இருந்திக்காம் | இருந்ததாம் | 70 |
| இருந்திக்கு | இருந்தது | 43 |
| இருந்திரிக்கி | இருந்துள்ளது | 35 |
| இருந்திச்சாம் | இருந்ததாம் | 11 |
| இருந்திருக்கு | இருந்திருக்கிறது | 26 |
| இருந்துவந்திக்கி | இருந்து வந்தது | 28 |
| இவங்கட | இவர்களின் | 2 |
| இவங்கள்ட | இவர்களிடம் | 31 |
| இவய | அவரை (அவளை) | 20 |
| இவயதான் | இவர்கள்தான் | 39 |
| இவயளோட | இவர்களோடு | 6 |
| இவரெண்டா | இவரென்றால் | 43 |
| உசத்தி | உயரமாக | 36 |
| உசிரோட | உயிருடன் | 42 |
| உடுமாம் | விடுமாம் | 10 |
| உட்டாவு | விட்டாள் | 19 |
| உட்டான் | விட்டான் | 42 |
| உட்டுத்தாரு | விட்டுவிட்டார் | 70 |
| உட்டுடுமாம் | விட்டுவிடுமாம் | 19 |
| உந்த | இந்த | 40 |
| உந்தனது | உன்னுடைய | 53 |
| உருவாகிக்கி | உருவானது | 11 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உழுந்து | விழுந்து | 69 |
| உழுந்துத்தாம் | விழுந்துவிட்டதாம் | 20 |
| உழுந்துத்து | விழுந்துவிட்டது | 17 |
| உள்ளவியளுக்கு | உள்ளவர்களுக்கு | 55 |
| உறுக்கிற | உறுக்குகின்ற | 35 |
| ஊட்ட | வீட்டிற்கு | 26 |
| ஊடு ஊடா | வீடுவீடாக | 45 |
| ஊடுகட்டி | வீடு கட்டி | 20 |
| எங்கட | எங்களுடைய | 11 |
| எடுத்திட்டு | எடுத்துக்கொண்டு | 20 |
| எடுத்துட்டுதாம் | எடுத்துவிட்டதாம் | 28 |
| எடுத்துத்து | எடுத்துக்கொண்டு | 50 |
| எடுத்துற்று | எடுத்துக்கொண்டு | 69 |
| எண்ட | என்னும் | 23 |
| எண்டதால | என்றதால் | 42 |
| எண்டதாலதானாம் | என்பதனாலேயேதான் | 65 |
| எண்டவரு | என்பவர் | 68 |
| எண்டா | என்றால் | 8 |
| எண்டாங்க | என்றார்கள் | 61 |
| எண்டானாம் | என்று கூறினானாம் | 51 |
| எண்டு | என்று | 1 |
| எண்டுதான் | என்றுதான் | 48 |
| எண்டுத்தானாம் | என்றானாம் | 22 |
| எண்டுத்து | என்று சொல்லிவிட்டு | 31 |
| எண்டுபோட்டு | என்று எண்ணிவிட்டு | 27 |
| எண்டுபோட்டுத்தானாம் | என்றுதானாம் | 44 |
| எண்றவராம் | என்பவராம் | 8 |
| எதுப்பு | எதிர்ப்பு | 43 |
| எப்பிடி | எப்படி | 9 |
| எம்பாங்க | என்பார்கள் | 59 |
| எழந்திட்டமே | இழந்துவிட்டோமே | 49 |
| எறச்சி | இறைச்சி | 69 |
| என்பவ | என்பவர் (பெண்) | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| என்றவர்ர | என்று கொல்லப்படுபவரின் | 28 |
| என்னண்டு | என்னவென்று | 21 |
| ஏக்காத | ஏற்காத | 48 |
| ஏத்துக்கொண்டு | ஏற்றுக்கொண்டு | 37 |
| ஏறக்கட்டி | வானம் இருளற்றுக் காணப்படுதல் | 16 |
| ஒடன | உடனே | 56 |
| ஒடனே | உடனே | 67 |
| ஒடைக்காம | உடைக்காமல் | 47 |
| ஒடைச்சி | உடைச்சி | 46 |
| ஒடைச்சிக்கொண்டு | உடைத்துக்கொண்டு | 51 |
| ஒடைஞ்சி | உடைந்து | 47 |
| ஒத்தரிட்டயும் | ஒருவரிடமும் | 19 |
| ஒருவ | ஒருவர் (ஒருவள்) | 20 |
| ஒருவர்ர | ஒருவருடைய | 8 |
| ஒருமுற | ஒருமுறை | 4 |
| ஒழும்பி | எழுந்து | 67 |
| ஒன்னையையும் | உன்னையையும் | 51 |
| ஓஞ்சாமி | ஆம்சாமி | 69 |
| ஓடிப்பெயித்தான் | ஓடிப்போய்விட்டான் | 34 |
| ஓல ஒண்ட | ஓலை ஒன்றை | 37 |
| கக்குற | கக்குகின்ற/வெளியிடுகின்ற | 28 |
| கடகிட | கடை ஏதும் | 56 |
| கட்டாடியார் | பூசை செய்பவர் | 58 |
| கட்டிக்கொண்டிருந்திக்கி | கட்டிக்கொண்டிருந்தது | 56 |
| கட்டித்து | கட்டிக்கொண்டு | 2 |
| கட்டினவியள் | கட்டினார்கள் | 40 |
| கட்டுற | கட்டுவது | 7 |
| கண்டுக்குட்டிகள | கன்றுக்குட்டிகளை | 21 |
| கப்பகனாரு | கப்புகனார் | 4 |
| கப்புகன்மாரு | கப்புகன்மார் | 5 |
| கத்தறயில | கத்தறையில் | 57 |
| கத்தித்து | கத்திக்கொண்டு | 20 |
| கரச்சல் | பிரச்சினை | 54 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கரச்சையில | கரச்சையில் | 20 |
| கருங்கொளவியள | கருங்குளவிகளை | 50 |
| கரைதட்டின | தரைதட்டியது | 23 |
| கவுத்து | கவிழ்த்து | 67 |
| களப்பாறினப்போ | களைப்பாறியபோது | 1 |
| களியாணம் | கலியாணம் | 20 |
| காச்ச | காய்த்த | 5 |
| காடுகள்ள | காடுகளில் | 66 |
| காட்டுறதில்லயாம் | காட்டுவதில்லையாம் | 44 |
| காணப்படுர | காணப்படும் | 47 |
| காணல்ல | காணவில்லை | 48 |
| காத்தோட | காற்றோடு/காற்றுடன் | 11 |
| காரியங்கள | மரணக் கிரியைகளை | 11 |
| காலம்புற | காலை | 5 |
| கால்ல | காலில் | 32 |
| கிடந்திச்சாம் | கிடந்ததாம் | 32 |
| கிட்ட | அருகில் | 13 |
| கிட்டக்கிட்ட | பக்கத்தில் பக்கத்தில் | 11 |
| கிள | கிளை | 1 |
| கிள | கிளை (மர) | 32 |
| குடபிடிச்சி | குடைபிடித்து | 68 |
| குடுக்காம | கொடுக்காமல் | 21 |
| குடுக்கொணும் | கொடுக்க வேண்டும் | 69 |
| குடுத்த | கொடுத்த | 19 |
| குடுத்தாங்க | கொடுத்தார்கள் | 2 |
| குடுத்தாராம் | கொடுத்தாராம் | 7 |
| குடுத்திட்டு | கொடுத்துவிட்டு | 30 |
| குடும்பத்தோட | குடும்பத்தோடு | 64 |
| கும்பிடுறதுக்கு | கும்பிடுவதற்கு | 30 |
| குழப்பல்லயாம் | குழப்பவில்லையாம் | 19 |
| குளத்திர | குளத்தின் | 14 |
| குளித்தில் | குளிர்த்தி | 36 |
| குறஞ்ச | குறைந்த | 64 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| குறிச்ச | குறித்த | 9 |
| கூத்திகன் | கூர்த்திகன் | 65 |
| கூப்புட்டிருக்காவு | கூப்பிட்டார் (கூப்பிட்டாள்) | 36 |
| கூறுவினம் | கூறுவார்கள் | 52 |
| கூறுனாவாம் | கூறினாராம் | 25 |
| கூனியில | கூனியில் | 31 |
| கேக்க | கேட்க | 12 |
| கேட்டுட்டு | கேட்டுவிட்டு | 67 |
| கேட்டிக்காம் | கேட்டதாம் | 26 |
| கேட்டிக்கி | கேட்டது | 36 |
| கேட்டொடனே | கேட்ட உடனேயே | 39 |
| கைமுழுத்தத்திற்கு | கைவிசேடத்திற்கு | 45 |
| கொடுக்கோணும் | கொடுக்கவேண்டும் | 62 |
| கொடுத்துட்டு | கொடுத்துவிட்டு | 37 |
| கொடுத்தினம் | கொடுத்தார்கள் | 31 |
| கொண்டந்த | கொண்டுவந்த | 21 |
| கொண்டை | கொன்றை | 27 |
| கொளத்த | குளத்தை | 47 |
| கொளமான | குளமான | 13 |
| கொளறுனாங்க | அழுதார்கள் | 16 |
| கொறயல்ல | குறையவில்லை | 22 |
| கொறைவு | குறைவு | 39 |
| கோயில | கோயிலை | 51 |
| கோயிலின்ர | கோயிலினுடைய | 52 |
| கோவமா | கோபமாக | 22 |
| சாகவச்சி | கொன்றுவிட்டு | 24 |
| சந்தானம் | சந்ததி | 3 |
| சவுத்த | சளைத்த | 67 |
| சனங்கள்ள | சனங்களில் | 33 |
| சாச்சியா | சாட்சியாக/அத்தாட்சியாக | 11 |
| சாதியினம் | சாதிக்காரர் | 29 |
| சாமான்கள | பொருள்களை | 20 |
| சில | சிலை | 25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சிலத | சிலவற்றை | 35 |
| சிலரு | சிலர் | 64 |
| சுடுரது | சுடுவது | 68 |
| சுத்தி | சுற்றி | 30 |
| சுறட்டய | சிரட்டையை | 68 |
| செஞ்ச | செய்த | 5 |
| செஞ்சவனாம் | செய்தவனாம் | 61 |
| செஞ்சாவு | செய்தார் (செய்தாள்) | 34 |
| செஞ்சானாம் | செய்தானாம் | 65 |
| செஞ்சி | செய்து | 12 |
| செஞ்சித்து | செய்துவிட்டு | 5 |
| செஞ்சிம் | செய்தும் | 70 |
| செண்ட | சென்ற | 15 |
| செத்த | செத்தை | 28 |
| செத்துத்திங்க | இறந்துவிட்டீர்கள் | 8 |
| செத்துப்பெயித்தாள் | இறந்துவிட்டாள் | 42 |
| செய்தவிய | செய்தவர்கள் | 36 |
| செய்யப்பட்டிருக்கி | செய்யப்பட்டுள்ளது | 7 |
| செய்யப்பட்டிருந்திச்சாம் | செய்யப்பட்டிருந்ததாம் | 26 |
| செய்யற | செய்கின்ற | 17 |
| செய்யிற | செய்கின்ற | 59 |
| செய்யிறதுக்காக | செய்வதற்காக | 64 |
| தெரிஞ்சிக்கி | தெரிந்தது | 57 |
| செரியான | கடுமையான | 45 |
| செரியான | சரியான | 67 |
| செல | சில | 54 |
| செலக்கி | சிலைக்கு | 39 |
| செல்ரதுக்காக | செல்வதற்காக | 48 |
| செல்லுவன் | ஒருவகை மீன் | 69 |
| செல்லுவாராம் | சொல்வாராம் | 8 |
| சென்ன | சொல்லிய / கூறிய | 15 |
| சென்னாங்களாம் | சொன்னாங்களாம் | 6 |
| சென்னாப்ப | சொன்னபோது | 21 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சேத்த | சேர்த்த/சேர்ந்த | 11 |
| சேந்தினம் | சேர்ந்தார்கள் | 29 |
| சேனக்குடிப்பு | சேனைக்குடியிருப்பு | 39 |
| சொன்னவாம் | சொன்னாராம் (பெண்) | 32 |
| சொன்னாவு | சொன்னார் | 6 |
| தங்கட | தங்களுடைய | 1 |
| தங்கியிருந்தொடனே | தங்கியிருந்தவுடனே | 39 |
| தட்டி உட்டுத்து | தட்டிவிட்டு | 28 |
| தட்டிக்காம் | தட்டியதாம் | 7 |
| தட்டினவராம் | தட்டினாராம் | 52 |
| தண்ட | தன்னுடைய | 22 |
| தர | தரை/நிலம் | 24 |
| தலக்கட்டா | அதிகாரமுள்ளவராக | 43 |
| தலயில | தலையில் | 35 |
| தன்னட்ட | தன்னிடம் | 38 |
| தாக்கினவாம் | தாக்கியதாம் | 52 |
| தாண்டுத்து | தாண்டுவிட்டது | 17 |
| தாண்டுபோகும் | மூழ்கிப்போகும் | 47 |
| திக்கதிபதியனாக | தேசத்திற்குத் தலைவராக | 26 |
| திகச்சி | திகைத்து | 4 |
| திகச்சிப்போய் | திகைத்துப்போய் | 32 |
| திண்ட | தின்றார்கள் | 61 |
| திண்டுத்தானுகள் | தின்றுவிட்டார்கள்/செலவழித்துவிட்டார்கள் | 43 |
| திரா | திராய் | 11 |
| திருவுழா | திருவிழா | 35 |
| திறக்கிறதுக்கு | திறப்பதற்கு | 58 |
| தின்றான் | தின்னுகின்றான்/சாப்பிடுகின்றான் | 69 |
| தீர்ந்து | முடிவெடுத்து | 3 |
| துறையால | நீர்வழிப்பாதை | 49 |
| தெக்கு | தெற்கு | 44 |
| தெடல்ல | திடலில் (மேடான இடம்) | 16 |
| தெரவு | துரவு/பூவல் | 16 |
| தெரிஞ்சிக்கி | தெரிந்தது | 36 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தெரிஞ்சிதாம் | தெரிந்ததாம் | 26 |
| தொத்து | தொற்று | 63 |
| தொர | துரை | 47 |
| தொரத்தி | துரத்தி | 50 |
| தொறமுகம் | துறைமுகம் | 39 |
| தோண்டி | தோன்றி/காட்சியளித்து | 25 |
| தோண்டிய | தோன்றிய | 18 |
| நடக்கொணும் | நடக்க வேண்டும் | 43 |
| நடந்திரிக்கி | நடந்துள்ளது | 36 |
| நடத்துறதுக்கு | நடப்பதற்கு | 2 |
| நடமுற | நடைமுறை | 45 |
| நற்பட்டிமுன | நற்பட்டிமுனை | 59 |
| நாகம்மட | நாகம்மாவின் | 21 |
| நாட்டப்பட்டிருந்திச்சாம் | நாட்டப்பட்டிருந்ததாம் | 26 |
| நிக்கிது | நிற்கின்றது | 8 |
| நிண்ட | நின்றன | 61 |
| நிண்டாக்களுக்கு | நின்றவர்களுக்கு | 26 |
| நிண்டிக்கி | நின்றது | 63 |
| நிலம வன்னிம | நிலைமை வன்னிமை | 39 |
| நிலயம் | நிலையம்/கட்டடம் கட்டுவதற்கு அளவு எடுத்தல் | 26 |
| நிலைப்படுத்தி | குடியமர்த்தி | 3 |
| நிறஞ்சி | நிறைந்து | 61 |
| நீதி மண்டம் | நீதிமன்றம் | 48 |
| நெறஞ்ச | நிறைந்த | 65 |
| நெறய | நிறைய | 32 |
| நெறம்பி | நிரம்பி | 16 |
| நெலையில | நிலையில்/நிலைமையில் | 47 |
| நேந்து | நேர்ந்து | 16 |
| பக்கலாய் | பக்கமாக | 3 |
| படல்லயாம் | அகப்படவில்லையாம் | 8 |
| படிப்பிச்சாங்க | படிப்பித்தார்கள் | 64 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| படுத்திட்டுதாம் | படுத்துவிட்டதாம் | 19 |
| பண்டிகளிட்ட | பன்றிகளிடம் | 46 |
| பத்தி | பற்றி | 14 |
| பத்தித்து | பற்றியது | 12 |
| பராமரிக்கிறங்க | பராமரிக்கின்றீர்கள் | 39 |
| பாஞ்சி | பாய்ந்து | 1 |
| பாத்திட்டு | பார்த்துவிட்டு | 6 |
| பாத்தப்ப | பார்த்தபோது | 1 |
| பாருங்களன் | பாருங்கள் | 8 |
| பாலமிர்தம் | பால்வளம் | 8 |
| பிலாப்பழம் | பலாப்பழம் | 5 |
| பிரிஞ்சி | பிரிந்து | 64 |
| புட்டி | பிட்டி(மண்மேடு) | 65 |
| புட்டும் | பிட்டும் | 61 |
| புடிக்கக்குள்ள | பிடிக்கும்போது | 8 |
| புடிங்கிட்டு | பிடுங்கிக்கொண்டு | 11 |
| புடிச்சி | பிடித்து | 8 |
| புடிச்சித்து | பிடித்துவிட்டது | 16 |
| புடிபட்டிரும் | பிடிபட்டுவிடும் | 44 |
| புத்தில | புற்றில் | 19 |
| புதிசா | புதிதாக | 27 |
| புள்ளைக்கி | பிள்ளைக்கு | 21 |
| புறக்கிக்கொண்டிருக்கக்குள்ள | எடுத்துக்கொண்டிருக்கும் வேளையில் | 36 |
| புறகு | பிறகு | 9 |
| புறகு பாத்தா | பிறகு பார்த்தால் | 26 |
| புறிச்சப்ப | பிரித்தபோது | 19 |
| புறிச்சி | பிரித்து | 7 |
| பூசிக்கப்படா | பூசிக்கக்கூடாது | 39 |
| பூசைக்கி | பூசைக்கு | 5 |
| பூந்துத்து | புகுந்துவிட்டது | 21 |
| பெஞ்சதாம் | பெய்ததாம் | 11 |
| பெய்த்து | போய்விட்டது | 69 |
| பெயித்தாவாம் | போய்விட்டாராம் | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பெரியாளாகித்தாம் | சாமத்தியம் அடைந்துவிட்டதாம் | 11 |
| பேந்து | பின்னர் | 29 |
| பேர்ல | பெயரில் | 23 |
| பேரு | பெயர் | 59 |
| பைய | மெதுவாக | 28 |
| பொங்கித்தாங்கோவன் | பொங்கித் தாருங்கள் | 41 |
| பொங்குறதுக்கு | பொங்குவதற்கு | 10 |
| பொஞ்சாதிமார் | மனைவிமார் | 45 |
| பொட்டகம் | பெட்டகம் | 48 |
| பொயித்தாம் | போய்விட்டதாம் | 44 |
| பொயித்தான் | போய்விட்டான் | 7 |
| பொயித்தாராம் | போய்விட்டாராம் | 11 |
| பொயித்து | போய்விட்டது | 12 |
| பொய்க்குத்தம் | பொய்க்குற்றம் | 41 |
| பொய்த்தாங்களாம் | போய்விட்டார்களாம் | 65 |
| பொய்த்தாவாம் | பொய்விட்டார் (போய்விட்டாள்) | 41 |
| பொய்த்தாராம் | போய்விட்டாராம் | 67 |
| பொலி | பலி | 70 |
| பொல்லாப்பும் | தீங்கும் | 47 |
| பொம்பளய | பெண்ணை | 43 |
| பொம்புள | பெண்பிள்ளை | 64 |
| பொம்புளட | பெண்ணின் | 36 |
| பொம்புளைகளும் | பெண்களும் | 2 |
| பொறகு | பிறகு | 7 |
| பொறந்தத்த | பிறந்ததை | 19 |
| பொறந்திக்கி | பிறந்தது | 37 |
| பொறந்திக்கு | பிறந்தது | 6 |
| பொறந்து | பிறந்து | 43 |
| போகக்குள்ள | போகும்போது | 11 |
| போகிச்சாம் | போனதாம் | 39 |
| போக்குறதுக்காக | போக்குவதற்காக | 18 |
| போடுறதுதான் | போடுவதுதான் | 43 |
| போட்டுத்து | போட்டுவிட்டு | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| போட்டுது | போய்விட்டது | 5 |
| போயி | போய் | 56 |
| போயிடாம | போய்விடாமல் | 1 |
| போயிட்டதால | போய்விட்டதால் | 2 |
| போயித்தாள் | போய்விட்டாள் | 6 |
| போயித்தாவு | போய்விட்டார் (போய்விட்டாள்) | 34 |
| போயித்து | போய்விட்டது | 6 |
| போயிரிக்காவு | போயுள்ளார் | 35 |
| போறதுக்கு | போவதற்கு | 5 |
| போயித்தாம் | போய்விட்டதாம் | 15 |
| போய்த்தாம் | போய்விட்டதாம் | 14 |
| போறண்டு | போவது என்று | 67 |
| போறதுக்கான | போவதற்கான | 18 |
| போறப்ப | போகின்றபோது | 31 |
| போனாப்ப | போனபோது | 21 |
| போனாரு | போனார் | 64 |
| மணியின்ரை | மணியினுடைய | 29 |
| மண்டத்தில | மன்றில் | 48 |
| மண்ணேரிமுனை | மண்முனை | 37 |
| மண்முன | மண்முனை | 22 |
| மண்முனைக்கி | மண்முனைக்கு | 20 |
| மதுரயயும் | மதுரையையும் | 41 |
| மயில் | மைல் | 52 |
| மரத்தின்ர | மரத்தின் | 52 |
| மழ | மழை | 11 |
| மறச்சாவு | மறைத்தார் | 19 |
| மறஞ்சி | மறைந்து | 52 |
| மறஞ்சிட்டாராம் | மறைந்துவிட்டாராம் | 13 |
| மறஞ்சிபொயிட்டுதாம் | மறைந்துபோய்விட்டதாம் | 10 |
| மறுகா | பின்னர் | 13 |
| மன்னனுகள | மன்னர்களை | 22 |
| மாத்திப்போட்டினம் | மாற்றிப்போட்டார்கள் | 29 |
| முகக்கள | முகக்களை | 28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முசிலிம் | முஸ்லிம் | 64 |
| முடிச்சித்து | முடித்துவிட்டு | 11 |
| முடிஞ்சும் | முடிந்தும் | 47 |
| முடியேல்ல | முடியவில்லை | 29 |
| முதல்ல | முதலில் | 39 |
| முற | முறை | 12 |
| முன்ன | முன்னர் | 9 |
| முன்னம் | முன்பு | 31 |
| முன்னவராய் | முன்னீடு உள்ளவராக/பிரதானமானவராக | 3 |
| மூடமூடயா | மூடைமூடையாக | 13 |
| மூண்டயும் | மூன்றையும் | 67 |
| மூத்தவவின் | மூத்தவரின் | 2 |
| மூலத்தானமாக | மூலஸ்தானமாக | 1 |
| மூலத்தான | மூலஸ்தான | 13 |
| மேக்கு | மேற்கு | 5 |
| மொகம் | முகம் | 6 |
| மொதல்ல | முதலில் | 56 |
| மொறய | முறையை | 39 |
| வச்சா | வைத்தார் (வைத்தாள்) | 70 |
| வச்சாரு | வைத்தார் | 4 |
| வச்சாவு | வைத்தார் | 19 |
| வச்சி | வைத்து | 5 |
| வச்சிட்டு | வைத்துவிட்டு | 28 |
| வச்சித்தாரு | வைத்துவிட்டார் | 26 |
| வடிஞ்சிக்காம் | வடிந்ததாம் | 38 |
| வடிவா | காரணமாக | 4 |
| வதனமார்ர | வதனமாரினுடைய | 10 |
| வந்தாப்ப | வந்தபோது | 4 |
| வந்தாவு | வந்தார் (வந்தாள்) | 21 |
| வந்திக்கி | வந்தது | 21 |
| வந்திரிக்கிறம் | வந்துள்ளோம் | 49 |
| வந்திருக்கிறாவு | வந்திருக்கிறார் (வந்திருக்கிறாள்) | 26 |
| வந்திருக்கொணும் | வந்திருக்கவேண்டும் | 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வந்திருந்திச்சாம் | வந்திருந்ததாம் | 28 |
| வந்தவவாம் | வந்தவராம் (பெண்) | 37 |
| வரக்க | வரும்போது | 23 |
| வரக்குள்ள | வரும்போது | 9 |
| வரேக்க | வரும்போது | 52 |
| வரேல்ல | வரவில்லை | 29 |
| வளச்சி | வளைத்து | 45 |
| வந்தாப்ப | வந்தபோது | 58 |
| வச்சா | வைத்தால் | 10 |
| வச்சாங்க | வைத்தார்கள் | 59 |
| வச்சிருந்த | வைத்திருந்த | 10 |
| வரக்குள்ள | வரும்போது | 60 |
| வத்திய | வற்றிய | 62 |
| வழிப்பாடு | வழி | 68 |
| வழம | வழக்கம் | 67 |
| வளத்தொடனே | வளர்த்தவுடனே | 59 |
| வளம | பழையபடி | 30 |
| வன்னிமைக்கிட்ட | வன்னிமையிடம் | 17 |
| வாடதான் | மணம்தான் | 38 |
| வாடியில | வாடியில் | 16 |
| வாத்திரிக்காங்க | வார்த்தார்கள் | 36 |
| வாரிச் சுறுட்டி எழும்பி | ஆர்வத்தோடு எழும்புதல் | 51 |
| வால | வாலை | 51 |
| வாழ்ந்தவங்க | வாழ்ந்தவர்கள் | 61 |
| வாழ்ந்தாவு | வாழ்ந்தார் | 2 |
| வாற | வருகின்ற | 64 |
| வாறதால | வருவதனால் | 65 |
| வாறவங்க | வருபவர்கள் | 64 |
| வானம்தட்டிர | வானளாவிய | 53 |
| விடுவிச்சி | விடுவித்து | 26 |
| விட்டுத்து | விட்டுவிட்டு | 15 |
| வில்ல | வில்வ | 20 |
| விளஞ்சிச்சி | விளைந்தது | 59 |

Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வீரமன | வீரமுனை | 70 |
| வீரமனையில | வீரமுனையில் | 6 |
| வெக்க | வைக்க | 17 |
| வெக்கா | வைக்கின்றாய் | 19 |
| வெக்கிற | வைப்பது | 49 |
| வெட்டினாப்ப | வெட்டிய வேளையில் | 38 |
| வெச்ச | வைத்த | 20 |
| வெச்சாராம் | வைத்தாராம் | 29 |
| வெச்சி | வைத்து | 16 |
| வெதப்பாங்க | விதைப்பார்கள் | 16 |
| வெய்க்க | வைக்க | 19 |
| வெய்க்கிறாங்க | வைக்கின்றார்கள் | 12 |
| வெய்ங்க | வைக்கவும் | 12 |
| வெய்ப்பாங்களாம் | வைப்பார்களாம் | 28 |
| வெளச்சல்தான் | விளைச்சல்தான் | 16 |

Class No:
Acc No 1648

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACC NO
1648
Class No.
Arasady Public Library
Municipal Council
Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் நாட்டார்கதைகள்

## கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்

கிராமியப் பண்பாட்டையும் கிராமிய வாழ்க்கை முறைகளையும் மிகுதியாகக் கொண்டிருக்கும் எமது மக்களின் வரலாற்றை மேலடுக்கு மக்களால் உருவாக்கப்பட்ட எழுத்துநிலை ஆவணங்களால் மட்டும் எழுத முடியாது. அவர்களின் சமூக வரலாற்றை எழுதுவதற்கு நாட்டார் வழக்காறுகளும் அவர்களது சமூக நினைவுகளுமே அடிப்படை ஆவணங்களாக அமைய முடியும். அந்தவகையில் இலங்கைத் தமிழர்களின் சமூக வரலாற்றை எழுதுவதற்கான வாய்மொழி ஆவணங்களின் ஒருசிறு பகுதியின் தொகுதியாகவே இந்நூல் வெளிவருகின்றது.

''கலாநிதி சந்திரசேகரம் வட்டார வழக்கிலுள்ள வாய்மொழி வரலாற்றுக் கதைகளின் ஊடாக பல புதிய செய்திகளைக் கூறியுள்ளார். இவை கிழக்கிலங்கையின் சமூக, பண்பாட்டு வரலாறு பற்றி இதுவரை சொல்லப்படாத அரிய வரலாற்றுத் தகவல்களாக உள்ளன. அவர் குறிப்பிடும் வாய்மொழிக் கதைகளில் வரும் சில வரலாற்றுச் சம்பவங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இலங்கை வரலாற்றில் நடந்த உண்மைச் சம்பவங்களுடன் தொடர்புடையவை. இவை தொடர்பான சில செய்திகள் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும், கோணேஸ்வரர் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இதனால் இவ்வாய்மொழிக் கதைகளை கிழக்கிலங்கையின் அரசியல், சமூக, வரலாறு பற்றிய ஆய்வுகளில் இருந்து புறந்தள்ள முடியாது. வரலாற்று இலக்கியங்களில், கோணேஸ்வரர் கல்வெட்டில் சொல்லப்படாத அரிய பல வரலாற்றுச் செய்திகளை வாய்மொழிக் கதைகளில் இருந்து அவர் எடுத்துக் காட்டியுள்ளார். இதன் மூலம் அவற்றின் உண்மைத் தன்மைகளைக் கண்டறிய வேண்டிய பொறுப்பையும் புலமையுடைய சமூக, வரலாற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார். இந்த நூல் கிழக்கிலங்கையின் பாரம்பரிய வரலாற்றிற்கு அதிலும் குறிப்பாக சமூக வரலாற்றிற்குப் புதுவெளிச்சமூட்டுவதாகப் பார்க்கின்றேன். பல துறை சார்ந்த எதிர்கால ஆய்வுகளுக்கு இந்நூல் ஒரு தொடக்கப் புள்ளியாகவும், அத்திவாரமாகவும் உள்ளது.''

- பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்



**சின்னத்தம்பி சந்திரசேகரம் :** இவர் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார். மட்டக்களப்பு வாய்மொழிப் பாடல்கள்: கட்டுப்பாடல்களின் ஆக்கமும் பயில் நிலையும், கிழக்கிலங்கை மரபுவழித் தமிழ் இலக்கியங்கள் ஆகிய ஆய்வு நூல்களை எழுதியுள்ளதுடன் பல நூல்களையும் பதிப்பித்துள்ளார். இவர் 'மொழிதல்' ஆய்விதழின் ஆசிரியர்களில் ஒருவராகவும் விளங்குகின்றார்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: நாட்டாரியல்/தமிழ் இலக்கியம்

ISBN 955659680-1

9789556596809

விலை ரூபா 600.00

#868

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org